# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக மாதாந்தப் பத்திரிகை மன்னா

பொழிவு : 09
குவிப்பு : 12
பக்கங்கள் : 20
விலை : ரூபா 25.00
டிசம்பர் 2006
(ISSN 1800-2641)

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Manna Office, Pastoral Centre, St. Sebestian's St. Mannar, Sri Lanka. T. P. 023-2232377




## அஞ்சாதீர்கள் இதோ உங்களுக்காக மீட்பர் பிறந்துள்ளார்! லூக். 1:10



Pope Benedict XVI in Germany during the World Youth Day, 2005

## கிறிஸ்மஸ் புதுவருட சிறப்புப் பொழிவு

### புதிய விடியல் புலரும் என நம்புவோம்...

நமது நம்பிக்கைகள்
நலிவடைந்து மெலிவடைந்து விட்டன.
அரசியல் சதுரங்க விளையாட்டில்
அடிபட்டுப்போனது
நம் தேவைகள் மட்டுமல்ல
நம் வாழ்வின் இருப்பும்தான்.

தாழ்ந்துபோன எம் வாழ்வை
தக்க வைப்பதே பெரும் பாடுதான்.
ஆழ்ந்த அனுதாபங்கள் மத்தியில்
வாழ்ந்துதான் ஆகவேண்டும் என்ற
நியதிக்குள் நாம்!

'காரிருளில் நடந்துவந்த மக்கள்
பேரொளியைக் கண்ட' பெருவிழாவிலே
புதிய விடியல் விரைவில் புலரும் என
நம்பிக்கையோடு காத்திருப்போம்!

வாழ வாழ்த்துக்கள் கூறும்,
அருட்பணியாளர் நேசன். (பதிப்பாசிரியர் மன்னா)



அன்பே உருவான இறைவனின்
அளப்பரிய தயவை
இந்தக் கிறிஸ்து
பிறப்புக் காலத்தில்
நினைவுகூர்ந்து
விழாக் கொண்டாடும்போது
'இறைவன் நம்மோடு' என்ற
உண்மையைத் திரும்பவும்
ஆழமாகச்
சொந்தமாக்கிக்கொள்வோம்.

மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை
மன்னார் ஆயர்.

### வாழ்த்துக்கள்..

உங்களுக்கு எமது அன்பும் அருளும்
சமாதானமும் நிறைந்த கிறிஸ்மஸ்
புது வருட நல்வாழ்த்துக்களை
தெரிவிக்கின்றோம்.
மன்னா பத்திரிகைப் பணியாளர்கள்.



மன்னார் மறைமாவட்ட
அருப்பணி திட்டமிடல்
மாநாட்டில்
குருமுதல்வர் அருட்பணியாளர்
விக்ரர் சோசை அடிகளார்
கொள்கை விளக்க உரை
ஆற்றுகின்றார்.







# மன்னா

## மனப்பொழிவு பதிப்பாசிரியர் பகர்வது

## மண்ணில் கால் பதிக்க விண்ணவர் விடுக்கும் அழைப்பு!

மனுக்குலம் என்றுமே கேட்டிராத ஒரு செய்தி! அது மக்களுக்கெல்லாம் மகிழ்ச்சியூட்டும் ஒரு மாபெரும் நற்செய்தி! இப்பூமிப் பந்தில் உள்ள கடையர்கள் என்று கணிக்கப்பட்ட இடையர்களுக்கே அந்தச் செய்தி வந்தது. அது தேனாக அவர்களுக்கு இனித்தது. இறைவன் மனிதனாகி இம்மண்ணில் தவழ்கின்றார் என்பதே அச்செய்தி.

இறைவன் மனிதனானார்! தெய்வீகம் மனுஷீகத்தோடு கலந்தது! இதைத்தான் யோவான் நற்செய்தி சொல்கிறது. "வாக்கு மனிதனானார். நம்மிடையே குடிகொண்டார்" (யோவான் 1:14) என்று.

காலம், இடம், வரலாறு இவை அனைத்தையும் கடந்தவர் இறைவன். அனைத்தையும் கடந்தவரான கடவுள் தன் மகன் இயேசு மூலம் ஒரு குறிப்பிட்ட கால, இட வரலாற்றுச் சூழ்நிலைக்குள் தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்டார். விண்ணவர் மண்ணிற்கு வந்தார். இந்த மண்ணின் மக்களோடு தன்னை இணைத்துக்கொண்டார். பிணைத்துக்கொண்டார். இயேசு பிறந்த நாள் - அது விண்ணகமும் மண்ணகமும் கைகுலுக்கிக் கொண்ட திருநாள்.

### மண்ணை முத்தமிட்ட மாமனிதர் இயேசு

முகவரி தெரியாத ஒரு குக்கிராமம் நசரேத்து. அரசியல் விழிப்புணர்வு இல்லாத ஒரு ஊர். பொருளாதாரத்தில் நலிவுற்ற சமூக அமைப்பு. நாகரீகத்தின் வாடைகூட பிரவேசிக்காத ஒரு பிரதேசம். மொத்தத்தில் அது ஓர் சாமானியர்களின் சமுதாயம். இந்தச் சமுதாயத்தில் இருந்துதான் இயேசு ஒரு பெண்ணிடம் பிறந்தவராகக் கருவானார் - உருவானார். இந்தப் பூமியில் கால் பதித்த இயேசு தான் வாழ்ந்த மண்ணைத் தொட்டார், தன் காலத்தில் வாழ்ந்த மக்களின் உள்ளங்களைத் தொட்டார், உணர்வுகளைத் தொட்டார்.

தான் இறைவனின் மகன் என்ற உணர்வில் மனித சமுதாயத்தில் இருந்து அவர் தன்னை அந்நியப்படுத்திக் கொள்ளவில்லை. சமூகத்தில் மேலான இடத்தைத் தேடி அவர் செல்லவில்லை. உயர்ந்த நாற்காலிகளை நாடி அவர் போகவில்லை. முரண்பாடுகள் மிக்க மதத் தலைமைப் பீடத்தின் செயற்பாடுகள் அனைத்திற்கும் தலையாட்ட அவர் தயாராய் இருக்கவில்லை. சடங்குகள், சம்பிரதாயங்கள் என்ற போர்வைக்குள் மனிதம் மிதிக்கப்படுவதைக் கண்டு அவர் மனமுருகினார். சமுதாயத்தால் ஒதுக்கப்பட்ட, ஓரங்கட்டப்பட்ட மக்கள் சார்பாக அவர் குரல் எழுப்பினார். இப்படியாக மனித வாழ்வுப் பிரச்சினைகள் அனைத்திற்கும் முகம் கொடுத்தவராக சமுதாய வீதியில் வலம் வந்தார். இயேசு இந்த மண்ணில் கால்பதித்த ஒரு இறை மனிதர். இந்த மண்ணை முத்தமிட்ட ஒரு மாமனிதர்.

### மக்களோடு எம்மையும் இணைத்துக் கொள்வோம்

இறைவன் மனிதனாகி இந்த மக்களோடு மண்ணோடு சங்கமித்தார். இது விசுவாச சத்தியம் மட்டுமல்ல, ஒரு வரலாற்று உண்மையும்கூட. அப்படியென்றால் மனிதர்களாகிய நாமும் இந்த மண்ணோடு - இந்த மக்களோடு இன்னும் இன்னும் அதிகமாக எம்மை இணைத்துக்கொள்ள வேண்டும் - பிணைத்துக்கொள்ள வேண்டும். இந்த மண்ணின் மக்களின் வாழ்வியற் சூழ்நிலைகளோடு நாமும் கலந்து கரைய வேண்டும். நாம் வாழும் காலத்து யதார்த்த சூழ்நிலைகளில் இருந்து நம்மை அறுத்துக்கொள்ளாமல் - அந்நியப்படுத்திக் கொள்ளாமல் நாம் அவதானமாக இருக்க வேண்டும். இதுவே இறைமகன் இயேசுவின் மனித அவதாரம் எமக்கு விடுக்கும் சவால். இதுவே மண்ணைத் தொட்ட விண்ணவர் எமக்கு விடுக்கும் அழைப்பு.


ஆகவே இந்த மண்ணில் இருந்து எழுகின்ற அவலக் கூக்குரலுக்கு நாம் செவிமடுக்க வேண்டும். உடைந்த உள்ளங்களின் சோகக் கதைகளை உற்றுக் கேட்க வேண்டும். குனிந்து இந்த மண்ணின் அருகே காதுகளை வைத்து இந்த மண்ணில் இருந்து எழும் ஏக்கப் பெருமூச்சுகளுக்கு - வேதனை முனகல்களுக்கு நாம் கவனமாய்க் காதுகொடுக்க வேண்டும். அப்போதுதான் இயேசுவின் மனிதவதாரம் எம்மைப் பொறுத்தவரை அர்த்தம் பெறும், ஆழம் பெறும்.

இந்த மண்ணில் கால் பதிக்காமல் ஆகாயத்தில் கூடு கட்டி அந்தரத்தில் வாழ்பவர்களுக்கு இயேசுவின் பிறப்பு அர்த்தமற்ற ஒன்று. இந்த மண்ணின் மக்களோடு உறவாடி அவர்களின் உணர்வுகளில் கலக்காதவர்களுக்கு இயேசுவின் பிறப்பு எங்கோ, எப்போதோ நடந்த ஒரு வரலாற்று நிகழ்வு மட்டுமே.

### உண்மை மனிதர்களாக மீண்டும் பிறப்போம்

இறைவன் மனிதனானார். உண்மைதான்! ஆனால் மனிதர்கள் என்று கூறிக்கொள்ளும் நாம் இன்னமும் உண்மையான மனிதர்களாக - மனிதத் தன்மை கொண்டவர்களாக மாறவில்லையே! இரத்தமும் சதையும் உள்ளவர்கள் எல்லோரும் உண்மையான மனிதர்களா? இல்லை. மனிதத் தன்மையும் மனித உணர்வுகளும் கொண்டவர்களே உண்மையான மனிதர்கள். நாமும் உண்மையான மனிதர்களாக மீண்டும் பிறப்போமா? இயேசுவின் வழியில் இந்த மண்ணில் கால்பதித்து மக்களோடு நடப்போமா?

மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும்வரை
அன்புடன், அருட்பணியாளர் நேசன்



## உள்நாடும் வெளிநாடும் வரவேற்க வாழ்த்துகின்றோம்!

இஸ்ராயேல் மக்கள் அன்று பசியாயிருந்தபோது "மன்னா" என்ற உணவினால் இறைவன் அவர்களைப் போஷித்தார் (வி.ப.16:43). இறையரசை இவ்வுலகில் நிலைநாட்ட வந்த யேசு ஆண்டவர் தன்னையே ஆன்மீக உணவாக அளித்து புதிய மன்னாவாக எம்மைப் போஷித்துக்கொண்டிருக்கிறார் (1 கொரி. 11: 23–24).

வளர்ந்துவரும் எமது மன்னார் மறைமாவட்ட மக்களின் ஆன்மீக வாழ்வுக்கு உயிரும் ஊட்டமும் அளித்துக்கொண்டிருக்கும் மன்னாவே உன்னை நாம் மனம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம். மறைமாவட்டம் மேன்மையுற, மாதாந்தம் மலருகின்ற மன்னாவே, மனிதம் வாழ்ந்திட உண்மையும் நீதியும் உரைத்திடும் மன்னாவே, மறையறிவும் நல்லறிவும் நலமாக எமக்களிக்கும் மகிமையுறு மன்னாவே, அருள்வாழ்வில் நாம் வளர அக்கறையாய் வழிகாட்டும் மன்னாவே, தரமான சிந்தனையை வடிவமைத்து வாசகரை மகிழ்விக்கும் மன்னாவே, உள்நாடும் வெளிநாடும் வரவேற்க நீ என் நாளும் வாழ வாழ்த்துகிறோம்.

துன்பச் சூழ்நிலையில் நாம் வாழ்ந்தாலும், இறை பராமரிப்பில் நாம் வாழ வேண்டும். "அஞ்சாதே நான் உன்னோடு இருக்கின்றேன்" (எசாயா 43:2–3) என்ற ஆண்டவரின் இந்த நம்பிக்கை அளிக்கும் வார்த்தைகளில் நாம் ஆறுதல் அடைவோம் என்று கூறிய மன்னா பதிப்பாசிரியரின் ஆசிரியத் தலையங்கச் செய்தியை இச்சமகால சூழ்நிலையில் மிகுதியும் வரவேற்கின்றோம். பதிப்பாசிரியர் பணியை மனதார வாழ்த்திப் போற்றிப் பாராட்டுகின்றோம்.

பொன்சிரிப்பும் புன்சிரிப்பும் முகமதில் மலர்ந்து தோன்ற, பாசமுடன் பேசிப் பணிகளைப் பகிர்ந்தளிக்கும் பண்பு அவருடையது. மறைத்தூது சார்பான பல பணிப்பொறுப்பை மகிழ்வாய் ஏற்று மன்னா பதிப்பகத்தில் பகல் இரவாய் பணிகளைச் செய்யும் ஆற்றல் மிகு நல்லறிவாளர் அவர்! நல்லாயன் யேசுவை நானிலத்தார் அறியச் செய்யும் பதிப்பாசிரியரின் பணியை நலமாக வாழ்த்திப் பாராட்டுகின்றோம்.

*பி. இராயப்பு, பொதுநிலையினர் பேரவையின்*
*விடத்தல்தீவு பங்கின் பிரதிநிதி*

# வாசகர் எண்ணங்கள்

### மாதம் தவறாமல் மலரும் மலர் நீ

மாதத்தில் ஒருமுறை எம் இல்லம் நோக்கி உலா வந்து கொண்டிருக்கும் மன்னாவே உனக்கு என் கோடான கோடி வந்தனங்கள். ஆயிரம் பூக்கள் பூத்தாலும் அதிலே மாதம் தவறாமல் மலரும் பூ நீதான் மன்னாவே. காற்றாக இருந்து உன்னையே நான் தினமும் சுவாசிக்கின்றேன். ஒவ்வொரு இதழிலும் தேன்போல பல சுவையான அம்சங்களைத் தருகின்றாய். இலை மறைக் காயாக இருந்து பங்குத்தளச் செய்திகளை மட்டுமல்ல நாட்டிலே நடக்கும் பலவிதமான செய்திகளையும் நீ பொழிந்துகொண்டு இருக்கிறாய்.

குறிப்பாக சொல்லப்போனால் அன்னை திரேசாவின் விறுவிறுப்புத் தொடர் என்னை மிகவும் கவர்ந்தது. வாசகர் எண்ணங்கள், பெரியப்பா பதில்கள், கொஞ்சம் சிரிங்க, குடும்பக் குவலயம், இலகுவான முறையில் நோயைப் போக்க மருத்துவப்பொழிவு, மறையை வளர்த்திட மறையறிவுப்பகுதி, விவிலியத்தை வாசிக்க விவிலியக் குறுக்கொழுத்துப்போட்டி, இளைஞர் பொழிவு என பல்வேறு அம்சங்களைத் தந்து கொண்டிருக்கும் மன்னாவே உனக்கு என் கோடான கோடி வந்தனங்கள் உரித்தாகட்டும். வாழ்க உன் பணி. தொடரட்டும் உன் சேவை!

*- பத்திநாதன் வதனா*
*வாழ்க்கைப்பெற்றான் கண்டல், அளவக்கை*

### தொடர்ந்து வா! விரைந்து வா!

உலகம் முழுவதும் உலாவிவரும் மன்னாவே, உனக்கு எனது உளம் கனிந்த மகத்தான நன்றிகள் உரித்தாகட்டும். நீ இறைவார்த்தையை வாசித்து அறிந்து அதன்படி வாழச்செய்கின்றாய். மறையறிவில் - இறையறிவில் எம்மை வளரச்செய்கின்றாய். மன்னாவே நீ தொடர்ந்து வா! விரைந்து வா! உன்னை வளர்த்தெடுப்பவர்களை தூய ஆவி வழிநடத்தவேண்டுமென வேண்டுகின்றேன்.

*- அ. மேரி நிரோஜினி*
*பனங்கட்டுக்கொட்டு மேற்கு, மன்னார்.*

### மனதில் இடம் பிடித்த மன்னாவே

இனிய மன்னாவே! நீ மன்னார் மண்ணில் மட்டுமன்றி பல இடங்களிலும் அதுவும் சிறுமியாகிய என் மனதிலும் இடம்பிடித்து விட்டாய்! இதற்குக் காரணம் இந்த வகையில் இதை அமைக்கும் அருட்தந்தை நேசன் அடிகளார்தான். நான் ஒவ்வொரு பத்திரிகையும் தவறாமல் பார்த்து நற்பயன் அடைவதுண்டு. நான் எழுதும் இதை நீங்கள் பிரசுரித்து என்னிடமுள்ள ஆற்றல்களை வளர்க்க வழிசமைக்க வேண்டுகின்றேன்.


*ஏ. டொறின் (நிஷானி), ஆண்டு 5 'பி',*
*மன்/ புனித சவேரியார் பெண்கள் கல்லூரி .*

## மன்னாவுக்கு எமது மனமார்ந்த நன்றிகள்!

### சித்த வைத்திய கலாநிதி செ. செல்வ மகேந்திரன்

எமது மன்னார் மறைமாவட்டத்தின் சிறப்புக்களையும் கத்தோலிக்க மதத்தின் உன்னதங்களையும் எம் மக்களுக்கும் வெளி மாவட்டங்களுக்கும் வெளி உலகிற்கும் எடுத்துக்கூற ஓர் சிறந்த, தரம்மிக்க பத்திரிகையாக எமது மன்னா இதழ் திகழ்கின்றது.

சுமார் 30 வருடத்திற்கு முன்பு **சத்தியவேத பாதுகாவலன்** என்ற பெயரில் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த கத்தோலிக்க பத்திரிகை ஊடாக பல சிறப்பு அம்சங்களை படிக்கக்கூடிய வாய்ப்பை எம் மக்கள் பெற்றுவந்தார்கள். காலப்போக்கில் அதன் வரவு குறைய மன்னார் மறைமாவட்டத்தின் **மன்னா** எனும் பெயரில் எல்லோருக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய வகையிலே மன்னார் மக்களின் மதப்பற்றை சிறந்த முறையில் எடுத்துக்காட்டக்கூடியதாக இம்மன்னா பத்திரிகை பொலிவுற்று விளங்குவதையிட்டு நாமும் எமது சித்த வைத்திய சமுதாயமும் பெருமிதம் அடைகின்றது. கத்தோலிக்க மாத இதழாக வெளிவரும் இப்பத்திரிகை எதுவித இடையூறும் இன்றி இன்னும் பல சிறப்புகளுடன் வெளிவர வேண்டும் என்பதே எமது அவா. கடந்த காலங்களிலே யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை, தென்இந்தியா மற்றும் வெளிநாடுகளில் இருந்து வந்த சமயக் குரவர்களே எமது மன்னார்ப் பகுதிக்கு சேவையாற்றியும், தேவாலயங்களில் திருப்பலியை ஒப்புக்கொடுத்தும் அதன் பங்குக் குரவர்களாகவும் செயற்பட்டு வந்துள்ளார்கள். அதில் எதுவித தவறும் இல்லை. இருந்தும்



தற்போது மன்னார் மாவட்டத்திலுள்ள சகல கிறிஸ்தவ தேவாலயங்களிலும் மன்னார் மாவட்டத்தை பிறப்பிடமாகக் கொண்ட சமயக் குரவர்களே பங்குத் தந்தையர்களாக தங்களின் பரித்தியாகத்தின் பிரதிபலிப்பாக எம் மக்களுக்கு நற்பணியாற்றி வருகின்றார்கள் என்பதை அறியும்போதும் எமது உள்ளம் பூரிப்படைகின்றது. தொடர்ந்து பல அருட்தந்தையர்கள் இறை பணியாற்ற ஒவ்வொரு வருடமும் திருநிலைப்படுத்தப்படுகிறார்கள். இது மிகவும் மகிழ்ச்சியான செய்தி என்பதுடன் எம் மன்னார் மக்களின் கத்தோலிக்க மதப்பற்றை வெளி உலகிற்கு எடுத்துக் காட்டக்கூடியதாக இருக்கின்றதல்லவா? இச்செய்திகள் மன்னா பத்திரிகை மூலமாகவே எமக்கு அறியக்கிடைப்பதையிட்டு நாம் மன மகிழ்ச்சியடைகின்றோம். அதேபோல் எம் மாவட்டத்தைச் சேர்ந்த அருட்சகோதரர்களும், அருட்சகோதரிகளும், தங்கள் துறவற பணிகளைப் பொறுப்பேற்று எம் மக்கள் மத்தியில் ஒரு மனநிறைவையும் விழிப்புணர்வையும் இறைபக்தியையும் ஏற்படுத்தி வருவதையிட்டு நாம் அனைவரும் மகிழ்ச்சி அடைய வேண்டும்தானே?

(தொடர்ச்சி 19ம் பக்கம்)

## கல்யாணச் சிரிப்பு(பூ)க்கள்

**இளைஞர்:** நீண்ட நாள் வாழ என்ன வழி?
**டாக்டர்:** திருமணம் செய்துகொள்.
**இளைஞர்:** திருமணம் செய்துகொண்டால் நீண்ட நாட்கள் வாழ முடியுமா டாக்டர்?
**டாக்டர்:** அப்புறம் அந்த எண்ணமே வராது

*******************

**பங்குத் தந்தை:** பழைய ஏற்பாட்டில் சிறந்த குடும்பம் எது?
**மாணவன்:** ஆதாம் - ஏவாள் குடும்பம்.
**பங்குத் தந்தை:** புதிய ஏற்பாட்டில் சிறந்த குடும்பம் எது?
**மாணவன்:** திருக்குடும்பம்
**பங்குத் தந்தை:** ஏன்?
**மாணவன்:** இரண்டு குடும்பங்களிலும் மாமியார் இல்லை.

*******************

**கணவன்:** அடுத்தப் பிறவியில் நான் கரப்பான் பூச்சியாக பிறக்கணும்
**மனைவி:** ஏன்?
**கணவன்:** நீ அதுக்குத்தானே பயப்படுற



**பேத்தி :** தாத்தா, ஏன் மணப்பெண் தன் தோழிகள் மத்தியில் அழுதுகொண்டு நிற்கிறது?
**தாத்தா:** தன் பெற்றோரையும், தோழிகளையும் விட்டுப்பிரியப் போறேனே என்ற வருத்தத்தில்...
**பேத்தி:** ஏன், மணமகன் தன் தோழர்களிடம் சந்தோசமாக சிரித்துப் பேசிக்கொண்டிருக்கிறார்?
**தாத்தா:** தான் சந்தோசமாக சிரித்துப் பேச கடைசி வாய்ப்பு என்பதால்.

*******************

**ஜான்:** வட இந்தியக்காரங்க கல்யாணத்துல திருமணத்துக்கு முன்னாடி மாப்பிளையை ஏன் குதிரை மேல ஏத்துறாங்க?
**ஜோ:** தப்பி ஓடிப்போக கடைசி வாய்ப்பு.

### மன்னார் மறைமாவட்ட அருட்பணித் திட்டமிடல் மாநாடு - 2006

# புதிய ஆண்டில் செப வாழ்வை ஆழப்படுத்த திடசங்கற்பம்

## செப வாழ்வை வலுப்படுத்த பல்வேறு நிலைகளில் செயற்திட்டங்கள்

### கிறிஸ்தவ வாழ்வின் முதிர்ச்சியை நோக்கிய நீண்ட பயணத்தில் அனைவரையும் அணிதிரள அழைப்பு!

மன்னார் மறைமாவட்ட அருட்பணி திட்டமிடல் மகாநாடு கடந்த டிசம்பர் மாதம் 4ம், 5ம், 6ம் திகதிகளில் மன்னார் மறைக்கல்வி நிலையத்தில் நடைபெற்றது. *"அன்பிய வாழ்வினூடாக கிறிஸ்தவ வாழ்வின் முதிர்ச்சியை நோக்கி"* என்ற மையப்பொருளில் இம்மகாநாடு நடைபெற்றது.

எதிர்வரும் புதிய ஆண்டில் மன்னார் மறைமாவட்டத்தில் செப வாழ்வை ஊக்கப்படுத்தும் வகையில் செயற்திட்டங்கள் இம்மகாநாட்டில் தீட்டப்பட்டன. மறைமாவட்டத்தில் பணியாற்றும் குருக்கள், துறவற சபையின் பிரதிநிதிகள், துறைசார் வல்லுனர்கள், ஆணைக்குழுக்களின் பிரதிநிதிகள், பக்திச்சபைகளின் பிரதிநிதிகள், பங்குப் பிரதிநிதிகள் என 125 பேர் இம்மகாநாட்டில் கலந்துகொண்டனர்.

தொடக்க நிகழ்வு

டிசம்பர் 4ந் திகதி 6.00 மணிக்கு மன்னார் பேராலயத்தில் ஆரம்ப செபவழிபாட்டுடன் இம்மகாநாடு ஆரம்பமாகியது. பேராலயத்தில் இருந்து மாநாட்டுப் பிரதிநிதிகள் பவனியாக மறைக்கல்வி நிலையத்தை நோக்கி வந்தனர். மறைக்கல்வி நிலைய வளாகத்தில் திருத்தந்தையின் கொடி, இலங்கைத் திருச்சபையின் கொடி, மன்னார் மறைமாவட்டக் கொடி ஆகியவை ஏற்றப்பட்டன.

பின்னர் அனைவரும் மாநாட்டு மண்டபத்தினுள் நுழைந்தனர். வரவேற்பு உரையை மாநாட்டின் செயற்குழு உறுப்பினர்களில் ஒருவராகிய அருட்பணியாளர் பா. கிறிஸ்து நேசன் அவர்கள் நிகழ்த்தினார். மாநாட்டின் தொடக்க உரையை மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் நிகழ்த்தினார். அதன் பின்னர் ***ஊற்றுக்குத் திரும்புவோம்*** என்ற தலைப்பில் ***அன்பிய வாழ்வுக்காய் எம்மை மீளவும் அர்ப்பணிப்போம்*** என்ற தொனிப்பொருளில் மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணியாளர் விக்ரர் சோசை அடிகளார் ஆரம்பக் கருத்துரை வழங்கினார். அதைத்தொடர்ந்து கேள்விக் கொத்துக்களின் அடிப்படையில் பங்குகளில் இருந்து பெறப்பட்ட அறிக்கைகளின் தொகுப்பு சமர்ப்பிக்கப்பட்டது. இராவுணவுடன் அன்றைய நிகழ்வுகள் நிறைவுபெற்றன. (தொடர்ச்சி 19ம் பக்கம்)



மகாநாட்டின்போது அருட்சகோதரி கிறிஸ்ரபெல் (தி.கு.), வவுனியா கல்வியியல் கல்லூரி தலைவர் திரு. பேனாட், மூத்த மறையாசிரியர் திரு. சவிரி ஆகியோர் உரையாற்றுகின்றனர். மகாநாட்டு பங்காளர்களும், குழு ஆய்வில் ஈடுபடும் ஒரு குழுவினரையும் காண்கின்றீர்கள்.

## கேரளா டிவைன் தியான இல்லத்தில் அத்துமீறல்! மத வெறியர்களின் சதியே காரணம்!

ஆசியாவிலேயே மிகப்பெரிய கத்தோலிக்க தியான இல்லமும், உலகிலேயே மிகப்பெரிய தியான இல்லங்களில் ஒன்றுமான கேரளாவின் சாலக்குடியிலுள்ள டிவைன் தியான இல்லத்தில் இந்தியாவின் ஆறு மொழிகளில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்துகொள்ளும் விதத்தில் ஒவ்வொரு வாரமும் தியானம் நடத்தப்பட்டு வருகின்றது.

இதில் அயல் நாட்டு மக்கள் உட்பட மத வேறுபாடின்றி பல்வேறு மக்கள் கலந்துகொள்கின்றனர். இங்கே மன நோயாளிகள், போதைக்கு அடிமையானவர்கள் மற்றும் அனாதைகளுக்கு அடைக்கலம் கொடுத்து சிறப்பாகக் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். உடல், உள்ள நோய்களிலிருந்து விடுதலைப் பெற்ற மக்கள் தங்கள் சாட்சிய வாழ்வை சமூகத்தில் எடுத்துரைக்கின்றனர்.

இப்படிப்பட்ட பாரிய மாற்றங்களைப் பொறுத்துக்கொள்ளாத சுயநலவாதிகளும், மதவெறியர்களும் பலவாறாக இந்தத் தியான இல்லத்திற்கு தொல்லைகள் கொடுக்கத் துவங்கியுள்ளனர். அங்கு ஊழியம் செய்த ஒரு பெண்ணை தங்கள் வசம் வைத்துக் கொண்டு கொலை, கற்பழிப்பு, அன்னிய முதலீடு மோசடி போன்ற பழிகளைச் சுமத்தி உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தனர். அடிக்கடி நீதிமன்றத்தைத் தொந்தரவு செய்து நீதிமன்ற உத்தரவுப்படி உயர் பொலீஸ் அதிகாரி உட்பட்ட குழுவுடன் மருத்துவக் குழுக்களும் சென்று தீவிர பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இப்படிப்பட்ட அத்துமீறலுக்கு தியான இல்ல பொறுப்பாளர்கள் முழு ஒத்துழைப்புக் கொடுத்தனர். ஆனாலும், இதுவரை சரிவரக் குற்றம் நிரூபிக்கப்படவில்லை. இதன் இயக்குனரிடம் பத்திரிகையாளர்கள் தொடர்புகொண்டபோது அவர் குறிப்பிட்டதாவது, "எங்களது இல்லத்திலுள்ள எல்லா நோயாளிகளையும் இங்கே சந்திக்க வரும் தகுதியான மருத்துவர்கள் வழியாகச் சிறப்பான மருத்துவம் அளிக்கிறோம். எங்களிடம் குறையிருந்தால்தானே நாங்கள் ஒத்துழைப்பு கொடுக்காது மறைப்போம். தற்போது எழுந்திருக்கும் குற்றச்சாட்டுகளுக்கு மதவெறியர்களின் சதியே காரணம்" என்றார்.

இறையாண்மை மிக்க பாரம்பரியமான இடத்தில் நடந்த இந்த அத்துமீறலை கேரளா அரசியல்த் தலைவர்கள், ஆயர்கள், மதத் தலைவர்கள் மற்றும் பொதுமக்கள் கண்டித்து வருகின்றனர்.


### மன்னார் மறைமாவட்டத்தில்

## சமூகத் தொடர்பு அருட்பணி மையம்

### மேதகு ஆயர் அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது

மன்னார் மறைமாவட்டத்தில் சமூகத் தொடர்பு அருட்பணி மையம் கடந்த டிசம்பர் மாதம் 6ம் திகதி மன்னார் நகரின் பெற்றா புனித சூசையப்பர் வீதியில் உள்ள கட்டிடத்தில் திறந்துவைக்கப்பட்டது. மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் இம்மையத்தை திறந்துவைத்தார்.

இம்மையத்தின் இயக்குனர் அருட்பணியாளர் பெனோ அலெக்சாண்டர் சில்வா அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். இம்மையத்தில் இளைஞர் பணிக்குழுவுக்கான அலுவலகம், திருப்பாலத்துவ சபைக்கான அலுவலகம், திருச்சபையின் திருமண நீதிமன்ற விவகார அலுவலகம் போன்றவையும் தற்காலிகமாக இயங்க உள்ளன. இம்மையத்தின் ஊடாக பல்வேறு சமூகத் தொடர்பு முயற்சிகள் எதிர்வரும் காலங்களில் மேற்கொள்ளப்பட உள்ளன.



## பங்குத்தளச் சங்கதிகள்

### ஆலயப் பணிகளில் அதிக காலம் உழைக்கின்றவர்களின் விபரம் சேகரிப்பு

பதினைந்து வருடங்களுக்கு மேலாக பங்குகளில் பணிபுரியும் சங்கிஸ்தம், சக்கிறிஸ்ரியன், இசைக்கருவிகள் மீட்டுவோர் போன்றவர்களின் விபரங்களை மன்னார் மறைமாவட்ட திருவழிபாட்டு ஆணைக்குழு திரட்டி வருகின்றது.

மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த பங்குகளில் மேலே குறிப்பிடப்பட்ட பணியாளர்கள் இருப்பின் அவர்களின் விபரங்களை ஆணைக்குழு இயக்குனர் அருட்பணியாளர் பி. கிறிஸ்துநாயகத்திடம் வழங்குமாறு சம்மந்தப்பட்டவர்கள் கேட்கப்படுகின்றார்கள்.

### உயிலங்குளப் பங்கில் மாமக்கள் தின நிகழ்வுகள்

போருக்குப் பலியான மக்களை நினைவுகூர்ந்து வருடா வருடம் கொண்டாடப்படுகின்ற மாமக்கள் தின நிகழ்வானது இவ்வருடம் உயிலங்குளம் பங்கில் டிசம்பர் மாதம் 4ம் திகதி நடைபெற்றது. அன்றைய தினம் டொன் பொஸ்கோ சபையைச் சேர்ந்த சேவியர் அடிகளாரும், உயிலங்குளம் பங்குத்தந்தை வசந்தகுமார் அடிகளாரும் சேர்ந்து கூட்டுத்திருப்பலியை நிறைவேற்றினார்கள்.

விசேடமாக திருப்பலி வேளையில் மாமக்களை நினைவு கூரும்முகமாக அவர்களின் உறவினர்கள் தீபமேற்றி பவனியாக வந்து அவர்களுக்காகச் செபித்தார்கள். அதனைத் தொடர்ந்து காலை உணவும், அவர்களுக்கான அன்பளிப்பும் வழங்கப்பட்டது.

*தகவல்: செ. சசிஸ்ரெலா, காத்தான்குளம்.*

### க.பொ.த உயர்தர கிறிஸ்தவ பாடத்தில்

## கிறிஸ்தவ நாகரீகம் என்ற பாடத்தை இணைக்க அனுமதி

**மன்னார் ஆயர் ஊடாக மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளரின் முயற்சி வெற்றி**

க.பொ.த உயர்தர சமய பாடங்களில் இந்து சமய பாடத்தில் *இந்து நாகரீகம்* என்ற பாடமும் இஸ்லாமிய சமய பாடத்தில் *இஸ்லாமிய நாகரீகம* என்ற பாடமும் பல ஆண்டுகளாகச் சேர்க்கப்பட்டுள்ளது. ஆனால் கிறிஸ்தவ பாடத்தில் மட்டும் கிறிஸ்தவ நாகரீகம் என்ற பாடம் இதுவரை சேர்க்கப்படாமல் இருந்தது. இதன் காரணமாக கிறிஸ்தவ பாடத்தைத் தமது பரீட்சைக்காக எடுக்கும் மாணவர்களின் சற் ஸ்கோர் (Z Score) புள்ளியில் வீழ்ச்சி காணப்பட்டு வந்த நிலமை பல ஆண்டுகளாக உணரப்பட்டு வந்தது.

இந்நிலையை அவதானித்த மன்னார் வலயக் கிறிஸ்தவ பாட ஆசிரிய ஆலோசகர் திருமதி பயஸ் றதி பீரிஸ், அவர்களும் மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. எம். ஏ. றெவல் அவர்களும், மன்னார் மறைக்கல்வி நிலைய இயக்குனர் அருட்பணியாளர் பா. கிறிஸ்து நேசன் அடிகளாரும் இணைந்து இலங்கை முழுவதும் உள்ள கிறிஸ்தவத்தைப் பாடமாகக் கற்கும் மாணவர்கள் பல ஆண்டுகளாக எதிர்கொண்டுவந்த இந்தப் பிரச்சினையைத் தீர்க்கும்பொருட்டு புதிய முயற்சியில் இறங்கினர்.

கிறிஸ்தவ பாடத்தில் கிறிஸ்தவ நாகரீகம் என்ற பாடத்தையும் இணைக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி இதற்கான அனுமதியை இலங்கை ஆயர் மன்றத்திடம் இருந்து பெற்றுத் தரும்படி மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகையிடம் வேண்டுகோள் விடுத்தனர். ஆயர் அவர்கள் இதுதொடர்பாக இலங்கை ஆயர் மன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவந்ததை அடுத்து ஆயர் மன்றத்தின் கோரிக்கையின் பேரில் இலங்கை தேசிய கல்வி நிறுவகம் இதற்கான அனுமதியை வழங்கியுள்ளது.

2007ம் ஆண்டில் இருந்து க.பொ.த உயர்தர கிறிஸ்தவ பாடத்தில் கிறிஸ்தவ நாகரீகம் என்ற பாடமும் இணைக்கப்படவுள்ளதாக தேசிய கல்வி நிறுவகத்தின் சமய பாடப் பிரிவின் தலைமை திட்டமிடல் அலுவலர் அருட்பணியாளர் ஜெயலத் பலகல்ல தேசிய கத்தோலிக்க கல்வி அலுவல்களுக்கான இயக்குனர் அருட்பணியாளர் ஐவன் பெரேராவுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை முழுவதும் உள்ள கிறிஸ்தவத்தைப் பாடமாகக் கற்கும் மாணவர்கள் பல ஆண்டுகளாக எதிர்கொண்டுவந்த இந்தப் பிரச்சினையைத் தீர்க்கும்பொருட்டு இப்பாரிய முயற்சியில் அதிக அக்கறையோடும் விடாமுயற்சியோடும் ஈடுபட்ட மன்னார் வலயக் கல்விப் பணிமனையினருக்கும் மன்னார் ஆயர் அவர்களுக்கும் மன்னா தனது நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றது.

### வங்காலையில் முன்பள்ளிப் பாடசாலைகள் இணைந்து நடத்திய ஒளிவிழா

வங்காலையில் உள்ள 5 முன்பள்ளிப் பாடசாலைகள் இணைந்து நடாத்திய ஒளிவிழாவானது கடந்த டிசம்பர் 10ம் திகதி சிறப்பாக நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக பங்குத் தந்தை அருட்பணியாளர் ஞானப்பிரகாசம் அடிகளாரும், உதவிப் பங்குத்தந்தை டக்லஸ் லோகு அடிகளாரும் கலந்துகொண்டனர். மழலைச் சிறார்களின் நாட்டுக்கூத்தும், வில்லுப்பாட்டும் சிறப்பாக அமைந்திருந்து எல்லோரதும் பாராட்டைப் பெற்றது. பெற்றோர் சார்பாக ஆசிரியை திருமதி. றிமான்ஸ் பவானி டலிமா அவர்களால் நன்றியுரை வழங்கப்பட்டு விழா முடிவுற்றது.

*தகவல்: ஆசிரிய ஆலோசகர் திருமதி பெப்பி விக்ரர் லெம்பேட்*

## மன்னார் மறைக்கல்வி நிலையத்தினால் நடாத்தப்பட்ட
# வருடாந்த மறைக்கல்வித் தேர்வு

## 98 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள் விபரம்

| பங்கு | பாடசாலை | பெயர் | தரம் | புள்ளி |
|---|---|---|---|---|
| மன்னார் | மன்/ புனித சவேரியார் பெ. தே. பா. | ஏ. ரி. கிறிஸ்ரெலா திவ்யா | 03 | 100 |
| மன்னார் | மன்/ புனித சவேரியார் பெ. தே. பா. | எச். ஆன் கஸ்மிதா | 03 | 98 |
| மன்னார் | மன்/ புனித சவேரியார் பெ. தே. பா. | ஜி. லூட்டஸ் லினுகா பெரேரா | 03 | 98 |
| மன்னார் | மன்/ புனித சவேரியார் பெ. தே. பா. | எஸ். எஸ். மேரி நிதுஷா | 03 | 98 |
| மன்னார் | மன்/ புனித சவேரியார் பெ. தே. பா. | எஸ். ஆன் மதுஷானி | 03 | 98 |
| மன்னார் | மன்/ புனித சவேரியார் பெ. தே. பா. | பி. ஆன் நித்தியா | 03 | 98 |
| மன்னார் | மன்/ புனித சவேரியார் பெ. தே. பா. | எவ். எக்ஸ். அனிஷா | 04 | 98 |
| மன்னார் | மன்/ புனித சவேரியார் பெ. தே. பா. | எச். ஆர். ஆன் பியந்தி | 05 | 98 |
| மன்னார் | மன்/ புனித சவேரியார் பெ. தே. பா. | ஈ. ஆர். எஸ். எம். மோனிஷா | 05 | 98 |
| மன்னார் | மன் / புனித சவேரியார் பெ. தே. பா. | ஏ. பவுஸ்ரீனா | 06 | 98 |
| மன்னார் | மன்/ புனித சவேரியார் பெ. தே. பா. | எவ். ஏ. சிபோறின் | 08 | 98 |
| மன்னார் | மன்/ புனித சவேரியார் ஆ. தே. பா. | கே. றியன் ஜதுர்சன் | 03 | 98 |
| மன்னார் | மன்/ புனித சவேரியார் ஆ. தே. பா. | பி. பெற்சன் மத்தியூ | 04 | 100 |
| மன்னார் | மன்/ சாந்திபுரம் அ.த.க.பாடசாலை | சு. சுலக்ஷனா | 03 | 98 |
| மன்னார் | மன்/ சாந்திபுரம் அ.த.க.பாடசாலை | ஜெ. றொ. ஆன்மேரி | 03 | 99 |
| பேசாலை | மன்/ பத்திமா ம.ம.வி | ஏ. மிதுர்சன் கூஞ்ஞ | 03 | 100 |
| பேசாலை | மன்/ பத்திமா ம.ம.வி | பி. ஏ. ஸ்ரெபான் றெவல் | 03 | 100 |
| பேசாலை | மன்/ பத்திமா ம.ம.வி | ஆர். றொகான்சன் | 08 | 98 |
| பேசாலை | மன்/ சென் மேரீஸ் பெண்கள் வித். | யோ. விக்றிம் றியலின் குரூஸ் | 03 | 98 |
| பேசாலை | மன்/ சென் மேரீஸ் பெண்கள் வித். | சே. மேரிஸ்மைலி | 04 | 98 |
| பேசாலை | மன்/ சென் மேரீஸ் பெண்கள் வித். | அ. நிலுக்சினி குரூஸ் | 04 | 98 |
| பேசாலை | மன்/ சென் மேரீஸ் பெண்கள் வித். | ஜெ. மரின் நிகிலா | 04 | 98 |
| பேசாலை | மன்/ சென் மேரீஸ் பெண்கள் வித். | ஜே. டிவைனி | 04 | 98 |
| பேசாலை | மன்/ சென் மேரீஸ் பெண்கள் வித். | றே. மேரி றோஸ்னி | 04 | 98 |
| பேசாலை | மன்/ சிறுத்தோப்பு அ.த.க.பா. | செ. நிதர்சன் | 05 | 98 |
| வங்காலை | மன்/ புனித ஆனாள் ம.ம.வி | ம. தெரசிற்றா றெவல் | 03 | 98 |
| வங்காலை | மன்/ புனித ஆனாள் ம.ம.வி | அ. ஜேன் பிரான்சிஸ்கா வாஸ் | 03 | 98 |
| வங்காலை | மன்/ புனித ஆனாள் ம.ம.வி | டே. ஆன் டிசாந்தினி சோசை | 05 | 98 |
| வங்காலை | மன்/ புனித ஆனாள் ம.ம.வி | லீ. பெலிக்ஸ் லாவண்யா குருஸ் | 05 | 98 |
| கற்கிடந்தகுளம் | மன்/ கட்டையடம்பன் றோ.க.த.க.பா | சி. சாளினி | 04 | 100 |
| கற்கிடந்தகுளம் | மன்/ கட்டையடம்பன் றோ.க.த.க.பா. | பி. டினோஜினி | 04 | 98 |
| கற்கிடந்தகுளம் | மன்/ கற்கிடந்தகுளம் றோ.க.த.க.பா. | லெ. தர்ஷிக்கா | 03 | 98 |
| கற்கிடந்தகுளம் | மன்/ கற்கிடந்தகுளம் றோ.க.த.க.பா. | ச. சுவர்ணா | 03 | 98 |
| நானாட்டான் | மன்/ நானாட்டான் ம. வி | இ. மேரி நிவோண்சி | 03 | 100 |
| நானாட்டான் | மன்/ சூரியகட்டைக்காடு றோ.க.த.க.பா | ம. சாள்ஸ் அன்ரனி | 03 | 100 |
| நானாட்டான் | மன்/ நானாட்டான் ம. வி | ச. ஜெனோஸ் பிறினோஷன் | 03 | 98 |
| நானாட்டான் | மன்/ நானாட்டான் ம. வி | ஸ். பிறிஜித் சுசித்திரா | 03 | 98 |
| நானாட்டான் | மன்/ நானாட்டான் ம. வி | ச. லினற் நிலோஜனா | 04 | 98 |
| வவுனியா | வவு/ இறம்பைக்குளம் ம.ம.வி | க. வனஜா | 04 | 98 |
| வவுனியா | வவு/ வவுனியா தமிழ் ம.ம.வி | யே. சாள்ஸ் | 08 | 98 |
| கோமரசன்குளம் | வவு/ பெரியகோமரசன்குளம் ம.வி | அ. ஜொகான் | 06 | 98 |
| கோமரசன்குளம் | வவு/ சிறிநாகராஜா வித்தியாலயம் | அ. அருள் யூட்சன் | 07 | 99 |
| தோட்டவெளி | மன்/ தோட்டவெளி அ.த.க.பாடசாலை | சூ. டெனிஸ்ரா வேஜினி | 03 | 98 |
| தோட்டவெளி | மன்/ தோட்டவெளி அ.த.க.பாடசாலை | மெ. மெக்ரலோஸ் பேடினற் | 03 | 98 |
| தோட்டவெளி | மன்/ தோட்டவெளி அ.த.க.பாடசாலை | கொ. டயானா | 03 | 99 |
| தோட்டவெளி | மன்/ கரிசல் றோ.க.த.க.பாடசாலை | ஸ். யூஜின் றெனுலா | 03 | 98 |
| கீளியன்குடியிருப்பு | மன்/ துள்ளுகுடியிருப்பு றோ.க.த.க. பா. | சூ. மேரி றொசாந்தினி | 04 | 98 |
| பள்ளிமுனை | மன்/ புனித லூசியா ம. வி | செ. அஜய் | 03 | 98 |
| பள்ளிமுனை | மன்/ புனித லூசியா ம. வி | ச. அன்ரன் ஜெல்சிஸ்ராஜ் | 04 | 98 |
| முருங்கன் | மன்/ பரிகாரிகண்டல் அ.த.க.பாடசாலை | பே.ச. பிரவின் டானியேல் | 03 | 98 |
| வஞ்சியன்குளம் | மன்/ புதுக்கமம் அ.த.க.பாடசாலை | பே. ஆன் நிவேதனா | 03 | 98 |
| வஞ்சியன்குளம் | மன்/ வஞ்சியன்குளம் றோ.க.த.க.பா. | அ. செலின் அன்ரனிற்றா | 03 | 98 |
| அளவக்கை | மன்/ மடுக்கரை அ.த.க.பாடசாலை | ச. ஜோசப் டிலைக்சன் | 04 | 98 |
| அளவக்கை | மன்/ பொன்தீவுகண்டல் றோ.க.த.க.பா. | அ. டெல்சியா | 03 | 98 |
| அளவக்கை | மன்/ வாழ். பெற்றான்கண்டல் றோ.க.த.க.பா | ம. பிறேமியன் | 03 | 99 |
| அரிப்பு | மன்/ அரிப்பு றோ.க.த.க.பாடசாலை | இ. றியோடிக் கிறிஸ்ரலன் குரூஸ் | 03 | 98 |
| அரிப்பு | மன்/ அரிப்பு றோ.க.த.க.பாடசாலை | பி. மேரி டிவ்னா லியோன் | 08 | 98 |
| உயிலங்குளம் | மன்/ உயிலங்குளம் றோ.க.த.க.பாடசாலை | செ. ஜெனுஷன் | 03 | 98 |
| உயிலங்குளம் | மன்/ உயிலங்குளம் றோ.க.த.க.பாடசாலை | ஞா. வினோதர்சி | 03 | 99 |
| உயிலங்குளம் | மன்/ உயிலங்குளம் றோ.க.த.க.பாடசாலை | ஸ். ஆன்டி லூசியா | 03 | 99 |
| உயிலங்குளம் | மன்/ உயிலங்குளம் றோ.க.த.க.பாடசாலை | சு. மரிய சீலி | 03 | 98 |
| உயிலங்குளம் | மன்/ இலகடிப்பிட்டி றோ.க.த்.க.பாடசாலை | செ. லுசிற்றா | 03 | 98 |
| உயிலங்குளம் | மன்/ பறப்பான்கண்டல் றோ.க.த.க.பா | மி. நிறோஜன் குரூஸ் | 05 | 100 |
| விடத்தல்தீவு | மன்/ தூய யோசவ்வாஸ் ம.வி | அ. [illegible] | 03 | 98 |
| தேவன்பிட்டி | மன்/ வெள்ளாங்குளம் அ.த.க.பாடசாலை | சி. [illegible] | 03 | 99 |

# நீங்காத நினைவுகள்

## 31ம் நாள் நினைவு



மலர்வு 13 - 03 - 1935

உதிர்வு 27 - 11 - 2006

### செ. கிறிஸ்தோகு (அந்தோனி)
### (பாவிலுபட்டான்கட்டி குடியிருப்பு)

குடும்பத்தின் ஒளியாய், பாசத்தின் உறைவிடமாய், செல்வங்கள் பத்தும் நல்மணம் வீச வளர்த்திட்ட எம் பாசமிகு தந்தையே, நாட்கள் 31 உருண்டோடியும் உம் முகம் காணாமல் நாம் பரிதவிக்கின்றோம். அப்பா, எம்மை எல்லாம் விட்டுப்பிரிய எப்படி மனம் வந்ததுவோ? நீங்கள் எமக்காகப் பட்ட பாடுகளை நாம் எப்படி மறவோம்? உங்களது ஆன்மா இன்பமாக வாழ எந்நாளும் வேண்டுகின்றோம். *உங்கள் பிரிவால் துயருறும், மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.*

## 6ம் ஆண்டு நினைவு



மலர்வு 21 - 11 - 1984

உதிர்வு 23 - 12 - 2000

### லூ. கிளமென்ற் டிலீஷியன்

அன்புத் தம்பியே! ஆண்டுகள் ஆறு சென்றும் உன் நினைவை மறக்க முடியவில்லை. இந்தச் சிறுவயதில் எங்களை எல்லாம் விட்டுப்பிரியக் காரணம்தான் என்னவோ? ஐயா! உனது சிரித்த முகமும் குழந்தைத்தனமும் என்றும் எங்களது நெஞ்சைவிட்டு அகலாது. உனது ஆன்மா விண்ணுலகில் இறைவனோடு என்றென்றும் இன்பமாக ஒன்றித்திருக்க தினமும் இயேசுவைப் பிரார்த்திக்கின்றோம்.

*உனது பிரிவால் துயருறும*
*அன்பு அம்மா, அப்பா, அக்கா, மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள்*

# இளம் மங்கையரே!
## திருச்சிலுவை கன்னியர் சபை
# உங்களை அழைக்கிறது!



சுவிற்சலாந்து நாட்டில் பிரான்சியப் புரட்சியின் விளைவாக சமுதாயத்தில் ஏற்பட்ட ஒழுக்கச் சீர்கேடுகளை சீர்செய்யும் நோக்குடன், 1844ம் ஆண்டு அருட்தந்தை தியோடோசியஸ் புளோரன்ரனி என்பவரால் மென்சிங்கன் என்ற கிராமத்தில் இச்சபை ஆரம்பிக்கப்பட்டது. இதற்காக அன்னை பேர்ணாடாவை தலைவியாகக்கொண்ட மூவர் குழுமம் இவரின் வழிநடத்தலில் இறைவனுக்குத் தம்மை முழுவதும் அர்ப்பணித்து அன்றைய சமூகத் தேவைகளான கல்வி, சமூக சீர்திருத்தும் சுகநலப்பணி ஆகியவற்றில் தம்மை ஈடுபடுத்தினார்கள். "சிலுவை இரட்சணியம்" என்பதை விருதுவாக்காகவும், ஒரு முழுமனித வளர்ச்சிக்கான உருவாக்கல் மூலம், அதாவது உடல், உள, அறிவியல், ஆன்மீக வாழ்விற்கு நம்பிக்கை ஊட்டி சமூக மேம்பாட்டிற்கு பங்களிப்பு செய்வதைத் தனி வரமாகக்கொண்டும் இன்று உலகில் நான்கு கண்டங்களில் எமது சபை பணியாற்றி வருகின்றது. அத்துடன் ஆண்டவர் இயேசுவின் வார்த்தையில் ஆழமான நம்பிக்கை கொண்டு பட்டி தொட்டி எங்கும் பணி புரிந்து திருச்சபையின் வளர்ச்சியிலே பங்கெடுத்து வருகின்றது.

1930ம் ஆண்டு முதற்தடவையாக ஐரோப்பிய நாட்டு திருச்சிலுவை அருட்சகோதரிகள் அன்றைய யாழ் ஆயர் அதி வண. கியோமர் ஆண்டகையின் வேண்டுகோளுக்கு இணங்க, இந்தியா கேரளா எனுமிடத்திலிருந்து வருகை தந்து யாழ்ப்பாணம் ஊர்காவற்துறை எனும் இடத்தில் அமைந்துள்ள அரச வைத்தியசாலையில் தம் பணியை ஆரம்பித்தனர். படிப்படியாகத் திருச்சிலுவைக் கன்னியரின் பணித்தளங்கள் யாழ்ப்பாணம், கொழும்பு, கண்டி, பதுளை, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மறைமாவட்டங்களில் பரந்து விரிந்துள்ளது.

### இளம் மங்கையரே!

இறை மனித அன்பை ஆழமாக அனுபவித்து ஆக்கமுள்ள ஆன்மீகத்தை அர்த்தமுடன் வளர்த்திட, மனித மாண்பு நலிந்து அழிந்து போகும் இப்போர்க்கால சூழலிலே மனிதனை மனிதனாக மதித்து அன்பின் அரசைக் கட்டி எழுப்பவும், உண்மைக்கும் நீதிக்கும் சான்று பகரும் கருவிகளாகத் திகழவும், சமூக ஒழுக்க சீர்கேடுகளை எமது வாழ்வாலும், வார்த்தையாலும் சீர்ப்படுத்தவும், நற்செய்தி நாளும் நவின்றிட, பிறர் அன்பில் உயிருள்ள சான்றாய்த் திகழ்ந்திட, தன்னலமற்ற தியாக உள்ளத்துடன் பணியாற்ற ஆழ்மனதின் ஒலி உங்களுக்கு கேட்கின்றதா? மக்களின் கூக்குரல் செவிகளில் விழுகின்றதா? அப்படியாயின் எமது சபையில் இணைந்துகொள்ள எம்மோடு தொடர்புகொள்ளுங்கள்!

*எமது முகவரி : தேவ அழைத்தல் வழிகாட்டி,*
*திருச்சிலுவை கன்னியர்சபை,*
*29, நொறிஸ் அவனியு, கொழும்பு 8.*

# நன்றி நவில்கின்றோம்!



எங்கள் அன்புத்தந்தை திரு. ஜே. ஜே. டலிமா அவர்களின் திடீர் மறைவை அறிந்து வருகைதந்து தமது அனுதாபங்களையும், ஆறுதல்களையும் தெரிவித்தவர்களுக்கும், மற்றும் உள் நாட்டிலும், வெளிநாட்டிலுமிருந்து தொலைபேசி மூலம் அனுதாபங்களைப் பகிர்ந்துகொண்டோர் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். விசேடவிதமாக சிறப்புத் திருப்பலியில் கலந்துகொண்ட மேதகு மறைமாவட்ட ஆயர், திருப்பலியை ஒப்புக்கொடுத்த குருமுதல்வர், முன்னாள் குருமுதல்வர், மறைமாவட்டக் குருக்கள், மலாசால் அருட்சகோதரர்கள், அமலமரித்தியாகிகள் சபைக் குருக்கள், அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள் ஆகியோருக்கு நன்றி சொல்லுகின்றோம்.

மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளர், பிரதிக்கல்விப் பணிப்பாளர், உதவிக்கல்விப் பணிப்பாளர், கோட்டக்கல்விப் பணிப்பாளர், மடு வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர், மன்/ புனித ஆனாள் ம.ம.வி, மன்/ முருங்கன் ம.ம.வி, மன்/ புனித சவேரியார் பெண்கள் கல்லூரி, மன்/ உயிலங்குளம் வித்தியாலயம், மன்/ உயிர்த்தராசன் குளம் வித்தியாலயம், மன்/ சென் மேரிஸ் பெண்கள் கல்லூரி போன்ற பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவ மாணவிகள், மன்னார் கல்வி வலய பாடசாலைகளின் அதிபர் ஆசிரியர்கள், மன்னார் மாவட்டச் செயலக அதிகாரிகள், கணக்காளர்கள், திட்டப்பணிப்பாளர், திணைக்களத் தலைவர்கள், வங்கி முகாமையாளர்கள், மன்னார், நானாட்டான், முசலிப் பிரதேச செயலாளர்கள், அதிகாரிகள், மன்னார் மாவட்டத்தில் பணிபுரியும் கிராம அதிகாரிகள், தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் முகாமையாளர், நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள், நியாப் திட்டப் பணிப்பாளர், முன்னாள் காணித் திணைக்கள ஆணையாளர், வேல்ட் விஷன் மற்றும் அரச சார்பற்ற நிறுவனத் தலைவர்கள், சட்டத்தரணிகள், பங்குமக்கள், வங்காலைப் பங்குத்தந்தை, ஆலய அருட்பணிச் சபையினர், கிராம சங்கங்களின் அமைப்புக்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், பக்திச் சபைகள், மாவட்டத்தின் பல்வேறு கிராமங்களிலிருந்தும் பெருந்திரளாகக் கலந்துகொண்ட ஒவ்வொரு நல்லுள்ளங்களுக்கும், அன்னாரது நண்பர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், குடும்ப நண்பர்கள், Matric Constraction (Pvt) Ltd, - கொழும்பு நிறுவனத்தைச் சேர்ந்தோர், உளவள குடும்ப நலப்பணியக இயக்குனர், பணியாளர்கள் அனைவர்க்கும் எம் உளப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தகவல் : திருமதி ஜே. ஜே டலிமா, ஓய்வுபெறும் ஆசிரியை, வங்காலை - 3.**

**தொலைபேசி எண்கள் - 060 - 2230111, 060 - 2230072**

(இது ஒரு கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம் - மன்னா நிர்வாகம்)

### இறைவனின் இரக்கத்தாலும் புனித ஆட்சிப்பீடத்தின் ஆதரவாலும்
### மன்னார் ஆயர் இராயப்பு யோசேப்பு ஆகிய நான்
### மன்னார் மறைமாவட்ட இறைமக்களுக்கு எழுதும்

# திருவருகைக்காலத் திருமடல்



கிறிஸ்து இயேசுவில் அன்புமிக்க சகோதர சகோதரிகளே!

## முன்னுரை:

இறைமகன் கிறிஸ்துவின் மனித அவதாரப் பெருவிழாவைக் கொண்டாட நாம் ஆயத்தமாகிக்கொண்டிருக்கின்றோம். கடவுள் மனிதனைத் தேடிவந்து மனிதன்மேல் அவர் கொண்ட அன்பை வெளிப்படுத்திய மாபெரும் மறையுண்மையையே, நாம் இந்த விழாவிலே நினைவுகூருகின்றோம். இதைப்பற்றி நற்செய்தியாளர் யோவான் எழுதிய முதல் கடிதத்தில், "நாம் வாழ்வு பெறும் பொருட்டுக் கடவுள் தம் ஒரே மகனை உலகிற்கு அனுப்பினார். இதனால் கடவுள் நம்மீது வைத்த அன்பு வெளிப்பட்டது" (யோவான் 4:9) என எழுதுகிறார். அன்பே உருவான இறைவனின் அளப்பரிய தயவை நாங்கள் இந்தக் கிறிஸ்து பிறப்புக் காலத்தில் நினைவுகூர்ந்து விழாக்கொண்டாடும்போது "இறைவன் நம்மோடு" என்ற உண்மையைத் திரும்பவும் ஆழமாகச் சொந்தமாக்கிக்கொள்வோம்.

## சமகாலச் சூழல்:

வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்கள்மேல், நியாயமற்ற வகையில், அர்த்தமற்றதோர் போர் திணிக்கப்பட்டு வருகின்றது. அப்பாவி மக்கள் கொன்று குவிக்கப்பட்டும், பட்டினிச்சாவை எதிர்கொண்டும், இடம்பெயர்ந்து அலைக்களிக்கப்பட்டும், சொல்லொணாத் துன்பங்கள் ஊடாகப் பயணித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆட்கடத்தல், பணம் பறித்தல் என்பன விஷ்வரூபமெடுத்துள்ளன. மேலும் மனித சுதந்திரமும், மனித உரிமைகளும் மதிக்கப்படாததோர் சூழலில் பயத்தோடும். அச்ச நடுக்கத்தோடும் பலர் வாழ்ந்து வருகின்றனர். இப்படிப்பட்ட ஒரு இருளுக்குள்ளே நாம் வாழ்ந்துவரும் இவ்வேளையில், "காரிருளிலே நடந்துவரும் மக்கள் பேரொளியைக் காணவும், சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர்மேல் சுடரொளி உதிக்கச் செய்யவும்" (எசாயா 9:2) தோன்றிய இறைமகனின் வருகை எம் மத்தியில் சமாதானச் சூரியனை உதிக்கச் செய்வதாக.

இச்சந்தர்ப்பத்தில், எம் நாட்டில் இடம்பெற்று வரும் அர்த்தமற்ற அழிவுக் கலாச்சாரமும் அதன் அனைத்து நடவடிக்கைகளும் முற்றாக நிராகரிக்கப்பட வேண்டுமென்றும், சகலவிதமான வன்முறைச் செயற்பாடுகளையும் கைவிட்டுவிட்டு, அரசியற் பேச்சுவார்த்தைக்கு ஏற்றதோர் புறச்சூழலை, போர்நிறுத்த ஒப்பந்தத்தை கடைப்பிடிப்பதன் வழி ஏற்படுத்த வேண்டுமென்றும், அரசியல் பேச்சுவார்த்தை மூலமே எமது தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமென்றும், சம்பந்தப்பட்ட அனைவரையும், உலகிற்கு வாழ்வளிக்க வந்த இறைமகன் இயேசுக் கிறிஸ்துவின் பெயரால் கேட்டுநிற்கின்றோம்.

இதேவேளையில் நமது நாட்டில் அரசியல் கலந்துரையாடல் மூலம் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டுமெனத் தளராமல் உழைக்கின்ற அனைவரையும் நன்றியோடு நினைவுகூருகின்றோம். உள்நாட்டிலுள்ள சமாதான ஆர்வலர்களாக அர்ப்பணிப்போடும் இதய சுத்தியோடும் உழைக்கின்ற அனைவரையும் உளமாரப் பாராட்டுகின்ற அதேவேளையில், சர்வதேச சமூகத்தின் சார்பாக பொறுமையோடும் அர்ப்பணிப்போடும் தூய உள்ளத்தோடும் உழைத்து வருகின்ற அனுசரணையாளரான நோர்வே அரசாங்கத்தையும், இணைத்தலைமை நாடுகளையும், கண்காணிப்புக் குழுவினரையும் நாம் இந்நாட்களிலே சிறப்பாக நினைவுகூர்ந்து, சமாதானத்தினதும் சாந்தியினதும் கருவிகளாக இவர்கள் ஆற்றும் தமது பணியிலே மேலும் ஆழமாக ஈடுபட, அமைதியின் மன்னராக உதித்த ஆண்டவரிடம் உருக்கமாக வேண்டுவோம்.

நாமும் நமது பங்குகளிலே வெள்ளிக்கிழமை தோறும் செய்யும் சிறப்பு சமாதான வழிபாடுகளை ஆர்வத்தோடு தொடர வேண்டுமெனவும், ஒவ்வொரு முதல் வெள்ளிக்கிழமையையும், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் அனைவரும் நற்கருணை நாதரின் முன் "உபவாச வேண்டுதல்" தினமாக அனுசரிக்க வேண்டுமெனவும் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

## எமது விசுவாசப் பயணம்:

மன்னார் மறைசாட்சிகளின் இரத்தத்தில் வேரூன்றிய எமது விசுவாசம், எதையும் தாங்குகின்ற இருதயத்தை நமக்குக் கொடுத்து, மேற்படி வேதனை சோதனைகள் மத்தியிலும் நம்மைத் தாங்கி நிற்கின்றது. இந்த விசுவாசப் பயணத்திலே, மறை மாவட்டத்தின் வெள்ளி விழா யூபிலியைத் தொடர்ந்து, புதியதோர் சகாப்தத்திலே காலடி எடுத்து வைத்துள்ளோம். இந்நிலையில், எமது இலட்சியப் பயணமாகிய அன்பிய வாழ்க்கைக்கு, ஆர்வத்துடன் எம்மை மீள அர்ப்பணிப்போம். நற்செய்தியை எமது அன்றாட வாழ்வின் ஒளியாகவும், விளக்கமாகவும் அனுபவிக்க; ஒருவர் ஒருவரோடு தோழமை உறவிலே வாழ; யேசுவின் வழியில் பணிவிடை புரிய; திருச்சபையின் அன்றாட வாழ்விலும், வளர்ச்சியிலும் பங்கேற்க; ஆர்வமுள்ள நற்செய்தி அறிவிப்பாளர்களாக நாம் திகழ, அன்பிய வாழ்க்கை முறை வழிசெய்கின்றது என திருத்தந்தையர்களும், ஆயர்களும் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தைத் தொடர்ந்து, வலியுறுத்தி வருவதை, இவண் நினைவூட்ட விரும்புகிறேன்.

இந்த அன்பிய வாழ்க்கை முறையை, நமது மறைமாவட்டம் கடந்த 13 ஆண்டுகளாகத் தனது தொடர் முயற்சியாக முன்னெடுத்து வருகிறது. விண்ணரசின் விழுமியங்களால் ஆட்கொள்ளப்பட்டதோர் "கிறிஸ்தவ முதிர்ச்சியை" நோக்கிய இந்த முயற்சியை, மேலும் ஆழப்படுத்த; சென்ற வாரத்தில் எமது மறைமாவட்டத்தின் அருட்பணித் திட்டமிடல் மகாநாடு கூட்டப்பட்டது. இதில் 2007ம் ஆண்டு, தனித்தும் குடும்பமாகவும் மேற்கொள்ள வேண்டிய செப வாழ்வை முன்னுரிமைப்படுத்திச் செயற்பட வேண்டுமென்றும், தொடர்ந்து வரும் நான்கு ஆண்டுகளிலும் முறையே இறைவார்த்தை, நற்கருணை, பகிர்தலும் பணியேற்பும், நற்செய்தி அறிவிப்பு என்பவை மையப்படுத்தப்பட்டு முன்னெடுக்கப்பட வேண்மென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்காக, அருட்பணித்திட்டமிடல் மகாநாடு தீர்க்கமான சில வழிமுறைகளை முன்வைத்துள்ளது. இந்த வழிகளிலே இவ்வாண்டிலே செப வாழ்வை, தூய ஆவியானவரின் துணைகொண்டு முன்னெடுக்க, மறைமாவட்டத்தின் திட்டங்கள், ஒவ்வொரு பங்கிற்கும் இவ்வாரத்தில் அனுப்பி வைக்கப்படும். அதன் அடிப்படையில், பங்கை மையப்படுத்திய இவ்வாண்டிற்கான "செப வாழ்வுத்திட்டத்தை" பங்குத்தந்தையரின் வழிகாட்டலில், ஒவ்வொரு பங்கும் வகுத்து, மார்கழித் திங்கள் 20ம் திகதிக்கு முன், எமக்கு அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுநிற்கின்றேன். 2007ம் ஆண்டு தைத்திங்கள் தொடக்கம் முன்னெடுக்கப்பட உள்ள இத்திட்டத்தின் பயணத்தில், தவறாது சேர்ந்துகொள்ளுமாறு, இறைமக்களாகிய உங்கள் அனைவரையும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

## முடிவுரை:

மறை மாவட்ட மட்டத்திலே, மேற்படி பணியை முன்னெடுத்து, பங்குகளுக்கு வழிகாட்டும் உடனடிப்பணியை மேற்கொள்ள, மறை மாவட்ட மேய்ப்புப்பணிக் குழு ஒன்று தற்காலிகமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வருட நடுப்பகுதியில் மறை மாவட்ட மேய்ப்புப் பணிப் பேரவை, திருச்சபையின் விதிமுறைக்கேற்ப அனைவருடைய ஒத்துழைப்பையும் பெற்று நிரந்தரமாக ஏற்படுத்தப்படும்.

திருச்சபையின் அன்னையும், தம் மகன் யேசுவுக்குச் செபிக்கக் கற்றுக்கொடுத்தவரும், மன்றாடும் திருச்சபைக்கு எடுத்துக்காட்டாக விளங்குபவருமான எம் தாய் மரியா, நம் ஒவ்வொருவரையும்: தனித்தும், குடும்பமாகவும், அன்பியமாகவும் செபவாழ்வுக்குள் நடத்திச் செல்வாராக.

கிறிஸ்துவில் உங்கள்மேல் பற்றுள்ள
மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை
மன்னார் ஆயர்

## 2008 அக்டோபரில் உலக ஆயர் மாமன்றக் கூட்டம்!

'திருச்சபையின் வாழ்விலும், செயற்பாட்டிலும் இறைவனின் வார்த்தை' என்னும் தலைப்பில் விவாதிக்க அக்டோபர் 2008 இல் உலக ஆயர் மாமன்றக் கூட்டத்திற்குத் திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அழைப்பு விடுத்துள்ளார். இதற்கான அறிவிப்பை, அக்டோபர் 6ம் திகதி வத்திக்கான் வெளியிட்டது.

2008 அக்டோபர் 5 முதல் 26 வரை இம்மாநாடு வத்திக்கானில் நடைபெறும். உலகின் அனைத்துக் கண்டங்களிலிருந்தும் வரும் சுமார் 250 ஆயர்களின் மன்றத்தைத் திருத்தந்தை துவங்கி வைப்பார். இதற்கு முந்தைய மன்றக் கூட்டங்களின் குறைபாடுகள் குறித்து ஆயர்கள் தெரிவித்த அதிருப்தியை நன்கு அறிந்த திருத்தந்தை கடந்த 2005 அக்டோபரில் கூடிய கடைசிக் கூட்டத்தில் சில மாற்றங்களை அறிமுகப்படுத்தினார். அதன் நிகழ்ச்சிகளை நான்கு வாரத்திலிருந்து மூன்று வாரமாகக் குறைத்ததோடு, ஒவ்வொரு வேலை நாளின் இறுதியிலும் ஒரு மணி நேரம் தங்கு தடையின்றி பங்கேற்பாளர்கள் விவாதம் நிகழ்த்த வழி செய்துள்ளார்.

திருத்தந்தை முதன்முறையாக இந்த ஆயர்கள் மாமன்றக் கூட்டத்தை கூட்டியிருப்பதோடு, அதற்கான தலைப்பையும் அவரே முடிவு செய்துள்ளார். உலக ஆயர் குழுவோடு திருத்தந்தை மேற்கொண்ட விவாதங்கள், ஆயர்களின் பதிலுரைகளை கடந்த ஆயர் மன்றம் தெரிவு செய்த 15 உறுப்பினர் குழு வரிசைப்படுத்தியதன் அடிப்படையிலும் திருத்தந்தை இம்முடிவை எடுத்திருக்கலாம் என்று வத்திக்கான் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உலக ஆயர்களுக்கும், திருத்தந்தைக்கும் இடையே கூடுதல் நெருக்கமான உறவுகளை வலுப்படுத்துவதற்காக ஒரு நிரந்தரமான விவாத அமைப்பாக 1965இல் அன்றைய திருத்தந்தை ஆறாம் பவுல் இந்த ஆயர் மாமன்றத்தை உருவாக்கினார். 2008இல் நடைபெறும் ஆயர்களின் மாமன்றம் 12வது சாதாரண அளவிலான சந்திப்பாக அமையும்.

2008இல் நடைபெறும் மாமன்றத்திற்கான செயலகம் விரைவிலேயே விதிமுறைகள் அடங்கிய அறிவிப்பை வெளியிடும். அடுத்த ஓராண்டில் தலத்திருச்சபைகளில் இது தொடர்பான விவாதம் நடைபெற இவ்விதிமுறைகள் வழிவகுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. 2008இல் இந்த மாமன்றம் நிகழ்வதற்குப் பல மாதங்களுக்கு முன்பாகவே இறுதி அறிக்கை ஆயர்களின் பார்வைக்கு அனுப்பப்படும். அதுவே, மாமன்றத்தின் விவாதத்திற்கான மையப்புள்ளியாக அமையும்.

### அமரர் அருட்பணியாளர்
## மேரி பஸ்ரியன் அடிகளாரின் 22ம் ஆண்டு நினைவஞ்சலி



கரையாதோ கல்நெஞ்சம் உன் பூமுகம் கண்டால்
இளகாதோ வன்நெஞ்சம் உன் பொற்பாதம் கண்டால்

அமரரின் ஆன்ம சாந்திக்காக 2007 ஜனவரி காலை 7.00 மணிக்கு வங்காலை புனித ஆனாள் ஆலயத்தில் எமது ஆயர் மேதகு. இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்களினால் இரங்கல் திருப்பலியும் அதைத் தொடர்ந்து ஆலய முன்றலில் செல்வன். ஜோசப் ஜெரோமி மார்க் அவர்களினால் புதிதாக வடிவமைக்கப்பட்ட அமரரின் திருவுருவச் சிலை மேதகு மன்னார் ஆயர் அவர்களினால் திரை நீக்கம் செய்யப்படும்.

### மன்னார் வலயக் கல்விப் பணிமனையின் ஏற்பாட்டில்
## பாடசாலைகளுக்கிடையிலான ஆங்கிலக் கறோல் பாடல் போட்டி



கடந்த ஆண்டைப்போன்று இந்த ஆண்டும் மன்னார் வலயக் கல்விப் பணிமனையினால் டிசம்பர் மாதம் 9ம் திகதி பாடசாலைகளுக்கிடையிலான ஆங்கிலக் கரோல் பாடல் போட்டி நடைபெற்றது. இம்முறை பெருந்தொகையான மாணவர்கள் இதில் பங்குபற்றி பரிசில்கள் பெற வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது. இப்போட்டியின் நோக்கம் மாணவர்களின் ஆங்கில மொழி விருத்தியை வளர்த்தலும் ஆங்கிலத்துடன் பாடும் ஆற்றலை வளர்ப்பதுமாகும். பாடசாலைகளின் வகைகளின் அடிப்படையில் 1AB 1C தரம் 2, ஆகிய பாடசாலைகளின் பெண்கள் குழு, ஆண்கள் குழு, கலப்புக்குழு ஆகிய மூன்று குழு நிலைப் பிரிவுகளில் இப்போட்டிகள் நடைபெற்றன. வெற்றிபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களும், பாடசாலைகளுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன. இதனைச் சிறப்பாக நடத்துவதற்கு மன்னார் வலயக் கல்விப்பணிப்பாளர் திரு. எம். ஏ. றெவல், ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி வி. தில்லைநாதன், மற்றும் கிறிஸ்தவ ஆசிரிய ஆலோசகர் திருமதி பயஸ் றதி பீரிஸ் மற்றும் அழகியல் உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி மல்லிகா மரியதாசன் சில்வா அவர்களும் ஏனைய உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் அருட்பணியாளர்களும் இதில் தமது பங்களிப்பைச் சிறப்பாக வழங்கியிருந்தனர்.

- தகவல்: திருமதி பெப்பி விக்ரர் லெம்பேட்


## பலஸ்தீனத்தில்

# கிறிஸ்து பிறந்த காலத்தின் வரலாற்றுப் பின்னணி



திரு. எஸ். டேவிட். (கோட்டக் கல்விப் பணிப்பாளர், முசலி.)

உலக வரலாற்றில் இறைமகன் இயேசுக்கிறிஸ்துவின் பிறப்பானது உன்னதமான, புனிதமான வரலாற்றுச் செய்தியாகப் பதிவாகிவிட்டது. அவரது மனித அவதாரமானது ஒரு **'மௌனப் புரட்சியாக'** விளங்குவதுடன், உலக வரலாற்றுப் போக்கினை கிறிஸ்துவுக்கு "முன்", "பின்" – என ஆழமாகக் கோடு கிழித்துவிட்ட நிகழ்வாகவும் அமைந்து விட்டமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.





உலகில் அமைதியையும், சமாதானத்தையும் நிலை நாட்ட இறைமகன் மனுவுருவெடுக்கத் தேர்ந்தெடுத்த புனித மண்ணே பழம் பெரும் வரலாற்றுத் தகவல்களை தன்னகத்தே கொண்ட பலஸ்தீன நாடாகும். திருவிவிலியத்தில் பலஸ்தீனம் **'வாக்களிக்கப்பட்ட பூமியாக'** மகிமைப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு இறைவனால் வாக்களிக்கப்பட்ட பூமியின் நோக்கம் என்ன என்பதை ஆழ்ந்து சிந்திக்கும்போது, **"மனுக்குலத்தைப் பாவ இருளில் இருந்து மீட்பதற்காக"** இறைமகன் இயேசுவை இவ்வுலகிற்கு அனுப்ப இறைவன் வகுத்த திட்டத்தை நடைமுறையாக்கம் செய்வதற்காக தேர்வு செய்த நிலமே பலஸ்தீனம். எனவே இயேசுக்கிறிஸ்து பலஸ்தீனத்தில் பிறந்தது இறைத்திட்டத்தின் வெளிப்பாடு என்ற முடிவுக்கு வரலாம்.

இன்று மத்திய கிழக்குப் பிரதேசம் என்றும், மேற்காசிய வட்டகை என்றும் புவிசார் அரசியல் பதங்களால் பிரபல்யம் பெற்று விளங்கும் அராபிய நாடுகளின் தென்மேற்கு மூலையில், மத்திய தரைக்கடலின் தென் கிழக்குக் கரையோரமாக அமைந்துள்ள சிறிய நாடுதான் பலஸ்தீனம். விவிலிய வரலாற்றுத் தகவல்களின் விளைநிலமான பலஸ்தீனத்தின் இறைமைக்காக யூதர்களும், பலஸ்தீனர்களும் நீண்ட காலமாக யுத்தம்புரிந்து வருகின்றார்கள்.

உலகில் அமைதியை நிலைநாட்ட வந்த இறைமகன் இயேசு பிறந்த இந்த பலஸ்தீன மண்ணில் நிரந்தர அமைதி ஒருபோதும் நிலவவில்லை என்பது கசப்பான உண்மையாகும். காலங்காலமாக பல்வேறு ஆக்கிரமிப்பாளர்களின் போர்க்களமாகவும், யூதர்களும் பலஸ்தீனர்களும் தமது இறைமை குறித்து மோதிக்கொள்ளும் - இரத்தம் சிந்தும் அரசியலை வரலாறாகப் பதிவுசெய்யும் களமாகவும் பலஸ்தீனம் இன்றுவரை விளங்கி வருகின்றது.

பலஸ்தீனத்தின் புவியியலையும், வரலாற்றையும் பிரித்துப் பார்க்க முடியாத அளவுக்கு ஒன்றில் ஒன்று பின்னிப் பிணைந்துள்ளன. வரலாற்றில் பல்வேறு வல்லரசுகளின் அதிகார வேட்டைக்குப் பல தடவைகள் களமாக அமைந்த பலஸ்தீனம் விந்தையான புவியியல் அமைப்பினை உடைய பிரதேசமாகும். மலைகள், குன்றுகள், சமவெளிகள், நதிகள், கடல்கள், ஏரிகள், பள்ளத்தாக்குகள், குகைகள் என்றவாறான பௌதீகக் கூறுகளை தன்னகத்தே கொண்ட தனித்துவ நிலமாகப் பலஸ்தீனம் விளங்குகின்றது.

இத்தகைய விந்தையான நிலவியல் பண்புகளைக் கொண்ட பலஸ்தீனத்தின் ஆதிக்குடிகள் கானானியர்களே! ஆதலால் ஆதிகாலத்தில் இப்பிரதேசமானது கானான் தேசம் என அழைக்கப்பட்டது. பின்னாளில் பாபிலோனில் இருந்து வந்த செமித்தியர் என்ற நாடோடிக் குலத்தின் தலைவரான ஆபிரகாம் வழிவந்த இஸ்ராயேல் மக்கள் இங்கு குடியேறி வாழ்ந்ததால் **'இஸ்ராயேல்'** என்றும், தொடர்ந்து **பிலிஸ்தேயா** என்ற மீனவ சமூகத்தவர் இங்கு குடியேறி வாழ்ந்ததால் **'பலஸ்தீனா'** எனவும் அழைக்கப்பட்டது. எவ்வாறெனினும் இன்று, இந்த மண்ணை பலஸ்தீனரும், யூதரும் எதிரும் புதிருமாக நின்று உரிமைகோரும் அளவுக்கு அவர்களின் இனத்துவ வரலாறு அங்கு ஆழமாக வேரோடியுள்ளது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பலஸ்தீன மண்ணில் இறைமகன் இயேசு பிறந்ததன் காரணமாக இதனை **'புனித பூமி'** எனவும் **'புண்ணிய பூமி'** எனவும் சிறப்பித்துக் கூறுமளவுக்கு முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றது. கிறிஸ்துவின் வாழ்வின் மகத்துவத்தை புனிதர்களான மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகிய நால்வரும் நற்செய்திகளாகத் தொகுத்து அமைத்துள்ளார்கள். எனினும் கிறிஸ்துவின் பிறப்பு பற்றிய செய்திகளை மத்தேயு, லூக்கா ஆகிய இருவர் மட்டுமே தமது நற்செய்திகளில் பதிவு செய்துள்ளனர்.

இறைமகன் மனுவுருவெடுத்த மகத்துவத்தை புனித மத்தேயு "இஸ்ராயேல் எதிர்பார்த்த உண்மை மெசியா யேசு" என்பதை வலியுறுத்த, "இழந்துபோனதைத் தேடி மீட்கவே இறைமகன் மனுவுருவெடுத்தார்" என்பதை லூக்கா தனது நற்செய்தியின் மையக் கருவாக வலியுறுத்தியுள்ளார்.

'மெசியா' என்பது எபிரேயச் சொல் ஆகும். இதனைக் கிரேக்க வரலாற்றாளர்கள் கிறிஸ்து என மொழிபெயர்த்தனர். இதற்கு 'அருட்பொழிவு பெற்றவர்', 'கடவுள் தேர்ந்தெடுத்த தலைவர்' என்பது பொருள் என திருவிவிலியத்தின் பொது மொழிபெயர்ப்பின் அடிக்குறிப்பாகத் தரப்பட்டுள்ளது.

எவ்வாறெனினும் நான்கு நற்செய்தியாளர்களிலும் இயேசுவைப்பற்றி முழுமையாக, வரன்முறையாக, ஒழுங்கான வரலாற்றுப் பின்னணியோடு நற்செய்தியை வரைந்தவராக லூக்காவை விவிலிய ஆய்வாளர்கள் மதிப்பீடு செய்துள்ளனர். மேலும் கிறிஸ்துவின் பிறப்பை உலக வரலாற்றில் இணைப்பாக்கம் செய்தவரும் புனித லூக்காவேதான் என்ற கருத்தும் நிலவுகின்றது.

இறைவனுடைய திட்டத்தின்படி அன்னை மேரியின் உதரத்தில் கருவாகி உருவாகி பலஸ்தீன நாட்டின் பெத்தலேகம் என்ற சிறு நகரின் ஒதுக்குப் புறத்தில் யேசு பிறந்தார் என்பது வரலாற்று உண்மையாகும்.

ஆனால் இயேசு பிறந்த கால கட்டத்தின் சமுதாய, அரசியல் நிலையானது பலஸ்தீனத்தில் கொதிநிலையில் இருந்தது. ஏனெனில் உரோமானிய ஏகாதிபத்தியவாதிகளின் வலுவான இராணுவ அடக்குமுறை ஆட்சியின்கீழ் பலஸ்தீன மக்கள் அடிமைப்பட்டிருந்தனர். அம்மக்கள்மீது கொடூரமான வரிகள் விதிக்கப்பட்டு அவர்களின் பொருளாதார வருமானத்தை உரோம் அதிகாரிகள் உறிஞ்சினர். இதனால் உரோமானியரின் ஆட்சி முறையில் வெறுப்புற்று பலஸ்தீன யூதர் மத்தியில் பல தேசிய விடுதலை இயக்கங்கள் உருவாகின. இவற்றில் குறிப்பிடத்தக்கவை ஜெலேசியஸ், சிகாரி போன்ற இயக்கங்கள் தீவிரமாக தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தின என வரலாற்று ஆய்வாளர்கள் கூறியுள்ளார்கள்.

அக்காலத்தில் உலகில் உரோமையப் பேரரசே வல்லமை மிக்க நாகரீகப் பேரரசாக விளங்கியது. இந்த உரோமப் பேரரசானது ஐரோப்பாவின் பெரும் பகுதியையும், மத்திய தரைக்கடலை (Mediterrance Sea) சூழ்ந்த நாடுகளையும், கணிசமான ஆசிய, ஆபிரிக்கப் பிரதேசங்களையும், அதன் ஆள்புல அதிகாரத்தின் கீழ் வைத்திருந்தது. இந்த உரோமைப் பேரரசின் வரலாற்றில் மன்னன் அகஸ்டஸ் சீஸரின் காலமே பொற்காலமாக கருதப்படுகின்றது. இவனது தந்தை யூலியஸ் சீஸரால் வகுக்கப்பட்ட சாம்ராஜ்ய விஸ்தரிப்புக்கொள்கைக்கு அமைவாக தனது பலமான இராணுவ வலிமையைப் பயன்படுத்தி மேற்படி பிரதேசங்களை தனது அதிகார வலைப்பின்னலுக்குள் சிக்க வைத்திருந்தான்.

பலஸ்தீனத்தில் உரோமயரின் காலனித்துவ ஆட்சி கி. மு 63 இல் வேரூன்றியது. உரோம சாம்ராஜ்யமானது பரந்து, விரிந்திருந்தமையாலும், அவர்கள் ஆக்கிரமித்திருந்த பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் அரசியல் கிளர்ச்சிகளை செய்யாதிருக்க வேண்டும் என்பதற்காகவும், ஆக்கிரமிப்பு மையங்களில் அந்தந்த பிரதேசங்களைச் சேர்ந்த பலம் வாய்ந்த ஆளுநர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

இயேசு பிறந்த காலத்தில் உரோமையப் பேரரசனாக அகஸ்டஸ் சீசர் அதிகாரத்தில் இருந்தான். இவனையே புனித லூக்கா செசார் அகஸ்டஸ் எனக் குறிப்பிட்டுள்ளார். உரோமானிய அரசியல் வரலாற்றுப் பதிவின் பிரகாரம் அகஸ்டஸின் ஆட்சிக் காலம் கி.மு 27இல் இருந்து கி. பி 14 வரையுமாகும். (ஏறத்தாழ 40 வருடங்கள்) மேலும் இயேசு பிறந்த காலப்பகுதியில் பலஸ்தீனத்தின் ஆளுனனாக யூதர்களின் அரசியல் தலைவன் ஏரோது என்பவன் அகஸ்டஸ் மன்னனால் நியமிக்கப்பட்டிருந்தான். மகா ஏரோது என்று புகழப்பட்ட இவன் பலம் வாய்ந்த ஆளுனனாக உரோமருக்கு விசுவாசமானவனாக அரசியல் புரிந்தான்.

இக்காலத்தில் பலஸ்தீனத்தின் சமூகக்கட்டமைப்பானது கருத்தியல் ரீதியாகவும், பொருளியல் ரீதியாகவும் பல்வேறு பிளவுகளைக் கொண்டிருந்தது. பரிசேயர், சதுசேயர், சமாரியர், எசேனியர், ஆயக்காரர், பாவிகள் என்று பல்வேறுபட்ட சமுதாயப் பிரிவினைகள் உரோமானிய ஏகாதிபத்தியவாதிகளின் பிரித்தாளும் சூழ்ச்சிக்குச் சாதகமாக அமைந்தது.

மேலும் மக்கள்மீது நியாயமற்றமுறையில் கடுமையான உபாயங்களைக் கையாண்டு வரி செலுத்துமாறு நிர்ப்பந்தித்தனர். இவ்வாறு மக்களிடம் இருந்து வரி அறவீடு செய்வதன் பொருட்டு தமது குடியேற்றவாத ஆதிக்கத்திற்குட்பட்ட மக்களின் பொருளாதார வருமானங்கள் சொத்துக்களைப் பற்றிய மதிப்பீடொன்றைச் செய்யும் உள்நோக்கத்திலேயே பரந்து பட்ட வகையில் குடிசன கணக்கெடுப்பை மேற்கொள்ளுமாறு அகஸ்டஸ் மன்னன் ஆளுநர்களுக்கு ஆணை பிறப்பித்தான்.

உலக வரலாற்றில் முதன் முதலாக நடாத்தப்பட்டதாக நம்பப்படும் உரோமப் பேரரசன் அகஸ்டஸின் இக்குடிசனக் கணக்கெடுப்பு தொடர்பான ஆணைக்கு மதிப்பளித்து ஏராளமான மக்கள் தத்தம் பூர்வீக ஊர்களுக்கு சென்று தங்கியிருந்தனர்.

கன்னிமரியும், தந்தை சூசையும் நசரேத்தூரிலிருந்து தமது முன்னோரின் பூர்வீக இடமான பெத்தலேகம் சென்று அங்கு தங்கியிருந்தபோது 'உலகிற்கு ஒளியான' இயேசுவின் பிறப்பு நிகழ்ந்ததாக நற்செய்தியாளர் லூக்கா தெளிவாகக் கூறுகின்றார். இச்சந்தர்ப்பத்தில் பாவிகளை இரட்சிக்கப் பிறந்த பாலன் இயேசுவின் பிறப்பு பெத்தலேகத்தின் ஒதுக்குப்புறத்தில் நிகழ்ந்தது ஒரு அதிசயமாகவே கருதப்பட்டது.

இறைமகனின் இப்பிறப்புச் செய்தியானது வானதூதர்களால் முதன் முதல் சமுதாயத்தில் மதிப்பிழந்து வாழ்ந்த இடையர்களுக்கு அறிவிக்கப்பட்டதும் மற்றொரு அதிர்ச்சிச் செய்தியாக அமைந்தது. உலக இரட்சகர் பிறந்துள்ளதற்கு அறிகுறியாக வானில் தோன்றிய வால் வெள்ளியிளன் வழிகாட்டலில் கீழைத்தேயத்தில் இருந்து வந்து மூன்று வானியல் நிபுணர்கள் இயேசு பாலனைத் தரிசித்த வரலாற்று நிகழ்வானது மத்தேயு நற்செய்தியில் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வானியல் நிபுணர்களின் கண்ணோட்டத்தில் இயேசு யூதர்களின் அரசனாகவே கருதப்பட்டுள்ளார். அதனால்தான் வானியல் நிபுணர்களை ஏரோது மன்னன் சந்தித்தபின் 'யூதர்களின் அரசன் பிறந்துள்ளான்' என்ற தகவலை அறிந்தபின்பு அவன் ஆள்மன அதிர்வலைகளால் அலைக்களிக்கப்பட்டான். அதன் விளைவாக அவன் பெத்தலேக நகரக் குழந்தைகளைக் கொலை செய்யுமாறு ஆணையிட்டதும், இந்தக் கொலை வெறியிலிருந்து தப்பித்துக்கொள்ள மரியாளும் சூசையும் இயேசுவைத் தூக்கிக்கொண்டு எகிப்து சென்றது பற்றிய அபூர்வத் தகவல் மத்தேயு நற்செய்தியில் மாத்திரமே குறிப்பிடப்பட்டுள்ளது.

உரோமப் பேரரசின் அடக்குமுறைக்குட்பட்டு விடுதலை வேண்டி நின்ற பலஸ்தீன யூதர்கள் தம்மை விடுவிக்கப் புதிய யூத அரசர் ஒருவர் பிறந்து வருவார் என்ற அதீத நம்பிக்கைக்கு யேசுவின் எளிமைக் கோலத்திலான பிறப்பு கவர்ச்சியையோ, நம்பகத் தன்மையையோ ஏற்படுத்தவில்லை. அதனால்தான் புண்ணிய பூமியாக உலக மக்கள் மதிக்கும் பலஸ்தீனத்தில் பூர்வீகமாக வாழுகின்ற பெரும்பாலான யூதர்கள் அன்றும் இன்றும் இயேசுவை இறைமகனாக ஏற்றுக் கொள்ளாத நிலை தொடர்கின்றது. ஆயினும் அகில உலகமே இயேசுவை உலக இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளது. இறைவனுடைய திட்டத்தின்படி,

*"யூதா நாட்டு பெத்லகேமே,*
*யூதாவின் ஆட்சி மையங்களில்*
*நீ சிறியதே இல்லை......*
*ஏனெனில் என் மக்களாகிய இஸ்ரேலை*
*ஆயரென ஆள்பவர் ஒருவர்*
*உன்னிலிருந்தே தோன்றுவார்....."*

என்னும் இறைவாக்கினரின் பதிவாக்கம் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு பலஸ்தீனத்தின் பெத்லேகம் நகரில் அதிசய நிகழ்வாக - வரலாற்று நிகழ்வாக இயேசுவின் பிறப்பு நிகழ்ந்தது என்பதற்கான ஆதாரமாகும்.

# ஐரோப்பா இளைய தலைமுறையினருக்கு தனது உண்மையான வேர்களை விளக்க வேண்டும்

## - திருத்தந்தை 16ம் பெனடிக்ற் -



திருத்தந்தை தனது நான்காவது அப்போஸ்தலிக்க திருப்பயணத்தை ஜேர்மனிக்கு கடந்த செப்ரம்பர் 9 ஆம் திகதி முதல் 12ம் திகதி வரை மேற்கொண்டிருந்தார். "ஐரோப்பிய அரசியல் தலைவர்கள் தமது இளைய தலைமுறையினருக்கு ஐரோப்பாக் கண்டத்தின் பாரம்பரிய அடையாள வேர்களை விளக்க வேண்டிய கடமைக்குட்பட்டுள்ளனர்" என்று அவர் அங்கு கூறினார்.

இரண்டாயிரம் ஆண்டுகளாகக் கிறிஸ்தவ விசுவாச விழுமியங்கள் ஐரோப்பிய மக்களின் ஆன்மாக்களையும், சமூகத்தையும் காத்து வளர்த்து வந்துள்ளது. ஐரோப்பாவிற்கென்று தனிப்பட்ட கிறிஸ்தவ அடையாளமும், பாரம்பரியமும் உண்டு. ஐரோப்பாவின் இந்தக் கடந்தகால பாரம்பரிய வரலாறு மற்றும் அதன் அடையாளங்களை இளைய தலைமுறையினருக்கு விளக்கிக் கூறும் வழிமுறைகளை அரசியல் தலைவர்கள் கண்டுபிடித்து விளக்க வேண்டும். காரணம், எதிர்கால ஐரோப்பிய சமூகத்தை உருவாக்கப்போகும் இளைஞர்கள் ஐரோப்பாவின் பண்பாடு, சமூக ஒழுக்கம் மற்றும் கிறிஸ்தவ அடித்தளங்கள் பற்றி அறிந்துகொள்ளவேண்டியது மிகவும் அவசியம்" என்றார் திருத்தந்தை.

## புலம் பெயர் நாட்டில் திருத்தொண்டராக நியமனம்



இலங்கை கரம்பனைச் சேர்ந்த அருட்சகோதரர் உதயா றொபேட் அந்தோனிப்பிள்ளை அவர்கள் கடந்த 14. 10. 2006 அன்று பிரான்ஸ் நாட்டு ஓர்லி (Orly) எனும் இடத்தில் உள்ள Saint Germaind என்னும் கத்தோலிக்க தேவாலயத்தில் திருத்தொண்டராக திருநிலைப்படுத்தப்பட்டார். கரம்பொன் மற்றும் கரவெட்டியைச் சேர்ந்த இவர் றொபேட், றெஜினா ராசம்மா தம்பதிகளின் நான்காவது மகனாவார்.

புலம்பெயர்ந்த நிலையில் பிரான்ஸ் லியோன் நகரில் குருத்துவக்கல்வியைத் தொடர்ந்த இவர் தனது துறவற வாழ்வின் பயிற்சிகளுக்குப்பின் தன்னை முற்றுமுழுதாக அமலமரித்தியாகிகள் சபை (OMI) அருள் வாழ்வுக்கும், இறைபணிக்கும் கடந்த 2004ம் ஆண்டு யூலை மாதம் 3ம் திகதி சனிக்கிழமை அன்று லியோன் நகரில் தம்மை அர்ப்பணித்திருந்தார். அருட்பணியாளர் செபமாலைத் துரம் (அமதி) அவர்களே இவரின் அழைத்தல் ஊக்குனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் யாழ் ஆயர் இல்லத்தில் அருட்பணியாற்றும் அருட்தந்தை. ச. கிருபானந்தன் (கரவெட்டி) அவர்களின் நெருங்கிய உறவினர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இவரது இறைபணி சிறக்க மன்னா தனது நல்வாழ்த்துக்களையும் செபங்களையும் காணிக்கையாக்குகின்றது.

*தகவல்: திருமதி. கிறிஸ்ரினா அன்ரன் பொன்ராஜ், சுவிஸ்.*

## இயேசுசபை அகதிப் பணியினரின் செய்திகள்

மக்கள் பணியையே தமது முதன்மைப் பணியாகக்கொண்டு தோழமையுடன் ஒரே குடும்பமாக இயங்கும் இயேசுசபை அகதிப்பணியினர் (JRS) தமது செயற்றிட்டங்களை மன்னார் மறைமாவட்டத்தில் சிறப்பாக முன்னெடுத்து வருகின்றனர். இதன் அடிப்படையில் கடந்த ஒக்ரோபர் மாதத்தில் மன்னாரில் நடைபெற்ற சில சிறப்பு நிகழ்வுகள் வருமாறு.

### மாலைநேரக் கல்வி மைய ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு

இயேசுசபை அகதிப் பணியினரின் (ஜே. ஆர். எஸ் இன்) முக்கிய பணியான கல்விப்பணித் திட்டத்தின்கீழ் இயங்கி வரும் மாலைநேரக் கல்வி மையங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு 06.10.2006 அன்று மாலை தொடக்கம் 08.10.2006 பிற்பகல் வரை மன்னார் மறைக்கல்வி நிலையத்தில் 'கற்றல் கற்பித்தல் முறைகள்' மற்றும் 'ஆளுமை விருத்தி' தொடர்பான வதிவிடக் கருத்தரங்கு ஒன்று நடாத்தப்பட்டது. இதில் 60 ஆசிரியர்கள் கலந்துகொண்டனர். வள ஆளணிகளாக மன்னார் வலயக்கல்விப் பணிமனையில் இருந்து ஆசிரிய ஆலோசகர்கள் வருகை தந்தமை குறிப்பிடத்தக்கது.

### ஜே. ஆர். எஸ். புதிய கட்டிடத் திறப்பு விழா

கடந்த 10.10.2006 அன்று காலை 9.00 மணிக்கு ஜே. ஆர். எஸ். அமைப்பின் தலைமன்னார் றோட்டில் அமைக்கப்பட்டுள்ள புதிய அலுவலகம் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகை அவர்களின் ஆசீர்வாதத்துடன் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் ஜே. ஆர். எஸ். தேசிய இயக்குனர் அருட்தந்தை வின்னி யோசப் அடிகளார் உட்பட ஜே. ஆர். எஸ். பிரதிநிதி திருமதி ஆன், பேராலயப் பங்குத்தந்தை அருட்பணியாளர் தேவராஜா கொடுதோர், வாழ்வுதய இயக்குனர் அருட்பணி. பெப்பி சோசை, அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஜே. ஆர். எஸ். பணியாளர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

### ஜே. ஆர். எஸ். வீட்டுத் திட்டத் திறப்பு விழா

கடந்த ஒக்ரோபர் மாதம் 10ம் திகதி மன்னார் - சாவற்கட்டு கிராமத்தில் ஜே. ஆர். எஸ். அமைப்பின் 50 வீட்டுத்திட்டத்தில் 23 வீடுகள் கட்டி முடிக்கப்பட்ட நிலையில் அதற்கான திறப்பு விழா சிறப்பாக நடைபெற்றது. மன்னார் மறைமாவட்ட ஆயர் தலைமையில் முற்பகல் 10.00 மணி அளவில் இந்நிகழ்வு இடம்பெற்றது. இதில் ஜே. ஆர். எஸ். இயக்குனர், ஜே. ஆர். எஸ். பிரதிநிதி, மன்னார் உதவி அரசாங்க அதிபர், பேராலயப் பங்குத்தந்தை மற்றும் ஏனைய பங்குத்தந்தையர்கள், குடும்பநலப் பணியக இயக்குனர், வாழ்வுதய இயக்குனர், அருட்சகோதரிகள், அரச, அரசசார்பற்ற உத்தியோகஸ்தர்கள், ஊர்க்குழுக்கள், பயனாளிகள் எனப் பலரும் கலந்துகொண்டு இந்நிகழ்வினைச் சிறப்பித்தனர்.

### சான்றிதழ் வழங்கும் விழாவும் நூல் வெளியீட்டு விழாவும்

ஜே. ஆர். எஸ். நிறுவனம் 6 மாத கால உளவளத்துணைப் பயிற்சி வழங்கிய 10 பயிலுனர்களுக்கான சான்றிதழ் வழங்கும் விழாவும் நூல் வெளியீட்டு விழாவும் கடந்த 11.10.2006 அன்று காலை 10 மணியளவில் தமது புதிய அலுவலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வெளியிடப்பட்ட *'சிறகடித்துப் பறக்கவே'* நூலின் முதல் பிரதியை ஆயர் அவர்கள் வெளியிட அதனை டிலாசால் அருட்சகோதரர் பப்ரிஸ்ற் குரூஸ் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வில் மன்னார் மறைமாவட்ட ஆயர், ஜே. ஆர். எஸ். இயக்குனர், ஜே. ஆர். எஸ். பிரதிநிதி, அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள், குடும்ப நலப் பணியகத்தின் இயக்குனர், டிலாசால் அருட்சகோதரர் பப்ரிஸ் குரூஸ், அமல உற்பவ மாதா சபை அருட்சகோதரிகள், மற்றும் பெற்றோர்கள், ஆதார வைத்தியசாலையின் மருத்துவர் சுகந்தி மற்றும் சக ஊழியர்கள் போன்றோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். இப்பயிற்சியின் இணைப்பாளர் அருட்சகோதரி றெஜினா மேரி அவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## கத்தோலிக்க உளவியலாளரின் 7வது மாநாடு!

இன்றைய தகவல் தொழில் நுட்பம் சமூகத்தைப் பாதிக்கும் விதம் குறித்து கத்தோலிக்க உளவியல் வல்லுனர்கள் கவலையும் அக்கறையும் தெரிவித்துள்ளனர்.

ஆகஸ்ட் 2004 நிலவரப்படி உலகின் 80 சதவிகித தகவல் வலைப்பின்னல் மையங்கள் (Call Centres) இந்தியாவில் இயங்குவதாக தகவல் தொழில்நுட்பம் குறித்து ஆய்வு செய்யும் கார்ட்னர் நிறுவனம் தெரிவிக்கின்றது.

இந்தத் தகவல் வலைப்பின்னல் மையங்களில் வேலை செய்வோர் மனஅழுத்தம், வேலைப்பளு ஆகியவற்றை எதிர்கொள்ள மிகவும் சிரமப்படுவதாக பெங்களூரைச் சேர்ந்த உளவியல் நிபுணர் மார்சல் பிலிப் கூறியுள்ளார்.

உளவியல் பட்டம் பெற்ற ஏறக்குறைய நூறுபேர் வரை பங்குபெற்ற கத்தோலிக்க உளவியல் வல்லுனர்களின் கருத்தரங்கு செப்ரெம்பர் 30 மற்றும் அக்டோபர் முதல் தேதிகளில் கேரளாவில் உள்ள ஸ்ரீகார்யம் என்னும் ஊரில் நடைபெற்றது. இது கத்தோலிக்க உளவியல் நிபுணர்களின் 7வது மாநாடாகும். இதில் பங்குகெடுத்தவர்களில் பெரும்பாலானோர் உளவியலில் பட்டம் பெற்ற குருக்கள் மற்றும் அருட்சகோதரிகள் என்பது குறிப்பிடத்தக்கது. 1999இல் உருவாக்கப்பட்ட இந்த அமைப்பு ஆண்டுதோறும் கூடி, சமூகத்தைப் பாதிக்கும் முக்கிய விடயங்கள் குறித்து விவாதித்து வருகிறது.

## வறுமை ஒழிப்புக்காக நோபல் பரிசு பெறும் பங்களாதேச பேராசிரியர்

நோர்வே நாட்டு நோபல் பரிசுக் குழுவினர் 2006ம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசினை பங்களாதேச நாட்டைச் சார்ந்த பொருளாதாரத்துறை பேராசிரியர் முகம்மது யூனிஸ்க்கும், அவர் 1976இல் தொடங்கிய கிராமிய வங்கிக்கும் வழங்க முடிவுசெய்துள்ளது.

இதுவரை அரசியல், சமூகம், பொருளாதாரம் போன்ற துறைகளில் சிறப்பான பங்களிப்பை வழங்கியவர்களுக்கே நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது. சிறந்த சமூக சேவைக்காக அன்னை திரேசாவுக்கும் நோபல் பரிசு வழங்கப்பட்டது.

அண்மைக்கால வறுமை ஒழிப்பு சம்பந்தமாக தங்கள் பங்களிப்பை வழங்கியவர்களுக்கு நோபல் பரிசு வழங்கப்படுகின்றது. அவ்வாறு ஏழைகளை மையப்படுத்திய பொருளாதார சிந்தனைக்காக கல்கத்தாவைச் சேர்ந்த அமர்த்தியா சென் நோபல் பரிசு பெற்றார்.

இவ்வாண்டு அமைதிக்கான நோபல் பரிசு பெறுபவர் 'சுய உதவிக் குழுக்களின் தந்தை' என்றழைக்கப்படும் பொருளாதாரப் பேராசிரியர் முகம்மது யூனிஸ். இவருடைய முயற்சியால் பெரிய அளவில் பங்களாதேசத்தில் வறுமை ஒழிக்கப்பட்டுள்ளது. வறுமை ஒழிப்பும், உலக அமைதியும் ஒன்றோடொன்று மிக நெருங்கிய தொடர்புடையவை என்பதனை நோர்வே நோபல் பரிசுக் குழு ஏற்றுக்கொண்டுள்ளது என்பதையே இவ்வாண்டு அமைதிக்கான நோபல் பரிசு வேட்பாளர் தேர்வு காட்டுகின்றது என அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

## தமிழக அரசின் சிறுபான்மை ஆணையத்தின் தலைவராக ஓர் கத்தோலிக்க குரு நியமனம்



தமிழக அரசு சாந்தோம் கலைத்தொடர்பு நிலையத்தின் இயக்குனர் அருட்தந்தை வின்சென்ட் சின்னத்துரை அவர்களைத் தமிழக சிறுபான்மை ஆணையத்தின் தலைவராக கடந்த நவம்பர் 12ம் திகதி நியமித்துள்ளது. தந்தை அவர்கள் கடந்த தி. மு. க. ஆட்சியில் இதே ஆணையத்தின் கன்வீனராக பணியாற்றியவர் என்பதும், தமிழக கத்தோலிக்கத் திருச்சபையின் அரசியல் தொடர்பாளராக இதுவரை பணியாற்றியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

தமிழக அரசு முதன் முதலாக ஒரு கத்தோலிக்கருக்கு இப்பதவியை வழங்கியதற்கு கத்தோலிக்கத் திருச்சபையைச் சார்ந்த அனைவரும் மகிழ்ந்து தமிழக அரசுக்கும், தமிழக முதல்வருக்கும் நமது நன்றியையும், பாராட்டையும் தெரிவிக்கின்றனர். இந்தப் பதவி நியமனம் மூலம் தமிழகத்திலுள்ள சிறுபான்மையினரில் கத்தோலிக்கர்களின் அரசியல் பலம் குறிப்பிடத்தக்கது என்பது உணரப்படுகின்றது. தந்தை வின்சென்ட் சின்னத்துரை தமிழக ஆயர்களுக்கும், தமிழக அரசுக்கும் இடையில் சிறுபான்மை மக்களின் உணர்வுகளையும், உரிமைகளையும் பிரதிபலிக்கும் பாலமாகத் திகழ்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ஈராக்கை கட்டியெழுப்ப உதவுங்கள்

### உலகத் தலைவர்களுக்கு திருத்தந்தை வேண்டுகோள்

திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் அவர்கள் ஈராக்கின் ஆன்மீக மற்றும் அரசியல் தலைவர்களையும், உலக அரசியல் தலைவர்களையும் போர் மூலம் பயங்கரப் பாதிப்புக்குள்ளாகியுள்ள ஈராக்கை கட்டியெழுப்பவும், ஈராக் மக்களுக்கு உதவவும் முன்வாருங்கள் என்று அழைப்பு விடுத்துள்ளார்.

ஈராக்கிலுள்ள கிறிஸ்தவ சமூகம் குறித்தும் அவர் தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துள்ளார். ஈராக்கில் கிறிஸ்தவர்கள் வலுப்பெறவும், ஆறுதலடையவும் நமது செபத்தையும், உதவியையும் வழங்குவோம் என்று திருத்தந்தை கூறினார். இறைவன் ஈராக் மக்களுக்கும், ஈராக் நாட்டிற்கும் தேவையான அருளையும், வளங்களையும் வழங்குவாராக என்றும் வேண்டினார்.

ஈராக் திருச்சபைத் தலைவர்கள் உலகில் வளர்ந்துவரும் தீவிரவாதம் குறித்து தங்களது வருத்தத்தை தெரிவித்துள்ளனர். ஈராக்கை அமெரிக்கா ஆக்கிரமிக்கத் தொடங்கியதிலிருந்து பல ஆலயங்கள் குண்டுவீச்சுக்கு உள்ளாகித் தாக்கப்பட்டுள்ளன. கிறிஸ்தவர்கள் ஈராக்கில் உறவினர்களையும், உடைமைகளையும் இழந்து தவிக்கின்றனர். ஈராக்கில் வாழ்ந்த 1.2 மில்லியன் கிறிஸ்தவர்களில் பலர் போர்க் காலங்களில் தங்கள் நாடுகளுக்குத் திருப்பிச் சென்றுவிட்டதால் தற்போது ஈராக்கில் 6 இலட்சம் கிறிஸ்தவர்கள் மட்டுமே உள்ளனர்.


## திருத்தந்தையின் ரமழான் வாழ்த்து!

கடந்த அக்டோபர் 22ம் திகதி திருத்தந்தை 16ம் பெனடிக்ட் இஸ்லாமியரின் புனித மாதமான ரம்ழான் மாதம் நெருங்கியதை அடுத்து இஸ்லாமிய விசுவாசிகளுக்குத் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்தார். தனது வாழ்த்தில் "கடந்த மாதம் முழுவதும் ரம்ழான் மாதத்தைக் கொண்டாடி வரும் உலகெங்கிலுமுள்ள இஸ்லாமிய விசுவாசிகளுக்கு எனது ரம்ழான் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். உலக மக்கள் அனைவருக்கும் சமாதானமும், அமைதியும் உண்டாவதாக" என்று கூறியுள்ளார்.

வத்திக்கானின் மதங்களுக்கிடையிலான உரையாடல் ஆணையத்தின் தலைவர் கர்தினால் பால்பவுப்பார்டு அளித்துள்ள வாழ்த்துச் செய்தியில் "இன்றைய உலகின் சவால்களை கிறிஸ்தவர்களும், முஸ்லீம்களும் நம்பிக்கையோடு கூடிய உரையாடல் மூலம் சந்திக்கவும், தீர்வு காணவும் முயல வேண்டும்" என்று கூறியுள்ளார். திருத்தந்தையின் வாழ்த்துச் செய்தியும், மதங்களுக்கிடையிலான உரையாடலில் கத்தோலிக்கத் திருச்சபைக்குள்ள ஈடுபாடும் இஸ்லாமிய சமூகத்தினரை மகிழ்ச்சிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிறிஸ்மஸ் சிறப்புக் கவிதைகள்

# HAPPY CHRISTMAS



## வந்து பாரும் இயேசுவே!

மண்ணுலகில் மாந்தர் பாவம் போக்கிடவே
மனித அவதாரம் எடுத்து இம்மண்ணில்
பிறக்கத் திருவுளம் கொண்ட இயேசுவே
மண் மீதினில் மாந்தர்படும் அவலநிலையை
வந்து பாரும் இயேசுவே! வந்து பாரும்!

பெற்றோரை இழந்து தவிக்கும் பிள்ளைகள்!
பிள்ளைகளை இழந்து தவிக்கும் பெற்றோர்கள்!
மற்றும் உற்றார் உறவினரின் பரிதாப வாழ்வால்
நாடும் வீடும் சாவீடாய்ப்போன நிலையை
வந்து பாரும் இயேசுவே! வந்து பாரும்!

காணாமல் போனோர் பட்டியல் நீண்டிட
மனிதனின் உரிமைகள் மண்ணில் பறிக்கப்பட
அந்நியன் கொன்றான் எனப் நியாயப்படுத்தி
பழிபோடும் எம்மவர் பரிதாப நிலையை
வந்து பாரும் இயேசுவே! வந்து பாரும்!

வானில் பறக்கும் கிபீர் விமானச் சத்தம் கேட்டு
அஞ்சி நடுங்கி பதுங்கு குழி தேடி ஓடி
தரையினில் ஓடும் வெள்ளை வானைக்கண்டு
அலறி ஓடும் இளைஞர்களின் அவலக்குரல் கேட்க
வந்து பாரும் இயேசுவே! வந்து பாரும்!

நியாயம் கேட்போரும் நீதி தேடுவோரும்
அடக்குமுறையில் அடைபட்டுக் கிடக்கும்
அநியாய சிறை வாழ்க்கை நிலையை
வந்து பாரும் இயேசுவே! வந்து பாரும்!

வயிற்றுப் பசியினால் ஒருவேளை உணவிற்காக
ஏங்கி வாடும் குழந்தைகளையும்
மூவேளையும் நன்றாய் உண்டுவிட்டு
அரக்கர்போல் ஆணவத்துடன் அலைமோதும்
ஆட்சியாளரின் அட்டகாச நிலையையும்
வந்து பாரும் இயேசுவே! வந்து பாரும்!

சமாதானம் சமாதானம் என ஏங்கி
தவிப்போரின் ஏக்க நிலையையும்
சமாதானம் வந்தால் உழைக்க முடியாது என
பெருமூச்சுவிடும் பித்தர்கள் நிலையையும்
வந்து பாரும் இயேசுவே! வந்து பாரும்!

எஸ். பொமிரா, தோட்டவெளி

## புதுவருட கனவு

புத்தம் புதிய வருடம் தன்னிலே
புனிதமான உலகம் ஒன்று வேணும்
சாதி மதம் சண்டை ஒழிந்திடவே
சமாதானம் எங்கும் பரவ வேணும்

போட்டி பொறாமைகள் கருகிடவே
பொழிந்த அன்புறவு வந்திட வேணும்
அடிமைச் சங்கிலி உடைபடவே
அமைதி பாரெங்கும் கமழ வேணும்

பணக்காரன் ஏழைகள் சமமாகவே
பண்பான தென்றல் வீசிட வேணும்
இரக்கமே இல்லாத மனிதருக்கே
இதயத்தில் இரக்கம் சுரந்திட வேணும்

கொடுமைகள் இல்லா உலகினிலே
கோன்கள் என்றும் உயர்ந்திட வேணும்
வெடிச்சத்தங்கள் ஓய்ந்திடவே
வெண்புறா வானில் பறந்திட வேணும்.



பி. கரோலின்,
திருக்குடும்ப கன்னியர் மடம், பாஷையூர்

## யேசு பாலன்

மார்கழிக் கடுங்குளிரினிலே
மாடடைக் குடிலினிலே
மாமரியின் மடியினிலே
இயேசு பாலன் வந்துதித்தார்.

சூசைமரி கரங்களில் தவழ்ந்து
மாடடைக் குடிலில் பாவிகள் எமக்காய்
ஏழ்மையில் பிறந்த எம் மைந்தனே
எப்பொழுதும் போற்றிடுவோம் பாலர் நாம்.

ம. றேச்சல், பிச்சகுளம், முருங்கன்

## "என்னோடு தங்கும், என் நண்பன் இயேசுவே!"



எனக்குள்ளே வாரும்
என் வாழ்வின் யேசுவே!
அகல் விளக்கே ஆண்டவரே
வாழ்பவரே வழிநடத்துபவரே!

என் உள்ளமதில் வந்து நீர்
என் நண்பனாய் உறைந்திடுவீர்.
என்னோடு தங்கி என்றும்
என்னோடு மகிழ்ந்திடுவீர்!

நண்பனே யேசுவே! என் அன்பு தேவா!
எனில் வாழ்பவரே வழிநடத்துபவரே!
வந்திடுமையா வழிநடத்திடுமையா!

கள்ளம் கபடம் இல்லா எம் உள்ளமதிலே
வந்திடுமையா வந்து தங்கிடுமையா
இரங்கிடுமையா உம் அருள் வழங்கிடுமையா!

டி. ஆன்ஸ் கனிமொழி,
வங்காலை

## மறந்து விடாதே



யுத்த ஓநாயே
உன் கோரப் பற்களைக்
காட்டிச் சிரிக்காதே.
மரணத்தை மிதித்து
அமைதியை விதைக்க
மன்னவன் பிறந்துவிட்டான்
மறந்து விடாதே!

## பாடுங்கள் கீதம்!


தென்றல் காற்று சிணுங்கிச் சிலிர்க்க
ரோஜாப் பூவில் பனித்துளி தவழ
நடுங்கும் குளிரில் கன்னம் சிவக்க
பாலகன் பிறந்தான் பாடுங்கள் கீதம்!

## மகிழ்ந்து கொண்டாடு

பாவத்தில் உழல்கின்ற
பாவியே பதறாதே
பாலகன் பிறந்திட்டான் - உன்
பாவங்களைப் போக்கிடவே!
பாடிடு மகிழ்ந்து – போற்றிப்
பாடிப் பாடிக் கொண்டாடு!

ஆர். றொபின்சா, வண்ணாகுளம்.

## கிறிஸ்மஸ் விழா



மார்கழி குளிரினிலே
மாமரி மடியினிலே
காரிருள் வேளையிலே
மனுவுருவெடுத்த பாலகனே!

மாபரன் இயேசு பாலன்
மாட்டுத் தொழுவத்தினிலே
மக்களுக்காய் மண்ணுலகில்
புது மலர்போல் மலர்ந்தாரே

ஆயனை அரவணைக்க
பஞ்சணை இல்லை
மந்தைகளின் உறைவிடமே
மாபரனின் பிறப்பிடம்!

மரியன்னையின் அருகினிலே
சூசைமா முனியுடன் இருந்த பாலனை
இடையர்கள் கண்டு ஆராதித்தனர்!
ஞானிகள் மூவர் புகழ்ந்து பாடினர்
உலகம் அனைத்தும்
உவகையுடன் கொண்டாடியதே!

மலர்களின் மணங்களிலும்
மழலையின் சிரிப்பினிலும்
மக்கள் எம் மனங்களிலும்
மாணவர் நம் உள்ளங்களிலும்
மன்னவராம் இயேசு பாலன்
மகிழ்வோடு பிறந்தாரே!



க. சுகிர்தா,
உமனகரி, நானாட்டான்

## நீ, நான், அவள்...!

என் அன்பே!
உனதன்பில் நான்
தொலைத்து விட்டேன் என்னை!
உனது உள்ள அழகில் நான் அடிபட்டு
உனக்குள் என்னை அர்ப்பணித்து விட்டேன்!

உனது அழகிய முகம் கண்டு
நான் ஆறுதலடைவது உண்மை
உன் தேற்றும் மார்பில் என்முகம் புதைத்து
ஆறுதலடைவதும் உண்மை.

உனது அரவணைக்கும் கரம்கோர்த்து
காலாற நடக்க ஆசிப்பதும் உண்மை
உனது அளவில்லா ஆழமான
உண்மையான, களங்கமில்லா அன்பில்
எனை நான் தொலைத்து விட்டதும் உண்மை.
ஆனால் அன்பே!...
உன்னைக் காணுமுன்
நான்... அவளையல்லவா கண்டேன்
அவளைக் கண்ட அந்த முதல்நாள்
மறக்க முடியாத இன்பத் திருநாள்.
அவள் அழகிய வதனம் கண்டு,
அவள் தூய புன்முறுவல் கண்டு
என் மனதை அவளிடம்
பறிகொடுத்து விட்டேன்

அவள் தன் இதயத்தைத்
திறந்து காட்டினாள்
என்னைப் பார்த்தவள்....
முதலும் இறுதியுமாய் புன்னகைத்தாள்.
உண்மையில் .... அவளுக்காகவே
நான் என்னை மாற்றிக்கொண்டேன்



அவள் என்னைப்
பெயர் சொல்லி அழைத்தபோது,
என்னால் நம்பமுடியவில்லை.
ஆனாலும் நம்பினேன்....
அவளை நெருங்கினேன்.
அவளை நெருங்கியபோதுதான்,
அவள் எனக்கு உன்னைக் காட்டினாள்.
அவள் உன்னைக் காட்ட
நான் உன்னில் மயங்கினேன்.

ஐயகோ!....
உன்னில் நான் கொண்ட காதல்...
அவளை மறந்துவிட்டேன் - இது
நியாயமாகப் படவில்லைத்தான்......!
ஆயினும் மறந்து போனேன்.

உன்னைக் காட்டிய அவளை
மீண்டும் நான் காண வேண்டும்
கட்டியணைத்து கதறியழுது
மன்னித்துவிட மன்றாட வேண்டும்.
அவள் எனக்கு உன்னைக் காட்டினாள்
எனக்கு நீ அவளைக் காட்டுவாயா?



இயேசுவே!...
உன்னை எனக்குக் காட்டிய
உனது அன்னை மரியாளை
நான் மறப்பது நியாயமில்லை.
மீண்டும் அவள் பாதம் சரணடைய,
எனக்கு நீ அவளைக் காட்டிவிடு.

மீண்டும் அவளை நான் காண வேண்டும்
பாடித் துதிக்க வேண்டும்
உனது அன்னை மரியாள்
இறைவனின் தாயென –நான்
பறைசாற்ற வேண்டும்.

அருட்சகோதரி. யோகராணி இராஜரட்ணம் வவுனியா.

## மகிழ்ச்சியின் நாள்

தீபங்கள் ஒளி வீச
நாதங்கள் ஒலிக்க
மலர்க்கைகள் விரித்து
மக்களை மீட்டிடவே
மைந்தன் பிறந்திட்ட
மார்கழி நாள் - ஓர்
மகிழ்ச்சியின் நாளே!

ஆர். றொபின்சா, வண்ணாங்குளம்.



# பிறப்பொக்கா பிறப்பு

## வரலாற்றில் இயேசுவின் பிறப்பு

வரலாற்றில் நிகழ்ந்த சில பிறப்புக்கள் வரலாற்றையே மாற்றியிருக்கின்றன. சிலரின் பிறப்புக்கள் வரலாற்றுக்கு அணி சேர்த்துள்ளன. கிட்லர் போன்ற சிலரின் பிறப்புக்கள் வரலாற்றைப் பின்னோக்கித் தள்ளியிருக்கின்றன.

ஆனால் வரலாற்றுக்கே வாழ்வு கொடுத்த பிறப்பு இயேசுவின் பிறப்பு! வரலாற்றின் பாதையையும், பார்வையையும் மாற்றியமைத்தது இயேசுவின் பிறப்பு! புதிய பரிமாணங்களைத் தந்து, புத்துலகப் பரிணாமத்திற்கு அழைத்துச்சென்றது அவரது பிறப்பு!

மூன்று தளங்களில் இயேசுவின் பிறப்பு இங்கே ஆராயப்படுகிறது.

அ) இயேசுவின் பிறப்பு விழா பற்றிய வராலாற்றுப் பிரச்சனை.

ஆ) நற்செய்தி நூல்கள் காட்டும் இயேசுவின் பிறப்பும், குழந்தைப் பருவ நிகழ்வுகளும் தரும் சிக்கல்கள்.

இ) இயேசுவின் பிறப்பு விடுக்கும் அறைகூவல்கள்.

### அ. இயேசு பிறப்பு விழா ஒரு வரலாற்றுப் பிரச்சினை:

இயேசுவின் பிறப்பு விழா கிறிஸ்தவத்தின் தொடக்க முதல் கொண்டாடப்பட்ட விழா அன்று. திருக்காட்சி, உயிர்ப்பு மற்றும் பெந்தகோஸ்து எனும் விழாக்களைத்தான் தொடக்கக் கிறிஸ்தவர்கள் கொண்டாடினர். உயிர்ப்பே மைய விழாவாகக் கொண்டாடப்பட்டது. ஏனெனில் உயிர்ப்பு கிறிஸ்தவ வாழ்வின் ஊற்றுச்சக்தி எனத் தொடக்கக் கிறிஸ்தவர்கள் நம்பினர். இயேசு பிறந்தார் உயிர்த்தார் மீண்டும் வருவார் என்பதே தொடக்கச் செய்தியின் கருச்செய்தியானது.

இயேசுவின் பிறப்பைப் பற்றியோ, அவருடைய குழந்தைப் பருவ நிகழ்ச்சிகள் பற்றியோ தொடக்கத்தில் ஒன்றும் போதிக்கப்படவில்லை. திருத்தூதர் பணியின் முதல் பகுதியில் காணப்படும் பேதுருவின் மறையுரைகளில் இறப்பு உயிர்ப்பு எனும் மறைபொருள்கள் மட்டுமே இடம்பெறுகின்றன. எனவேதான் இயேசுவைப்பற்றி முதலில் எழுதப்பட்ட நூல்களுள் ஒன்றான கொரிந்தியர் முதல் திருமுகத்தில், புனித பவுலடியார் இயேசுவினுடைய இறப்பு மற்றும் உயிர்ப்புப் பற்றி மட்டுமே எழுதியுள்ளார்.



தமது மூன்றாவது பயணத்தின் தொடக்கத்தில் உரிமை மக்களையும் - கலாத்தியர் 4:45ல் "கடவுள் தம் மகனைப் பெண்ணிடம் பிறந்தவராக அனுப்பினார்" என்ற ஒரு வரியின் மூலம் இயேசுவினுடைய பிறப்பைச் சுட்டிக் காண்பிக்கிறார்.

காலப்போக்கில், கிறிஸ்துவைப் பின்பற்றியவர்களின் எண்ணிக்கை பெருகிய வேளையில், கிறிஸ்துவின் இறப்பு, உயிர்ப்பு மற்றும் போதனைகளோடு, அவர் செய்த ஏராளமான அரும் அடையாளங்களைப் பற்றியும் சட்டத்திற்கு அடிமை மக்களைப் பற்றிப்பேசும்போது இயேசுவின் பிறப்பைப் பற்றிய குறிப்பையும் கலாத்தியர் நூலில் தந்துள்ளார்.

திருமுழுக்கு யோவான் காலம் முதல் இயேசுவின் உயிர்ப்புவரை இயேசுவைப்பற்றி அறிவித்தனர். இறுதியாக இயேசு பிறக்கும்போதே அற்புதமாகப் பிறந்தார் என்பதைக் கூறுவதற்காக அவருடைய பிறப்பு நிகழ்ச்சிகள் அறிவிப்பில் சேர்க்கப்பட்டன.

இந்த அணுகுமுறையானது நற்செய்தி நூல்களில் மிகத்தெளிவாகக் காணக்கிடக்கிறது. இயேசுவினுடைய வாழ்க்கையைப்பற்றி முதலில் எழுதப்பட்ட மாற்கு நற்செய்தி நூலில், அவருடைய பிறப்பைப் பற்றிய குறிப்புக்கள் எதுவும் காணப்படவில்லை. அவரது அருள் அடையாளங்கள், பொழிவுகள், இறப்பு மற்றும் உயிர்ப்பு பற்றிய செய்திகளே தரப்படுகின்றன.

அடுத்து எழுதப்பட்ட மத்தேயு நற்செய்தி நூலில் இயேசுவின் பிறப்பைப்பற்றி ஓரளவு சுருக்கமாகவும், தொடர்ந்து எழுதப்பட்ட லூக்கா நூலில் இன்னும் விரிவாகவும் வாசிக்கின்றோம்.

தொடக்கத் திருச்சபையில் கிறிஸ்துவின் பிறப்போடு தொடர்புடைய ஞானியர்கள் கீழ்த்திசையிலிருந்து வந்து இயேசுவை வணங்கிய திருக்காட்சிப் பெருவிழா கொண்டாடப்பட்டது. கீழை நாட்டு ஞானியர் பொன், தூபம், வெள்ளைப்போளம் முதலியவற்றை இயேசுவுக்குக் காணிக்கையாக்கினர். இவ்வாறு திருக்காட்சி விழா இயேசுவின் இறப்புக்கும் உயிர்ப்பின் மாட்சிக்கும் முன்னறிவிப்பாகக் காட்டப்பட்டது.

கிறிஸ்தவம் உரோமைப் பேரரசில் பரவியபோது, பிற இனத்து மக்கள் கொண்டாடிவந்த "சூரியக் கடவுளின் பிறப்பு விழாவை" கிறிஸ்து பிறப்பு விழாவாக மாற்றிக் கொண்டாடினர். உலகின் ஒளியாக (யோவான் 9:5), உலகினை ஒளிர்விக்கும் உண்மையான ஒளியாக (யோவான் 1:9) வாழ்ந்த இயேசு, பாவ இருளை அகற்றிப் பரமனின் அரசைப் பூவுலகில் நிலைநாட்ட வந்தவர் எனும் சிந்தனையுடன் கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாடத் தொடங்கினர்.

### ஆ. நற்செய்தி நூல்களில் இயேசுவின் பிறப்பு: முரண்பாட்டுச் சிக்கல்கள்!

கிறிஸ்துவின் பிறப்பைப்பற்றி நாம் அறிய வருவதெல்லாம் மத்தேயு மற்றும் லூக்கா நற்செய்தி நூல்கள் வழியாக மட்டுமே. நற்செய்தி நூல்களுக்கு வெளியே, வேறு எந்த முக்கியமான வரலாற்றுக் குறிப்பும் இயேசுவினுடைய பிறப்பைப்பற்றிக் கூறுவதாகத் தெரியவில்லை. ஆண்டவரின் மகனாக இருந்தாலும், அரசனின் மனையில் பிறக்காமல், அற்ப மாடடைக் குடிலில் பிறந்ததால், அன்றைய உலகின் கண்களுக்கு அவரின் பிறப்பு பெரிதாகத் தெரியவில்லை.

மத்தேயுவும் லூக்காவும் இயேசுவினுடைய பிறப்பைப் பற்றி எழுதியிருந்தாலும், அவர்கள் இயேசுவின் பிறப்பையும், அதையொட்டிய நிகழ்ச்சிகளையும் துல்லியமான வரலாற்றுக் குறிப்பாக மட்டும் கொடுக்க விரும்பினார்களா என்பது ஆய்வுக்குரியது. அப்படிக் கொடுக்க நினைத்தார்கள் என்றால் கீழ்க்கண்ட கேள்விகளுக்கு எவ்வாறு பதிலளிப்பது?

1. மத்தேயு நற்செய்தியில் யோசேப்பும் மரியாவும் இயேசுவைத் தூக்கிக்கொண்டு எகிப்திற்கு ஓடிப்போனார்கள் என்று பார்க்கின்றோம். இயேசுவின் வாழ்வில் இது மிகவும் முக்கியமான நிகழ்வு. ஆனால் லூக்கா நற்செய்தியாளரோ இதைப்பற்றிச் சிறு குறிப்புக்கூட கொடுக்கவில்லையே ஏன்?

2. இயேசுவின் காலத்து வரலாற்று ஆசிரியரான யோசேப்புஸ் என்பவர், ஏரோதுவின் கொடுமைகளைப்பற்றி விவரிக்கும்போது பெத்லகேமைச் சுற்றியுள்ள இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகள் கொல்லப்பட்டதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லையே ஏன்?

அதே நேரத்தில், இயேசுவின் பிறப்பு வரலாற்று நிகழ்வு அல்ல என்ற முடிவுக்கும் வந்துவிட முடியாது. ஏனெனில் மத்தேயுவும், லூக்காவும் இயேசுவினுடைய பிறப்பைப் பற்றிய அடிப்படை உண்மைகளில் ஒத்துப்போகின்றனர். இருவருமே, இயேசுவின் பிறப்பு நிகழ்ந்தது பெத்லகேமில் என்பதை ஏற்றுக்கொள்கின்றனர் (மத் 2:1, லூக் 2:5). மரியா கருவுற்றிருந்தது தூய ஆவியால்தான் என்பதை இருவருமே குறிப்பிடுகின்றனர் (மத் 2:19, லூக் 1:35). எனவே இயேசுவின் பிறப்பு வரலாற்று நிகழ்வு என்றால் அதை வரலாற்று நிகழ்வாக மட்டும் பார்க்காமல் இறையியல் ஒளியில் இருவரும் தர முயன்றதே இந்தச் சிறு முரண்பாடுகளுக்குக் காரணம்! மத்தேயுவும் லூக்காவும் இயேசுவின் பிறப்பையும் அவருடைய குழந்தைப் பருவ நிகழ்வுகளையும் தங்களுக்கேயுரிய பாணியில் வேறுபட்ட முறையில் அமைத்துக்கொண்டது இரு காரணங்களுக்காக என்று இறையியலாளர் கருதுகின்றனர்.

1. திருமுழுக்கு யோவான் மெசியாவாக இருப்பாரோ என்று எண்ணி, அவரை சிலர் பின்பற்றினர். திருமுழுக்கு யோவான் மனித முறைப்படிதான் பிறந்தார். ஆனால் இயேசுவோ தூய ஆவியால் பிறந்தார் என்ற உண்மையைச் சுட்டிக்காட்டுவதன் மூலம் இயேசுவே மீட்பர் என்ற கருத்து மிகவும் அதிகமாக வலியுறுத்தப்படுகின்றது.

2. மத்தேயுவும், லூக்காவும் தாங்கள் யாருக்கு நற்செய்தியை எழுதினார்களோ, அவர்களுடைய எண்ண ஓட்டத்திற்கு ஏற்பவும் அவர்கள் நற்செய்தியை முழுமையாக புரிந்துகொள்வதற்கு முன் தயாரிப்பாகவும், இயேசுவின் பிறப்பைத் தங்களுக்கேயுரிய நடையில் எழுதிக்கொண்டார்கள்.

இந்தக் கருத்தை நன்றாக விளங்கிக்கொள்ளுமாறு மத்தேயு மற்றும் லூக்கா நற்செய்தி நூல்களின்படி, இயேசுவின் பிறப்பும் குழந்தைப் பருவ நிகழ்வுகளின் முக்கியத்துவம் என்ன என்று பார்க்க வேண்டும்.

மத்தேயு நற்செய்தியில் பிறக்கும் இயேசு யூதருக்கும் புற இனத்தாருக்கும் மீட்பர். இயேசுவைப் புதிய மோசேயாக, புதிய இஸ்ராயலாக அவருடைய பிறப்பு மற்றும் குழந்தைப்பருவ நிகழ்ச்சிகள் வழியாகக் கூறி, இயேசு யூதர்களுக்கு எதிரானவர் அல்லர் என்ற செய்தியை ஆணித்தரமாக எடுத்துரைக்கிறார். இதன்மூலம் யூதர்களும், யூதக்கிறிஸ்தவர்களும் நேர்மறைக் கண்ணோட்டத்தோடு இயேசுவையும் அவருடைய செய்தியையும் அணுக அவர்களை தயாரிக்கிறார்.

லூக்கா நற்செய்தியில் பிறக்கும் இயேசு, ஒடுக்கப்பட்ட மானுடத்தின் மீட்பர். மத்தேயுவைப்போலல்லாமல், லூக்கா யூதரல்லாத பிற இனத்துக் கிறிஸ்தவ மக்களுக்குத் தமது நற்செய்தியை எழுதினார். எனவே இயேசுவை ஒரு யூதராக அன்றி, மானிடகுலம் அனைத்தின் மீட்பராக - இன்னும் சிறப்பாக, ஏழை எளிய ஒடுக்கப்பட்ட மக்களைத் தேடி அவர்களோடு உறவாடக்கூடியவராகத் தம் நற்செய்தி முழுவதிலும் காண்பிக்கிறார். இந்தக் கருத்தை அறிமுகப்படுத்தும் ஒரு தளமாக இயேசுவின் பிறப்பு மற்றும் குழந்தைப் பருவ நிகழ்ச்சிகளைப் பயன்படுத்துகிறார்.

இவ்வாறு மத்தேயு, லூக்கா இருவருமே இயேசுவினுடைய பிறப்பு மற்றும் குழந்தைப் பருவ நிகழ்ச்சிகளின் அடிப்படை வரலாற்று உண்மைகளை மாற்றாமல், அதேநேரத்தில் இறையியல் கருத்துக்களைச் செறிவாக எடுத்துச் சொல்லும் தளமாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்பதை உணரவேண்டும்.

### இ. இயேசுவின் பிறப்பு விடுக்கும் அறைகூவல்

இயேசுவின் பிறப்பு ஒரு வரலாற்று நிகழ்வு என்பதோடு அதன் முக்கியத்துவம் முடிந்துவிடவில்லை. அப்படி நினைத்தோமென்றால் ஒவ்வொரு ஆண்டும் கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாடுவதில் எந்த அர்த்தமும் இல்லை. மாறாகக் கிறிஸ்து பிறப்பு என்பது தொடர் அறைகூவல்களை நம் கண்முன் வைத்து, நம்மைப் புதிய பிறப்புக்கு அழைத்துச் செல்லவேண்டும்.

1. கிறிஸ்து பிறப்பு விடுக்கும் முதல் அறைகூவல் பண்பாட்டு மயமாக்கல் தளத்தில் அமைந்துள்ளது. பண்பாட்டு மயமாக்குதல் என்பது, நற்செய்தியானது மக்கள் பண்பாடுகளின் தன்மைகளை உள்வாங்கி மக்களைச் சென்றடைவதாகும். கிறிஸ்து கடவுள் தன்மையில் விளங்கினாலும், மனிதனை மீட்க மனிதனாக மாறினார். மேலும் மத்தேயுவும், லூக்காவும், நாம் மேலே பார்த்ததுபோல, நற்செய்தியைத் தாங்கள் யாருக்கு எழுதினார்களோ அவர்களின் பண்பாடுகளை உள்வாங்கி, அவற்றின் வழியாகக் கொண்டு சென்றனர்.

ஆனால் 500 ஆண்டுகளாக நம் மண்ணில் தொட்டிச் செடியாக இருக்கும் கிறிஸ்தவம், தொட்டியை உடைத்து தன்னைச் சுற்றி உள்ள மண்ணோடு ஐக்கியமாகாததன் காரணமாக, இன்னும் வேர்விட்டு வளர முடியாமல் தொட்டிக்குள்ளே முடங்கிக் கிடக்கிறது என்பது கசப்பான உண்மை

1. "அவர் செல்வராயிருந்தாலும், நாம் செல்வராகும்படி அவர் நமக்காக ஏழையானார்" (2 கொரி. 8:9) என்று புனித பவுலடிகளார் கூறுவதுபோல ஏழையர் சார்பாக நிலைப்பாடு எடுத்து அவர்களுக்காக உழைக்க தமது பிறப்புமுதல் ஏழ்மையான சூழ்நிலையையே தேர்ந்துகொண்டார். தலை சாய்க்கக்கூட இடமில்லாமல் வாழ்ந்த இயேசு இறப்பு வரை ஏழைகளில் ஒருவராகவே வாழ்ந்தார். மாட்டுத் தொழுவத்தில் நடந்த அவரது பிறப்பு அவரின் ஏழைகள் சார்பான நிலைப்பாட்டைப் பறைசாற்றியது. ஏழையர் சார்பாக நமது நிலை என்ன என்று கொஞ்சம் சீர்தூக்கிப் பார்க்க அழைப்பு விடுக்கின்றது கிறிஸ்துவின் பிறப்பு.

2. லூக்கா நற்செய்தியின்படி, இயேசு பிறந்தவுடன் மாட்டுத் தொழுவத்தில் உள்ள தீவனத்தொட்டியில் கிடத்தப்படுகின்றார். (2:12). தீவனத்தொட்டி மாடுகளுக்கு உணவு இடும் இடம். தன்னையே முழுமையாக இந்த உலகம் உய்வதற்காக உணவாகப் படைக்கப்போவதன் முன் அடையாளமாகும். இறைவன் தம்மையே முழுமையாக உணவின் வடிவில் வெளிப்படுத்துவது மிக முக்கியமானது.

கோடிக்கணக்கான மக்கள் கொடிய வறுமையில் வாடும் காலத்தில் நாம் இருக்கின்றோம்.

இயேசுவும் வறுமையில் வாடும் - உணவிற்காக அலையும் மக்கள்மீது அக்கறைகொண்டார். தம்மையே பலியாக்கி இந்த உலகம் உய்யத் தம்மை உணவாக அளித்த இயேசு, அதன் முன் அடையாளமாக மாட்டுத் தொழுவத்தில் பிறக்கின்றார். இந்த உலகம் வாழ நம்மையும், நம் சுயநலத்தையும் பலியாக்க இயேசுவின் பிறப்பு அழைக்கின்றது.

3. மத்தேயு தரும் வழிமரபின் அட்டவணையில் நான்கு பெண்களின் பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. அவர்கள் சமூகத்தின் பார்வையில் புற இனதவர்களாக, பாவிகளாக, தாழ்த்தப்பட்டவர்களாகக் கருதப்பட்டாலும், இறைவன் அவர்களை வெறுக்காமல், தமது மீட்புத் திட்டத்தில் பங்கெடுக்க அனுமதித்தார் என்பதே பதிலாகக் கிடைக்கிறது. பிறரை இழிவானவர்களாக, நம்மைவிடக் கீழானவர்களாக எண்ணும் பரிசேயத்தை விட்டுவிட்டு, அவர்களை மனிதர்களாக மதித்து வாழ அறைகூவல் விடுவது இயேசுவின் பிறப்பு.

4. மத்தேயு நற்செய்தியாளர் இயேசுவின் தலைமுறை அட்டவணையை 14 தலைமுறைகள் உள்ள மூன்று பகுதிகளாகப் பிரிக்கிறார் $3 \times 14 = 42$. இயேசுவுக்கு முந்தைய 42 தலைமுறைகளை $6 \times 7 = 42$ என்றும் பிரிக்கலாம் என்று இறையியலாளர்கள் கருத்துரைக்கின்றனர். விவிலியத்தில் ஏழு என்பது நிறைவை, முழுமையைச் சுட்டிக் காண்பிக்கிறது. ஏழேழு தலைமுறைகள் அடங்கிய ஆறு யுகங்களுக்குப்பின், ஏழாவது யுகத்தை (= நிறைவின் யுகத்தை) இயேசு தொடங்கி வைக்கிறார் என்ற செய்தியை மத்தேயு நற்செய்தியாளர் சுட்டிக்காட்டுகிறார். நிறைவின் காலத்தை தொடங்கிய இயேசுக்கிறிஸ்து, அவரைப் பின்பற்றுகின்ற கிறிஸ்தவர்களாகிய நாமும் நிறைவின் மக்களாக வாழ அழைப்பு விடுக்கிறார்.

### நிறைவாக

இயேசுவின் பிறப்பு ஒரு தனிமனிதனின் பிறப்பு மட்டும் அன்று. மாறாக ஒட்டுமொத்த மானிட சமூகத்தைப் புதுப்பிறப்பிற்கு அழைத்துச் செல்லும் ஒரு நிகழ்வு. சாவு, அநீதி ஆகியவற்றின் பிடியில் சிக்குண்டு தவிக்கும் மானிட சமூகத்திற்கு விடியலைத் தரவல்ல பிறப்பு இயேசுவின் பிறப்பு. ஒவ்வொரு ஆண்டும் கிறிஸ்துவின் பிறப்பு கொண்டாடப்படும் வேளை சாவின் சக்திகளுக்குச் சாவுமணி அடிக்கின்ற நாளாக இருக்க வேண்டும். வரலாற்றில் நடந்த இயேசுவின் பிறப்பை வெறும் நினைவு நாளாக மட்டுமன்று, மாறாக அவருடைய மதிப்பீடுகளை இன்னும் உத்வேகத்தோடு இப்பூமியில் விதைப்பதற்கான ஒரு அறிவுறுத்தலாகக் கொண்டாட வேண்டும்.

*நன்றி தோழன்.*

# கிறிஸ்மஸ் கவிதைகள்

*MERRY CHRISTMAS * JOYEUX NOEL * MERRY CHRISTMAS * JOYEUX NOEL*

## பாரம்மா பாரினை!



அருள் வடிவான அன்னையே
அமலனைத் தந்த தாயே.
அகிலத்தில் அட்டகாசங்கள் அழிந்திட
அருள்வேண்டி வந்தேன்.
ஆண்டவனின் அன்பினிலே
ஆனந்தம் கொள்பவளே
ஆக்கமெல்லாம் அழிகின்றதே
ஆறுதலில்லா அவலநிலையைப் பாரம்மா!



இறைவன் திருச்சித்தத்தை
இன்பமாய் ஏற்றவளே
இரக்கம் கொண்டவளே
இரவுகளில் நடப்பதைப் பாரம்மா!
ஈசனை ஈன்றவளே
ஈருலகு மூவுலகு ஆள்பவளே
ஈகூட இறப்பதை விரும்பாதவளே
ஈட்டி கொண்டோர் மனதைப் பாரம்மா!



உலகமே கொள்ள முடியாதவரை
உன் கருவறையில் கொண்டாயே
உத்தமனின் தாயே உயிர் காப்பவளே
உடைகின்ற கருக்களைப் பாரம்மா!
ஊக்கமதைத் தருபவளே
ஊண், உறை அளிப்பவளே
ஊர் எல்லாம் கொலை, கொடுமை
ஊமைபோல் வாழும் எம்நிலை பாரம்மா!

எத்திசையினரும் எம்மதத்தவரும்
எண்ணி எண்ணி மகிழும் தாயே
எரிகின்ற எம் தேசம் எட்டி வந்து பாரம்மா!



ஏழைகளின் தாயே
ஏக்கங்களைத் தீர்ப்பவளே
ஏழை, பணக்காரர் பாகுபாட்டால்
ஏங்கி வாழும் ஏழையின் நிலை பாரம்மா!



ஐக்கியம்தனை விரும்புபவளே
ஐயங்களை நீக்குபவளே
ஐந்தறிவின் நிலை ஆறறிவுக்கும் ஆனதால்
ஐயம் கொண்டு வாழும் எம்நிலை பாரம்மா!
ஒற்றுமையில் மகிழ்வு கொள்பவளே
ஒன்றுபட்டு வாழ்வோரை ஆதரிப்பவளே
ஒன்றுகள் பத்தாகிப் பிரிந்ததால்
ஒடுக்குமுறையில் வாழும் எம்நிலை பாரம்மா!



ஓடியே எலிசபெத்திற்கு உதவி புரிந்தவளே
ஓராயிரம் பக்தர்களையும்
ஒன்றாய்ப் பார்ப்பவளே
ஓநாய்கள்போல் நடமாடிப் புரியும்
ஓரவஞ்சகரின் கொடுமைகளைப் பாரம்மா!
ஔவியமாய் நோய்தனைத் தீர்ப்பவளே
ஔவையார் போன்ற வயதுடையோர்
அன்பு ஆறுதல் இன்றி
இதயம் வெடித்து வாழும்நிலை பாரம்மா!

*ஆ. யு. றாஜினி,*
*தோணிக்கல், வவுனியா.*

## புத்தம் புது பூமி படைத்து...



புத்தம் புதுப் பூமி படைத்து
அதில் அன்பு என்ற விதை விதைப்போம்.
இரக்கம் என்ற நீர் ஊற்றி
பகிர்வு என்ற மரம் வளர்ப்போம்.
நட்பு என்ற உரம் இட்டு
சமாதானம் ஏன்ற கனி பறிப்போம்.
புத்தம் புது பூமி படைப்போம்
அதில் அன்புக்கு இடமளிப்போம்.
துன்பத்தை விலக்கிவிட்டு
இன்பத்தை நிலைநிறுத்துவோம்.
தீமையைச் சுட்டெரித்து
நன்மைக்கு ஒளியேற்றுவோம்.
யுத்தத்தை ஒழித்துவிரட்டி
சமாதானத்தை வாழ வைப்போம்.
ஒற்றுமையை நிலை நாட்டி
அதில் இறைவார்த்தையை எடுத்துரைப்போம்
புத்தம் புது பூமி படைப்போம்
அதில் புதுவாழ்வு வாழ்ந்திடுவோம்.


*அ. சந்திராளன், ஆத்திக்குளி, முருங்கன்*

## யேசு பிறந்தார்

அன்பின் உருவமாய் அவனியில் நீ உதித்தாய்.
மக்கள் அனைவருக்கும் மங்கள நாள் - நீ பிறந்த நாள்
மாடிவீட்டிலன்றி மாட்டுத்தொழுவமதில் நீ பிறந்தாய்
ஏழ்மையின் உருவத்தை எமக்கு உணர்த்தியுள்ளாய்
உன்பிறப்பு எம்மனைவருக்கும் புதுப்பிறப்பாக மாற
பாலக யேசுவே அருள் புரிவாயாக!

*தி. றேகா, பெரியமுறிப்பு, குஞ்சுக்குளம்*

## எதை எழுதுவேன் என் மாபரனுக்கு



மாட்டுத் தொழுவத்தில் பிறந்த மாபரனுக்கு
மங்கை இவள் எழுதும் மகஜர்.
மகஜர் எழுதவெனப் பேனாவை எடுத்தேன்
எதை எழுதுவேன் எனும் சிந்தையில் ஆழ்ந்தேன்.
காதைப் பிளக்கும் குண்டு மழையைப் பற்றியா?
கோரத்தாண்டவமாடும் இயற்கை அனர்த்தம் பற்றியா?
தொடர்ந்துகொண்டே செல்லும் படுகொலைகளையா?
நீண்டு செல்லும் காணாமலாக்கப்பட்டோர் பட்டியலையா?
எதைப் பற்றித்தான் எழுதுவேன்?
மூடப்பட்ட ஏ 9 வீதியைத் திறப்பது பற்றியா?
உறவுகளைப் பிரிந்து அவஸ்தைப்படும் உள்ளங்களையா?
பொருளாதாரத் தடை பற்றியா?
பொருட்களின் விலையேற்றம் பற்றியா?
அலரி விதைக்குப் பலியாகிய கொடுமையையா?
அழிவுப்பாதையில் செல்லும் கல்விநிலை பற்றியா?
முடக்கப்படும் உரிமைக்குரல்கள் பற்றியா?
மறைமுகமான அச்சுறுத்தல்கள் பற்றியா?
மொத்தத்தில் தொலைந்துபோகும் மனிதத்தையா?
எதை எழுதுவேன் என் மாபரனுக்கு.

*மன்னா அபிமானி, பூவரசன்குளம், வவுனியா.*

## மாமன்னர் பிறந்துவிட்டார்

மாடடைக் குடிலினிலே மாமன்னர் பிறந்துவிட்டார்
மாநிலத்தின் மாசுகளை மாட்சியுடன் மாற்றிடவே
ஏழ்மையினை ஒழித்திடவே ஏழைகள் வாழ்ந்திடவே
ஏசுபிரான் பிறந்துவிட்டார் எந்தனுக்கு வாழ்வளிக்க
படிக்கவில்லை பட்டங்கள் பாங்குடனே வாழ்ந்துவிட்டார்
பாமரரை வாழவைக்க பாலகன் பிறந்துவிட்டார்

*ஏ. குயின்ரா, சாளம்பன்.*

## தெய்வக் குழந்தை

தெய்வக் குழந்தை - இந்த
உலகத்தில் பிறந்துள்ளது
வாருங்கள் புகழ் பாடிடுவோம் - வல்ல
இறைவனை வேண்டிடுவோம்.



மாரி மழைக் குளிரினிலே
பனிக்குளிரின் நடுவினிலே
மாமரி அரவணைப்பினிலே - தெய்வக்
குழந்தை உதித்துவிட்டார்.

உலகில் நல்லோர் வாழ்ந்திடவே
தீயோர் மனங்கள் மாறிடவே
அன்பு கருணை கொணர்ந்திடவே
தெய்வக் குழந்தை வந்துதித்தார்.

அன்பினாலே பகைமை வெல்ல
அன்பே அனைத்திலும் உயர்வென்று
அகிலம் முழுவதும் அன்பை விதைத்து
அன்பிற்காக உயிர் கொடுக்க - ஓர்
தெய்வக் குழந்தை தோன்றினார்.

*ஜோ. டிலக்ஷா, றெயின்போ அவநியூ, பெற்றா, மன்னார்*

## யேசு பாலன் பிறந்துவிட்டார்

மார்கழிக் குளிரினிலே மாமரியின் மடியினிலே
மாடடையும் தொழுவமதில் வந்துதித்தார் யேசு பாலன்
ஏழ்மையின் வடிவமதாய் எழில் வதனன் யேசுபாலன்
பாவ இருள் போக்கிடவே பாரினிலே வந்துதித்தார்.
பணிவிடை புரிபவனாய் பாலகனாம் யேசுபாலன்
பரிவிரக்கம் தாம் பூண்டு பரமனவர் வந்துதித்தார்.
ஒளி நிலவாய் உத்தமரும் உலகினையே மாற்றிடவே
உண்மையதைப் பறைசாற்ற உன்னதரும் தோன்றினாரே.....

*அ. பவநீதன், மன்/ கருங்கண்டல் றோ.க.ம.வி.*
*காத்தாங்குளம்*

## மன்னவன் பிறந்திட்டான்

மார்கழிக் குளிரினிலே மாட்டுத் தொழுவத்திலே
மாமரி மடியினிலே மங்கையர் வயிற்றினிலே
மன்னவன் பிறந்திட்டான்.
மண்ணில் வேந்தனாய் மக்கள் மத்தியில்
மானிடர் பாவம் போக்க மமதையை மறந்திட
மலர்ந்திடும் சமாதானத்தைத் தந்திடவே
மன்னவன் பிறந்திட்டான்.
மணம் வீசும் தூபத்துடன் மன்னர்கள் சூழ்ந்திடவே
மண்ணுலகில் ஒளி பிறந்திடவே
மானிடர் அனைவரும் சந்தோஷத்தில் திழைத்திடவே
மன்னவன் பிறந்திட்டான்.
மக்கள் அனைவருக்கும் மகிழ்ச்சி ஊட்டும் செய்தியொன்றாம்
மண்ணில் வேந்தன் விண்ணில் ராஜன்
மனுக்குலத்தை மீட்டெடுக்க மாபரன் இயேசு பாலன்
மாமரி மடியில் பிறந்திட்டான்.

*யு. ஜெஸ்லின் மடுத்தீன், தலைமன்னார்.*

## பிறப்பாயோ இயேசு பாலா



வார்த்தையுமே மனுவுருவாய் - வாழ்வின்
இருளகற்றும் ஒளிப்பிளம்பாய்
அருள் மழை பொழியும் இறைமகனாய் - மானிடர்
இடர் நீக்கும் அருட்பொழிவாய்
பொங்கு மனம் அமைதிபெற
கொதிக்கும் உள்ளம் குளிரடைய
கதிரவனாய் கார்முகிலாய்
அருள்பொழியும் அருளூற்றாய்
அவதரித்தார் இவ்வுலகில் கிறிஸ்து எனும் யேசுபாலன்.



போரினாலே புலம் பெயர்ந்து - வாழ்வில்
போற்றிச் சேர்த்த பொருளிழந்து
அசைந்தாடிய அங்கமிழந்து
அங்கவீனராய் அவலமுற்று
அகதிகளாய் அநாதைகளாய் - எம்மண்ணில்
அவலத்தோடு அமைதியிழந்து
வரட்சியுற்ற உள்ளங்களில் பிறப்பாயோ இயேசு பாலா?

உடலிழந்து உறவிழந்து
உண்மையிலே உயிர் இழந்து
உலகமயமாக்கலிலே உண்மை வாழ்வின் பொருளிழந்து
நாகரீகமெனும் நாமத்திலே - நாளுக்கு நாள்
நன்மைதரும் உண்மைகளை பொய்மையினால் அலங்கரித்து
நடைப்பிணமாய் நலமிழந்து வாழுகின்ற எம்மண்ணில்
நலமிகவே பொழிந்து நீயும் பிறப்பாயோ இயேசு பாலா?

நாளுக்கு நாள் நல்லவராய் நானிலமும் நாம் விளங்கி
நன்மைதரும் உண்மையிலே நாற்றிசையும் உம்புகழ் பரவி
நல்லவராய் வல்லவராய் - நாளும்
இருளினிலே ஒளியேற்ற இகமதிலே மகிழ்வூட்ட
இன்னலற்ற மண்ணகத்தை வளர்த்திடவே
இன்று வந்து பிறப்பாயோ இயேசு பாலா?



யாவருமே சோதரராய் - மண்ணில்
யார் குலமும் ஓர் குலமாய்
ஓர் உலகம், ஓர் குடும்பம் ஆகிடவே
ஒற்றுமையின் கூரையின்கீழ் வாழ்ந்திடவே
வேற்றுமைகள் இல்லை எம்மில் - இனியும்
வேதனையின் நாமம் இல்லை
ஒருமித்து மகிழ்வுறவே, ஒன்றித்து வாழ்ந்திடவே
ஒற்றுமையின் ஒன்றிப்பால் - உலகில்
இறையாட்சி மலர்ந்திடவே
வந்துநீயும் பிறப்பாயோ இயேசு பாலா?



*அருட்சகோ.தே.ஆ. மெனோ பஸ்ரி ஜயந்த (அ.ம.தி)*
*டீ மசனட் இறையியலகம், கொழும்புத்துறை,*
*யாழ்ப்பாணம்.*

## மலரட்டும் இரண்டாயிரத்து ஏழாம் ஆண்டு

புதிய ஆண்டே வா பூத்துக் குலுங்க வா
பழைய ஆண்டில் பரமன் இயேசு நடத்தினதை
மறவேன் என்றும் உள்ளத்திலே
மலரும் ஆண்டில் துணை புரிவார்
இரண்டாயிரத்து ஆறாம் ஆண்டு கழியட்டும்
இரண்டாயிரத்து ஏழாம் ஆண்டு மலரட்டும்
பயந்திட வேண்டாம் என் மனமே
பரமன் இயேசு முன்சென்று நடத்துவார்.

*லெ. றொசாணி பறுனாந்து, அரிப்பு*

## இதயத்தைத் திறந்திடு



சின்ன யேசு பாலகனே சிந்தை கவரும் பாலகனே
எங்கள் இதயம் வந்திடு என்றும் உவகை பொங்கிட.
உள்ளக் கதவைத் திறந்திடு உந்தன் புகழ் பரவிட
உலகம் உந்தன் பெயர்தனை உச்சரித்துப் போற்றிட
மனித மனங்கள் மாறிட மகிழ்ச்சி எங்கும் ஓங்கிட
பாவம் கரைந்து ஓடிட பாருலகில் வந்திடு.
பிறர் அன்பு பெருகிட பிறந்த பாலன் யேசுவே
எங்கள் அன்பு வளர்ந்திட என்றும் வந்து தங்கிடு.
துன்ப துயரம் நீங்கிட வறுமை பிணி அகன்றிட
குழந்தை யேசுவந்திடு குவலயம் ஆண்டிட!

*சந்தியோகு சவிரியம்மா, கொவ்வங்குளம்,*
*நானாட்டான்.*

## சமாதானத்தை நோக்கி

புத்தாண்டு பிறந்துவிட்டது புதுமணம் வீசிவிட்டது.
புது ஆடை அணிந்திடுவோம் புதிய ஆண்டில் நாம்.
சமாதானம் வந்துவிட்டது சாந்தியும் நிலைத்துவிட்டது.
சாதிபேதம் ஒழிந்து விட்டது சாந்தமாய் இனி வாழ்ந்திடுவோம்.
போரின் முழக்கம் ஓய்ந்துவிட்டது
போட்டி பூசல் அழிந்துவிட்டது
போராளிகளின் மனம் மாறிவிட்டது
போவோம் இனி நாம் சமாதானத்தை நோக்கி
என்ற நிலை எப்போ வரும்?

*திருமதி. ரி. ஜே. சகாயராணி பெனாண்டோ, பேசாலை*

# இன்றைய தமிழ் மண்ணில் இயேசுவின் பிறப்பு

அருட்கலாநிதி. ஸ்ரனி அன்ரனி (அ.ம.தி)

உலகில் பிறக்கின்ற ஒவ்வொரு மனிதனுடைய பிறப்பும் சிறப்பானதே. ஏனெனில் ஒவ்வொரு மானிடனும் கடவுளின் சாயலாகவே கருவில் உருவாகி மண்ணிலே அவதரிக்கின்றான். இப்பிறப்பின் சிறப்பு அவனுடைய பிறப்பின் சூழலையோ, பின்னணியையோ, செய்கின்ற தொழிலின் மேன்மையையோ சார்ந்ததன்று. மாறாக பிறந்ததன் பயனை அடையவேண்டும் என்றால் பிறப்பின் மேன்மையை உணர்ந்து, எல்லோருடனும் நட்புடன் உறவாடி, அவர்களோடு தோள்கொடுத்து ஒன்றாகக் கலந்து, இன்ப துன்பங்களில் வாழ்வின் உணர்வுகளோடு கலந்து வாழ்வதுதான் பிறப்பின் சிறப்பியல்பாகும்.
தத்துவத்தில் கடவுள் இரண்டு இயல்புகளை கொண்டவராக நோக்கப்படுகின்றார்.

01. கடந்தவர் (Transcendent)
02. கலந்தவர் (Immanent)

## கடவுள் கடந்தவரா?

கடவுள் என்றாலே கடந்தவர் என்று நாம் நினைப்பதுண்டு. ஆனால் நாம் நம்பிக்கையில் ஏற்றுக்கொள்ளும் கடவுள் கடந்து நிற்பவர். இது அவருடைய வரம்பில்லா, எல்லையில்லா பிரசன்னத்தையும், இருப்பையும், வல்லமையையும் குறித்து நிற்கலாம்.

ஆனால் காலங்களைக் கடந்த கடவுள் இயற்கையில் மனிதனில் கல்க்காதவரை 'கடந்த கடவுள்' என்பதில் அர்த்தம் இருக்கமுடியாது. வரலாற்றில் இறைவெளிப்பாட்டின் மூலம் கடந்த கடவுள் கலந்து விடுகின்றார்.

இன்று தமிழ் மண்ணில் நடக்கும் மனித அவலங்களில் கடவுள் கடந்தவராயினும் கலந்துநின்று அவலப்படும், அல்லலுறும் மனிதரைத் தூக்கிவிடும் கடவுள் நம்பிக்கையே இன்று நம்பிக்கையின் அடித்தளமாக நோக்கப்படவேண்டும். பழைய ஏற்பாட்டு இறைவன் யாவே கடந்த கடவுள் வகையை சேர்ந்தவராயினும், இஸ்ராயேல் மக்களின் தேவையில் துன்ப நேரங்களில், அவலங்களில் ஈடுபாடு கொண்டவராக செயற்பட்டார். குறிப்பாக அடையாளங்கள், அருங்குறிகள், இறைத்தூதர்கள் வழியாகச் செயற்பட்டார்.

இன்று தமிழ் மண்ணில் அரங்கேறும் துன்பவியல் நிகழ்வுகளில் செயற்படும் (active) கடவுளாகவே மக்களின் கடவுள் பற்றிய எதிர்பார்ப்பு இருக்கமுடியும். போரின் அவலங்கள் மற்றும் தினந்தோறும் நடந்தேறும் கொலைகளின் மத்தியில் கடந்து நின்றாலும் கடவுள் மனித இன்னல்களில், இயலாமைகளில் பங்கெடுக்கும் கடவுளாகவே இறைவனைப் பற்றிய நம்பிக்கை ஒவ்வொரு துன்புறும் உள்ளத்திலும் ஏக்கமாக வெளிப்படமுடியும். தமிழ் மண்ணில் இன்று நாம் எதிர்கொள்ளும் மடிவுகளையும், அழிவுகளையும் கடந்து நின்று கட்டுப்படுத்த முடியாத ஒரு கடவுளையா நாம் இன்றும் நம்பிக்கொண்டிருக்க வேண்டும் என்ற வினாவை எழுப்புகின்றது. இது நமது நம்பிக்கைக்கு சவாலாக எழும்புகின்றது.

இறை நம்பிக்கை என்பது வெறும் கோட்பாடுகளில் முடக்கப்பட்ட ஒரு மாயை அல்ல. மாறாக மனித வாழ்வின் பயணத்தின் அன்றாட நிகழ்வுகளோடு ஒன்றித்துப்போன கடவுளின் பிரசன்னத்தையும், தலையீட்டையும் குறித்து நிற்கும் ஆழ்ந்த இறையனுபவமாகும். எனவே தமிழ் மண் பிரசவிக்கும் மண்டையோடுகளின், சிதைவுகளின் மத்தியில் கடந்து நின்று வாழும் உயிருள்ள கடவுள் மனிதருக்கு வாழ்வு பற்றிய நம்பிக்கையை ஊட்டாவிடில் 'கடந்த கடவுள்' என்பதை வெறும் தத்துவமாகவே கருத இடமுண்டு.

## கடவுள் கலக்க வேண்டும்

தற்கால இறையியலின்படி கடவுள் என்றால் கடந்து நிற்பவர் மட்டுமல்ல, கலந்து இருப்பவரும் ஆவார். மக்கள் துன்பப்படும்போது, தேவையில் துடிக்கின்றபோது, அடிமைத்தனத்தில் சிக்குண்டு தவிக்கின்றபோது கலக்காத கடவுள், ஈடுபடாத கடவுள், கடவுளாக இருக்கமுடியாது. அப்படிப்பட்ட கடவுளை நம்பி வழிபடவேண்டியது அவசியமில்லை. மனிதனைத் தன்னுடைய சாயலாகவும், பாவனையாகவும் படைத்த கடவுள் எவ்வாறு அவன் துன்பப்படும்போது வெறுமனே இருக்க முடியும்? எனவே கடவுள் கல்லல்ல, மக்களில் கலந்தவர். அவர்தான் புதிய ஏற்பாட்டு இறைமகன் இயேசு. இவர்தான் இம்மானுவேல் - *கடவுள் நம்மோடு.* இதைத்தான் "வாக்கு மனிதனானார், நம்மிடையே குடிகொண்டார்" (யோவான் 1: 14) என்று யோவான் நற்செய்தியாளரின் கூற்று வெளிப்படுத்துகின்றது.

இதுவே இயேசுவினுடைய மனுஏற்பின் இன்றியமையாத கூற்றாகும். கடவுள் மனிதனாகி, மனித வாழ்வின் உணர்வுகளோடும், துன்பங்களோடும், மடிவுகளோடும் இரண்டறக் கலந்தவர். புதிய ஏற்பாட்டுக் கடவுள் பாவ அடிமைத்தளைகளிலிருந்து விடுதலை, விடியலைத் தரமட்டுமன்றி, சமூக, அரசியல், பொருளாதார அடிமைத்தனங்களிலிருந்தும் விடிவும், மீட்பும் தருவதற்காகக் கலக்கின்ற கடவுளாக இயேசுவின் மனித அவதாரம் மூலமாக செயற்படுகின்றார். இதுவே கிறிஸ்து பிறப்பு விழாவின் மையமாகும், அதாவது 'கடவுள் நம்மோடு' என்பதாகும்.

இன்று தமிழ் மண்ணில் இயேசுவின் மனுவேற்பானது, துன்புறுகின்ற, இடம்பெயர்ந்து வாழுகின்ற, உறவுகளைப் பிரிந்து தவிக்கின்ற ஒவ்வொரு உள்ளத்திலும் நிகழ வேண்டும். இயேசுவின் அவதாரம் அங்கலாய்ப்புடன், அவதியுறும் அகதிகள், கைவிடப்பட்டோர் மத்தியில் நம்பிக்கையை பிறக்கச் செய்யவேண்டும். கடவுள் தூர இருந்து வேடிக்கை பார்க்கும் கடவுளாக அல்ல, தமிழ் மண்ணில் அவலங்களோடு ஒன்றித்துப்போன கடவுளின் பிறப்பாக நோக்கப்படவேண்டும்.

எனவே சிலர் கூறுவதுபோல் கறுத்த கிறிஸ்து பிறப்பு விழா (Black X'mas) என்று சோகமாக கொண்டாடப்பட வேண்டிய நிகழ்வல்ல, மாறாக மரண நிழலில் வாழுகின்ற தமிழ் மக்களின் உணர்வுகளோடு இரண்டறக்கலந்து பிறக்கின்ற கடவுளின் பிறப்பு விழாவாகவே இது கொண்டாடப்பட வேண்டும். கடவுள் எப்போதெல்லாம் நம்மில் கலந்து நம்மோடு வாழ்கின்றாரோ, அப்போதெல்லாம் நமக்கு மகிழ்ச்சி வாழ்வு பிறக்கின்றது. கடவுள் கலந்தவர் என்றால் பிறக்கின்ற இயேசுவும் தமிழ் மக்களின் துன்பங்களில் இரண்டறக் கலந்து உறவாடி மீட்பு என்னும் நம்பிக்கையை, விடியலைக் கொணரப் பிறந்தவரே.

மனுஏற்பது என்ப்து வெறும் மனித உடலை மட்டும் தாங்கும் இயல்பான நிகழ்வல்ல, மாறாக மனிதரின் முழு மனித விடுதலையை சுமந்து நின்று வெளிப்படும் வரலாற்று நிகழ்வேயாகும். இதன் அடிப்படையில் தமிழ் மண்ணில் இயேசுவின் பிறப்பானது தமிழ் மக்களின் முழு மனித விடுதலையைத் தாங்கி, உடைவுகளை, உள்மனக் காயங்களை உள்வாங்கிப் பிறந்த இன்றைய வாழ்வுச்சூழல் நிகழ்வாகும்.

இறப்புகளும், இயலாமைகளும், பெருகிவரும் இன்றைய சூழலில் இயேசுவின் பிறப்பு தமிழ் மண்ணில் 'கடவுள் நம்மோடு' என்ற கடவுளின் கலந்து நிற்கும் இயல்பிற்கு உத்தரவாதமளிக்கின்றது. உடல்க்குவியல்களின் பின்னணியிலும், எமது மண்ணில் பிறக்கின்ற ஒவ்வொரு குழந்தையும் கடவுள் இன்னும் நம்மைக் கைவிட்டுவிடவில்லை என்ற செய்தியைக் கொண்டுவருகின்றது என்ற கவிஞர் தாகூரின் வார்த்தைகளை நினைவூட்டுகின்றது.

கடவுள் நம்மோடு கலந்துவிட்டாரென்றால், நாமும் தமிழ் மண்ணில் துன்புறும் ஒவ்வொரு சகோதரன், சகோதரியின் உள்ளத்தோடு இரண்டறக் கலக்கவேண்டும். அவர்களது தேவைகளில் உதவுவதோடு, செபித்து தோளோடு தோள்கொடுத்து சுமைதாங்கியாக வாழமுயற்சிப்பதே தமிழ்மண்ணில் இன்று கிறிஸ்து பிறப்பு விழாவை கொண்டாடுவதை அர்த்தமுள்ளதாக்க முடியும். இதுவே எமது மனுஏற்பாகும்.

# இயேசு எங்கே பிறந்திருக்கிறார்?

அருட்பணியாளர் ம. நிமல்ராஜ் (செ. தா.)

"ஒரு குழந்தை நமக்குப் பிறந்துள்ளார்" (எசாயா 9: 6).
ஜேர்மனி நாட்டின் ஒரு ஊரிலே இயேசு பிறப்பு விழா இரவு 12 மணிக்கல்ல, 12.30 மணிக்கே கொண்டாடப்படும். இயேசு அவ்வூர் ஆலயத்தில் அரை மணி நேரம் தாமதமாகவே பிறப்பார். அவ்வூர் குழந்தைகள், பெரியவர்களிடம் அதற்கு காரணத்தைக் கேட்டால் பெரியவர்கள் அக்குழந்தைகளுக்கு இனிமையான கதை ஒன்றைச் சொல்கிறார்கள்.

முன்னொரு காலத்தில் அந்த ஊரில் வயோதிபத் தாய் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் மிகவும் நல்லவர். ஒவ்வொரு கிறிஸ்து பிறப்பின்போதும் குழந்தை இயேசுவிற்கு அவர் தைத்த சட்டை ஒன்றை அணிவிப்பது வழக்கம். அந்த வருடமும் அவர் சட்டையை இயேசுவிற்கு அணிவிக்கக் காத்திருந்தார். இரவு 11.30 மணியளவில் யாரோ கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. கதவைத் திறந்தார். அங்கே மரண தேவன் நின்றுகொண்டிருந்தான். அந்த வயோதிபத் தாய், "எங்கே வந்தாய்?" என்றார். மரண தேவனோ "உன் உயிரை எடுத்து வரும்படி இயேசு ஆணையிட்டிருக்கிறார்" என்றான். அதற்கு அவர், "அப்படியென்ன அவசரம், இன்று கிறிஸ்மஸ் என்று அவருக்குத் தெரியாதா? அவருக்கு நான்தான் சட்டையை அணிவிக்க வேண்டும். சரி சரி இரவு 12 மணிவரை காத்திரு, பிறகு என்னை அழைத்துச் செல்லலாம்" என்றார். மரண தேவன் "ஐயய்யோ! என் வேலையே போய்விடும், ஆண்டவர் சொன்னபடி நான் நடக்க வேண்டும்" என்றான். அந்த வயோதிபத் தாய் வேறு வழியில்லாமல், சட்டையை ஊர் மக்களிடம் கொடுத்துவிட்டு, மரண தேவனின் இரதத்தில் புறப்பட்டாள்.

இயேசுவோ, அந்த ஊரில் பிறப்பதற்காக விண்ணகத்திலிருந்து மண்ணகத்திற்கு வந்துகொண்டிருந்தார். இரண்டு இரதங்களும் சந்தித்தன. வயோதிபத் தாய் இயேசுவை அழைத்து, "ஆண்டவரே உமக்கு என்ன அவசரம்? நான் உமக்கு வருடாவருடம் சட்டை தைத்துத் தருவதை மறந்துவிட்டீரா? நீர் பிறந்ததும் என்னை அழைத்திருக்கலாம் தானே" என்றார். "ஓ அந்தப் பாட்டியா நீ. நான் மறந்து விட்டேன். இப்பொழுது என்ன செய்யலாம்? நடந்தது இருக்கட்டும் வருத்தப்படாதே. நீ செய்த சிறு குற்றங்களை மன்னித்து உன்னை நேரே மோட்சத்திற்கு அனுப்பி வைக்கிறேன். அங்கிருந்து நீ உன் ஊரில் நான் பிறப்பதையும், உன் சட்டையை நான் அணிந்து கொள்வதையும் பார்க்கலாம்" எனச் சொல்லிவிட்டு, மரண தேவனைப் பார்த்து "இப்பாட்டியை நேரே மோட்சத்திற்கு கொண்டுபோய்ச் சேர்த்து விடு" என்றார்.

மரண தேவனோ "எனக்குப் பயமாக இருக்கிறது. மோட்சத்தின் காவலன் தாமதமாக வந்ததற்காக என்னை வெளியே நிறுத்தி விடுவான். நீங்களே நேரில் வந்து பாட்டியை மோட்சத்திற்கு அனுப்பிவிட்டு வந்தால் நலமாக இருக்கும்" என்றான். இயேசுவின் இரதம் திரும்பி விண்ணகம் சென்றது. இயேசு செய்ய வேண்டியதைச் செய்து முடித்தார். மணி 12! மீண்டும் இரதம் ஊருக்குப் புறப்பட்டது. இயேசு கோவிலுக்குள் நுழையும்போது மணி 12.30. ஆவலோடு காத்திருந்த மக்களெல்லாம் காரணத்தைக் கேட்டார்கள். இயேசு நடந்ததையெல்லாம் சொல்லிவிட்டு, "என்னை அன்பு செய்பவர்களுக்கு உதவி செய்வதற்காக நான் பிறக்கும் நேரத்தைக்கூட தள்ளிவைக்க நான் தயாராக உள்ளேன்" என்றாராம்.

இக்கதை உணர்த்தும் உண்மை என்ன? நாம் வாழும் இந்த யுகத்தில் மனித நேயம், மனித மாண்புகள் மறக்கப்பட்டு, மனித உரிமைகள் அழிக்கப்பட்டு, மனிதப் படுகொலைகள் உற்சாகப்படுத்தப்பட்டு, மனித வார்த்தைகள் மழுங்கடிக்கப்படும் சூழ்நிலையில் இயேசுவின் பிறப்பு எங்கே இருக்கும் என்பது கேள்விக்குறி. அதிலும் சாதி வேறுபாடுகளும், சமயப் பிரிவுகளும், பணம் படைத்தவன், ஏழை என்ற நிலைப்பாடும் மலிந்துவிட்ட நமது நாட்டிலே இயேசுவின் பிறப்பு கேள்விக்குறி. இன்னும் பணத்தால் உலக வாழ்வையே அனுபவித்துவிடலாம், பரம ஏழைகள் பரிதவித்தாலும், பாதி உயிர் போய் துன்பப்பட்டாலும் எனக்கென்ன என்ற நிலையில் உள்ளோரிடம் இயேசு பிறப்பாரா?

நாம் 21ம் நூற்றாண்டில் காலடி பதித்து விட்டோம். எத்தனையோ அரிய பெரிய சாதனைகளை உலகம் வியக்கக் கண்டுபிடித்து விட்டோம். ஆனால் இயேசுவோ இன்னும் எமது பெரிய ஆலயங்களிலோ, வீடுகளிலோ, ஏன் நமது உள்ளத்திலும் இன்னும் பிறக்கவில்லை. அவர் மாட்டுத்தொழுவத்தில்தான் இன்னும் பிறந்துகொண்டிருக்கின்றார்.



"இயேசுவே!
இவ்வருடமாவது
நீர் என் உள்ளத்தில்
பிறப்பீரா?"

# வாழ்வுதயம்

VALVUTHAYAM (Caritas - Mannar)

"நான் தாகமாய் இருந்தேன் என் தாகத்தை தணித்தீர்கள்"

VALVUTHAYAM (Caritas - Mannar)

போஷகர்
அதிவந்தனைக்குரிய
ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை

இயக்குனர்
அருட்தந்தை பெப்பி சோசை

Mannar Diocesan Centre For Justice, Peace And Human Development - Valvuthayam (Caritas - mannar), No. 17, Main Street, Mannar - Sri Lanka T.P: 023 - 2232140, Fax: 023-2232893, E-mail: valvum@slthet.lk


### வாழ்வுதயத்தின்

## தொழில் நுட்பப் பயிற்சியும் அதன் பரந்த விரிவாக்கமும்

வாழ்வுதயத்தின் தொழில்நுட்பப் பயிற்சிகள் இலவசமாகத் தேவைப்படும் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. அதேவேளை இப்பிரிவின் செயற்பாடுகளும் விரிவுபடுத்தப்படுகின்றது. அண்மைக் காலங்களில் ஒருசில இடங்களில் மட்டுமே இப்பயிற்சி நடைபெற்றது. தற்போது ஆறு விதமான தொழில் பயிற்சிகளும் ஆறு இடங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இப்பயிற்சியின் பயன்களாக பயிற்சியானது முற்றிலும் இலவசமாக வழங்கப்படுவதோடு பயிற்சியின் இறுதியில் தொழில்சார் பயிற்சிச் சான்றிதழ்களும் பயனாளிகளுக்கு வழங்கப்படுகின்றன. அத்தோடு ரூபா 5000/= பெறுமதியான உபகரணத் தொகுதியும் வழங்கப்படுவதோடு கடனுதவி தேவைப்படும் நபர்களுக்கு கடனுதவிகளும் I. L.O. நிறுவனத்தினால் வழங்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

இப்பயிற்சியில் இணைத்துக்கொள்ளப்பட்ட இலக்குப் பயனாளிகள் கீழ்வருவனவற்றுள் அடக்கப்படுகின்றனர். குறைந்த வருமானம் உடையோர், பெற்றோரை இழந்த பிள்ளைகள், தடுப்பு முகாமில் இருந்து விடுபட்டவர்கள், பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தியவர்கள், விசேட தேவைக்கு உட்பட்டவர்கள் (வலுவிழந்தோர்), யுத்தத்தில் இருந்து விடுபட்டவர்கள் போன்ற பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இப்பயிற்சிப் பிரிவின் முகாமையாளராக திரு. T. நீக்கிலஸ் துரம் அவர்களும் இப்பயிற்சியின் வளவாளராக திரு. J. G.. பாஸ்கரன் அவர்களும் கடமையாற்றி வருகின்றனர். இப்பயிற்சிகள் எதிர்காலத்தில் திறமையான தொழில்சார் வல்லுனர்களை உருவாக்கி விடும் என்பது குறிப்பிடத்தக்கது.

### கணனிப் பயிற்சியை பூர்த்திசெய்த மாணவர்களுக்கான

## சான்றிதழ் வழங்கும் வைபவம்




29.11.2006 அன்று வாழ்வுதயக் கணனி பயிற்சி நிலையத்தில் கணனிப் பயிற்சியை பூர்த்திசெய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம்.

வாழ்வுதயக் கணனிப்பயிற்சி நிலையத்தில் கணனிப் பயிற்சியை பூர்த்திசெய்த மாணவர்கள் 40 பேர் 29.11.2006 அன்று வாழ்வுதய மண்டபத்தில் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். இப்பயிற்சியில் க.பொ.த சாதாரணதர மாணவர்களுக்கும், க.பொ.த உயர்தர மாணவர்களுக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டது.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக வாழ்வுதய நிறுவனத்தின் முன்னைநாள் இயக்குனரும் தற்போதய சிறிய குருமட அதிபருமாகிய பி. யேசுராஜா அடிகளார் கலந்துகொண்டு சிறப்பித்தார். இந்நிகழ்வில் வாழ்வுதய நிறுவன இயக்குனர் அருட்தந்தை S. J. பெப்பி சோசை அடிகளாரும் உயிலங்குளப் பங்குத்தந்தையான அருட்தந்தை எஸ். வசந்தகுமார் அவர்களும், வாழ்வுதயப் பணியாளர்களும் மற்றும் பயிற்சியைப்பூர்த்திசெய்த மாணவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்பித்த அருட்தந்தை P. யேசுராஜா அடிகளார் கருத்துத்தெரிவிக்கையில் கணனிப் பயிற்சியானது மாணவ சமுதாயத்திற்கு மிகவும் தேவைப்படும் ஓர் பயிற்சியாக இருப்பதோடு எவ்வாறான அலுவலகங்களிலும் பணிபுரிவதாயின் இக்கணனி அறிவு அவசியம் தேவைப்படும் ஒன்றாக இருக்கிறது என்றும் கூறினார். பின்னர் வாழ்வுதய நிறுவன இயக்குனர் அருட்தந்தை S. J. பெப்பி சோசை அடிகளார் கருத்துத்தெரிவிக்கையில் இப்பயிற்சியானது அருட்தந்தை P. ஜேசுராஜா அடிகளார் வாழ்வுதயத்தில் இயக்குனராக இருந்த காலத்தில் ஆரம்பிக்கப்பட்டதாகவும், இப்பயிற்சியை பூர்த்திசெய்வதற்கான கணனிகளை மிகச் சிரமத்தின் மத்தியிலேயே அருட்தந்தை அவர்கள் பெற்றுக்கொடுத்துள்ளார் என்றும் கூறினார். இயக்குனர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் இவ்வாறான பயிற்சிகளை வாழ்வுதயம் பல சிரமங்கள் மத்தியில்தான் பயிற்சிகளைப் பூர்த்திசெய்கின்றது எனக் கூறினார்.

### வாழ்வுதய உதவிக்கரப் பிரிவின்

## நடமாடும் சேவை

மன்னார் வாழ்வுதயத்தின் உதவிக்கரப் பிரிவின் நடமாடும் சேவைகள் அச்சேவையை எதிர்பார்த்திருக்கும் பயனாளிகளுக்கு மிகவும் ஆறுதலாக அமைகின்றது.

இந்த நடமாடும் சேவைகள் தற்பொழுது வவுனியா, செட்டிகுளம், பம்பைமடுப் பகுதிகளில் நடைபெற்று வருகின்றன. இப்பிரதேசங்களில் சக்கர நாற்காலிகள் தேவைப்படும் பயனாளிகளை இனம்கண்டு அவர்களுக்குத் தேவையான அளவுக்கு சக்கர நாற்காலிகளை மன்னாரில் தயாரித்து இவற்றை இலவசமாக அப்பிரதேசங்களுக்கு கொண்டுசென்று வழங்குகின்றது.

இவற்றைவிட உதவிக்கரப் பிரிவின் ஏனைய பணிகளும் மிகவும் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக செயற்கைக்கால் தேவைப்படும் பயனாளிகள் வெவ்வேறு மாவட்டங்களில் இருந்து வாழ்வுதயம் உதவிக்கரம் பிரிவின் ஊடாக செயற்கைக் கால்கள், கழுத்துப்பட்டி, முச்சக்கரவண்டி மற்றும் ஊன்றுகோல்கள் போன்றவைகளையும் பெற்றுப் பயன் அடைகின்றனர்.

### உள்ளூர் இடப்பெயர்வினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு

## உடனடி நிவாரண உதவிகள்


அண்மைக் காலங்களில் எமது மண்ணில் தாண்டவம் ஆடி வரும் மனிதப் பேரவலத்திற்கும் போர் நெருக்கடிகளுக்கும் அஞ்சிய மக்கள் சிலர் உளளூருக்குள் இடம்பெயர்ந்துள்ளனர். இவர்களுக்கு மன்னார் வாழ்வுதயம் சுமார் 10 இலட்சத்திற்கும் அதிக பெறுமதியான உலர் உணவுப் பொருட்களைக் கொடுத்து உதவியுள்ளது. குறிப்பாக மடுப் பிரதேசத்தில் இடம்பெயர்ந்த 676 குடும்பங்களுக்கும், குருவில்வான் பிரதேசத்தில் இடம்பெயர்ந்த 70 குடும்பங்களுக்கும் காத்தான்குளம் கிராமத்தில் இடம்பெயர்ந்த 5 குடும்பங்களுக்கும், மன்னார் தீவுப் பிரதேசத்தில் இடம்பெயர்ந்த 6 குடும்பங்களுக்கும், இந்த உலர் உணவு விநியோகிக்கப்பட்டுள்ளது.

இவற்றை அப்பிரதேச பங்குத்தந்தையர்கள் ஊடாக வாழ்வுதயப் பணியாளர்கள் விநியோகித்திருந்தார்கள். இவற்றோடு உலர் உணவு அல்லாத ஏனைய அத்தியாவசியப் பொருட்களும் மற்றும் மருந்துப் பொருட்களும் மேலும் சில கிராமங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறான அவசர உதவிகள் இம்மக்களின் உடனடித் தாகத்தை தணித்திருக்கின்றது.

இவற்றோடு மன்னார் மாவட்டத்தில் இருந்து யாழ்பாணம் செல்ல முடியாமல் அவதியுறும் மக்களின் உடனடித் தேவையாகிய உணவு, ஆடைகள், பாய், தலையனை, சமையல் பாத்திரங்கள் போன்றவைகளும் வாழ்வுதயத்தின் அனுசரணையோடு வழங்கப்பட்டுள்ளன.

### வாழ்வுதய முன்பள்ளிகளுக்கு

## விளையாட்டு உபகரணங்கள் வழங்கல்



முருங்கன் கிறிஸ்து அரசர் முன்பள்ளி பொறுப்பாசிரியர் அருட்சகோதரி நிதர்சனா வாழ்வுதயத்தின் முசலிப் பிரிவு வெளிக்கள அலுவலர் திரு. சி. சுஜீவனிடமிருந்து விளையாட்டு உபகரணங்களைப் பெற்றுக்கொள்கின்றார்.

வாழ்வுதய நிர்வாகத்தின் கீழ் 126 முன்பள்ளிகள் மன்னார் மறை மாவட்டத்தில் இயங்கி வருகின்றன. இந்த முன் பள்ளிகளில் வவுனியாப் பிரதேசத்தில் இயங்கும் 4 முன்பள்ளிகளுக்கும், செட்டிகுளத்தில் உள்ள 2 முன் பள்ளிகளுக்கும், பம்பைமடுப் பகுதியில் உள்ள 3 முன்பள்ளிகளுக்கும், விளையாட்டு உபகரணங்கள் அண்மையில் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. இதில் கல்வி பயிலும் மாணவர்களின் நலன் கருதியே இந்த உபகரணங்கள் அப்பிரதேச வாழ்வுதயப் பணியாளர்கள் ஊடாக வழங்கப்பட்டுள்ளது. இவ் உபகரணங்கள் இப்பிள்ளைகளின் கல்விக்கு மிகவும் ஊக்குவிப்பாய் அமைந்துள்ளது.

மேற்குறிப்பிட்ட 9 முன்பள்ளிகளிலும் 313 முன்பள்ளி சிறார்கள் கல்விகற்று வருகின்றார்கள். அத்தோடு வாழ்வுதயத்தினால் நிர்வகிக்கப்படும் முன்பள்ளிகளுக்கு நாளாந்தம் சத்துணவும், பாடசாலை உபகரணங்களும் வழங்கப்பட்டு வருகின்றது. அத்தோடு இம்முன்பள்ளிகளுக்கு கல்வி புகட்டும் ஆசிரியர்களுக்கும் மாதாந்த ஊதியங்களும் வாழ்வுதயத்தால் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மன்னார் மறைமாவட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலவசமாக கிடுகு வழங்கல்



அண்மையில் வாழ்வுதயத்தால் தற்காலிக குடிசைகளை வேய்வதற்காக 2200 கட்டு கிடுகுகளை தேவைப்படும் பயனாளிகளுக்கு மன்னார் மறைமாவட்டத்தில் வழங்கியது. அதில் ஒரு படத்தை இதில் காணலாம்.

மன்னார் மறைமாவட்டத்திற்குள் போரினால் பாதிக்கப்பட்டு தற்காலிகமாகத் தற்காலிக குடிசைகளை அமைத்து மிக வறுமையில் வாழும் மக்களுக்கு வாழ்வுதயம் கூரை வேய்வதற்காக சுமார் 150 குடும்பங்களுக்கு 1200 கட்டுக் கிடுகுகளை வழங்கி உள்ளது. குறிப்பாக கோமரசங்குளப் பங்கு, பம்பைமடு, செட்டிகுளம், சாந்திபுரம், மன்னார், தோட்டவெளி, போன்ற பிரதேசங்களில் வாழும் குடும்பங்களுக்கே இவை வழங்கப்பட்டுள்ளன.

இக்குடும்பங்களின் நாளாந்த வாழ்வு மிகவும் வறுமை நிலையில் இருந்து வருகின்றது. அத்தோடு இக்குடும்பங்களைச் சார்ந்த பிள்ளைகளின் கல்வி நிலைகளும் பின்தள்ளப்பட்டிருக்கின்றது. அத்தோடு குடும்பத் தலைவர்களுக்கும் தொழில் வாய்ப்புகள் சீராகக் கிடைப்பதில்லை. இவ்வாறாக இம்மக்கள் துன்பப்பட்டு வருகின்றனர். வாழ்வுதயத்தால் இக்குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட கிடுகுகள் பங்குத்தந்தையர்கள் மற்றும் அப்பிரதேச வாழ்வுதயப் பணியாளர்கள் ஊடாக வழங்கப்பட்டுள்ளது.

செய்தி தொகுப்பு:- அன்ரன் ராஜகாரியர் (ராஜன்), இணைப்பாளர், கிராமிய விழிப்பூட்டல் பிரிவு, வாழ்வுதயம், மன்னார்.

# கதையும் கருத்தும் களமும்

அருட்பணியாளர். அன்புராசா அ.ம.தி



ஆலய சபை உறுப்பினர்கள் இருவர் ஒரு சாராயக் கடைக்கு முன்னால் நின்று குடித்துக்கொண்டிருந்தார்கள். அவ்வழியால் போய்க்கொண்டிருந்த அவர்களுடைய பங்குத் தந்தை அவர்களைக் கண்டுவிட்டார். முதலாம் ஆள், "டேய் நம்ம பாதர் நம்மளப் பார்த்திற்றார்டா" என்றான். "அதற்கென்ன இப்போ... கடவுள்கூட நாம் குடிப்பதைப் பார்த்துக்கொண்டுதானே இருக்கிறார்" என்று பதிலளித்தான் இரண்டாமவன். முதலாம் ஆள் "ஆனால் நான் குடிப்பதை கடவுள் என் மனைவியிடம் போய் சொல்லிக்கொண்டிருக்க மாட்டாரே!.." என்றான் சலிப்போடு.

உலகில் எந்தக் காலத்திலும், எந்த காவல்துறையினாலும் இதுவரை கைதுசெய்யப்பட முடியாமல் இருக்கிற பெயர்போன பெரிய குற்றவாளி ஒருவரின் சுய சாட்சியத்தை எச். டபிள்யு. கிப்சன் பின்வரும் வார்த்தைகளில் வடிக்கிறார்.

"நான் பெரிய குற்றவாளிதான். என்னை யாராலும் பிடிக்க முடியாது. எனக்குத் தண்டனையே கிடையாது. உலகத்தில் நடக்கின்ற போர்களில் இறந்தவர்களைவிட அதிகமானவர்களை நான் கொன்றிருக்கின்றேன். மனிதர்களை நான் மிருகமாக மாற்றியுள்ளேன். ஆற்றலும் வலிமையும் கொண்ட இளையோரை வற்றிய சடங்களாக்கி இருக்கின்றேன். அறிவாளிகளை மூடர்களாக்கியுள்ளேன். கைவிடப்பட்ட மனைவியருக்கு என்னைத் தெரியும். பசியால் துடிக்கும் குழந்தைகளுக்கும் என்னைத் தெரியும் நான் பல ஆயிரக்கணக்கானவர்களின் வாழ்வினைக் கெடுத்துள்ளேன். இன்னும் கெடுத்துக்கொண்டே இருப்பேன். என்னை யாரும் கைதுசெய்ய முடியாது. **நான்தான் மது**"

இன்றைய இளைய சமூகத்தினரை மிக மோசமாக பாதித்து அவர்களின் வாழ்வையும் வளர்ச்சியையும் அழித்துக்கொண்டிருப்பது குடிபோதை எனலாம். நம் நாட்டின் இளைஞர்களில் ஏறக்குறைய 65% மானவர்கள் குடிப்பழக்கத்திற்கு உள்ளாகி இருப்பதாக ஓர் ஆய்வின் முடிவு கூறிநிற்கின்றது. இன்னுமொரு அதிர்ச்சியூட்டும் தகவல் என்னவென்றால் இலங்கையில் 24 சதவீதமான பாடசாலை மாணவர்கள் மது அருந்துதல் மற்றும் புகைத்தல் ஆகியவற்றில் ஈடுபடுகிறார்கள் என்ற செய்தியை அண்மைய யுனிசெப் ஆய்வு வெளிப்படுத்தியுள்ளது. ஆம், பல்லாண்டு காலமாக நம் சமுதாயத்தைப் பயமுறுத்திக்கொண்டிருக்கும் பயங்கரவாதிதான் மது.

தண்ணீரையும் நாம் குடிக்கின்றோம், பாலையும் குடிக்கின்றோம். ஆனால் இவற்றில் எதையும் நாம் குடி என்று அழைப்பதில்லை. இதை மட்டும் ஏன் குடி என்கிறோம்? இது ஒன்றுதான் உயிரைக் குடிக்கிறது என்கிறார் கவிஞர் கண்ணதாசன். தமது பட்டறிவினால் கவிஞர் அவர்கள் இவ்வுண்மையை நன்கறிந்திருந்தார். அதனால்தான், குடிப்பவர்களிடம், "ஏன் குடிக்கிறீர்கள்?" என்று கேட்டால் "குடித்தால்தானே ஏன் குடிக்கிறேன் எனக் கூற முடியும்" என்று குடிப்பதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். 'குடிக்கிறேன்' என்ற உண்மையை மறுத்துவிடுவார்கள். இதனால் அவர்கள் என்ன சொல்ல விளைகிறார்கள் என்றால் "நான் குடிக்கவில்லை, குடிதான் என்னைக் குடிக்கிறது" என்பதையே சொல்ல முற்படுகிறார்கள்.

குருசுமுத்து குடித்துவிட்டு கிராமத்தில் குளப்படி செய்ததால் காவல்துறையினர் அவரை நீதிமன்றத்தில் நிறுத்தினர். குருசுமுத்தைப் பார்த்த நீதிபதிக்கு கோபம் வந்துவிட்டது. ஏனென்றால் குருசுமுத்து இடையிடையே நீதிமன்றம் வந்து செல்பவர். நீதிபதி, "மீண்டும் மீண்டும் 'கோட்டு'க்கு வருகிறாயே உனக்கு வெக்கம், மானம், சூடு, சுறணை, றோசம் இல்லையா?" என்று தொடங்கியவர், "உன்னைப் பிழை சொல்லி என்ன செய்யிறது. எல்லாம் நீ குடிக்கும் சாராயத்தின் வேலைதான்!..." என்று கூறி குருசுமுத்தை எச்சரிக்கை செய்து விடுவித்தார். இவ்வார்த்தைகளால் உற்சாகம் அடைந்த குருசுமுத்து, "ஐயா, நீங்க படிச்ச மனிசன் என்பதால் உங்களுக்குப் புரிகிறது. ஆனா, என்ர மனிசி சாராயத்தை குற்றம் சொல்லாமல் என்னை அல்லவா குற்றம் சாட்டுகிறாள்" என்றான்.

நீதிமன்றம் சென்றும் குருசுமுத்து திருந்தியபாடில்லை என்பதை அறிந்த பங்குத்தந்தை குருசுமுத்துவுக்கு நல்ல பாடம் புகட்டவேண்டும் என நினைத்தார். குடித்துவிட்டு வந்த குருசுமுத்தைக் கூப்பிட்டு வைத்து புத்திமதி புகட்டிக்கொண்டிருந்தார். குடிப்பதால் வரும் தீமையை அவன் உள்ளத்தில் பதியுமாறு செய்யவேண்டும் என விரும்பினார். தண்ணீர் குடிக்கும் குவளையில் (Glass) சாராயத்தை நிரப்பி அதற்குள் ஒரு பூச்சியைப் போட்டார். குருசுமுத்து பார்த்துக் கொண்டிருக்கையிலேயே பூச்சி துடிதுடித்து இறந்து போனது. பங்குத்தந்தை "பார்த்தாயா குருசுமுத்து... சாராயத்தைக் குடிச்சா என்ன என்ன எல்லாம் நடக்கும் என்று புரிகிறதா?" என்று கேட்டபோது குருசுமுத்து தலையை ஆட்டி, புன்முறுவல் செய்து பங்குத்தந்தை கூறியதையெல்லாம் ஆமோதிப்பதுபோல அங்கிருந்து புறப்பட்டான். வீட்டுக்கு வந்த குருசுமுத்து, "பார்த்தாயா அடி பரதேசி!.... நம்ம பாதர் எவ்வளவு பெரிய படிப்பு படிச்ச பாதர்! எவ்வளவு பெரிய அனுபவசாலி! குடிக்கிறதால வயித்துக்குள்ள இருக்கிற பூச்சிகளெல்லாம் செத்துப்போகும் என்ற உண்மையை சொல்லுறதோட மட்டும் இல்லாமல் செய்தும் காட்டினாரு..." என்று தன் மனைவியிடம் கூறியவன் அடுத்த சுற்றுக்குக் காசு கேட்டு அடம்பிடித்தான். "என்னங்க, நீங்க இவ்வளவும் குடிச்சது போதாதா?" எனக் கேட்ட மனைவியிடம், "முதல் சந்திக்குச் சாகாத பூச்சிகள் இரண்டாம் சந்தியில செத்துப் போயிடும்..." என்று மீண்டும் சுழற்சிமுறைச் சுற்றைவிட்டு தனிச் சுற்றுக்குப் புறப்பட்டான்.

குடிபோதையில் இருக்கிற ஒருவரை அணுகி அந்நேரத்தில் அவருக்கு நாம் புத்திமதிகளையோ அல்லது ஆலோசனைகளையோ கூறக்கூடாது. குடித்திருப்பவர் நமக்குப் புத்திமதி கூறி அனுப்பிவிடுவார். அத்தகைய ஆற்றலை உள்ளிருந்து அவருக்கு ஒருவர் ஊட்டிக்கொண்டிருப்பார். எனவே, குடிக்கிறவர் எப்போது குடிக்காமல் சுய நினைவோடு இருக்கிறாரோ அந்நேரத்திலேயே அவருடனான உரையாடலைத் தொடங்க வேண்டும்.

குடிப்பவர், முதலில் தான் குடிப்பதில்லை என்றுதான் அநேகமாக வாதிடுவார். கையும் மெய்யுமாகப் பிடிபட்டார் என்றால் கொஞ்சம் குடிப்பதாகவும், களைப்புத்தீர கொஞ்சம் எடுப்பதாகவும் அல்லது எப்போதாவது இருந்துவிட்டு எடுப்பதாகவும் சொல்வார். அப்படி இருந்திற்று எடுத்தாலும் கட்டுப்பாடாகக் குடித்ததாகவே கூறுவார். ஒட்டுமொத்தமாக என்ன சொல்ல முயல்வார் என்றால் குடிப்பதால் தனக்கு ஒரு பிரச்சனையும் இல்லை என்றே நியாயப்படுத்துவார்.

குடிப்பதால் ஏற்படும் விளைவுகளை கென்றி வொல்டன் பின்வருமாறு நோக்குகிறார். "நாம் அருந்தும் முதல் சிறிய கோப்பை நம்மை குரங்குபோல் ஆடச்செய்கிறது. இரண்டாவது கோப்பை நம்மை சிங்கத்தைப்போல் கர்ச்சிக்கச் செய்கிறது. மூன்றாவது கோப்பை பன்றியைப்போல் தெருவிலே கிடக்கச் செய்கிறது." என்றார்.

'கடினமான வேலை செய்தால் குடிக்க வேண்டும்', 'யார் குடிக்காமல் இருக்கிறார்கள்', 'கொஞ்சம் குடிப்பதால் பெரிய தீங்கு ஒன்றும் ஏற்படாது', 'குடித்துவிட்டு அமைதியாய் இருந்தால் சரி', அல்லது 'குடிப்பதால் மற்றவர்களுக்கு தொந்தரவு கொடுக்காவிட்டால் சரி' போன்ற போலி வாதங்களை தங்களுடைய குடியை நியாயப்படுத்துவதற்காக வைத்திருப்பார்கள். எனவேதான், இவர்கள் குடிக்காது இருக்கிற வேளைகளில் குடியினால் ஏற்படும் தீமைகளை உணர்த்தி இப்பழக்கத்திலிருந்து விடுபட உற்சாகப்படுத்த வேண்டும். இதற்குப் பயிற்சி பெற்றவர்களின் உதவியை நாடலாம்.

உதாரணமாக தோட்டவெளிப் பகுதியில் கொன்னர் குடியிருப்பில் அமைக்கப்பட்டுள்ள *மன்னார் மறைமாவட்ட மது விலக்கல் புனர்வாழ்வு மையத்துடன* தொடர்புகொண்டு (தொ.பே.இல. 0602231142) குடிநோயினால் வருந்துபர்களைக் குணமாக்க உதவலாம். இந்நிறுவனத்தின் இயக்குனர் தந்தை வின்சன் பற்றிக் (வி.பி) அ.ம.தி. அடிகளார் அவர்களும் அவர் குழுவினரும் இணைந்து பலநூறு குடிநோயாளர்களை விடுவித்து, அவர்கள் குணம்பெற்று புதுவாழ்வடைந்திருக்கிறார்கள் என்பதை சாட்சியாகவும், எடுத்துக்காட்டாகவும் இங்கு கூறக்கூடியதாக உள்ளது.

இருவர் குடித்துவிட்டு விமான நிலையத்தில் தமது உறவினர் ஒருவரை வரவேற்பதற்காகக் காத்துக்கொண்டு நின்றார்கள். ஒருவன் மற்றவனிடத்தில், "இந்த பிளேனப் பாரன். எந்தப் பெரிசு! இந்தப் பெரிசப் பெயின்ற் பண்ண ஒரு மாதம் எண்டாலும் பிடிக்கும்!..." என்றான். மற்றவர் மறுமொழியாக, "அட நீ ஒண்டு வெபரம் தெரியாத ஆளா இருக்கிறியே! இந்தப் பிளேன் நிலத்தில நிற்கும் போது பெயின்ற் பண்ணிறதில்ல. அது மேல பறந்து சின்னதாகும் வரை பொறுத்திருப்பாங்க. அதன் பிறகுதான் பெயின் பண்ணுவாங்க" எனக் கூறி மகிழ்ந்தான். இதனைத்தான் 'குடிகாரன் பேச்சு' என்பார்கள்

இந்த ஆலோசனைகளை எல்லாம் கேட்ட நரூருதீன் முல்லா இனிமேல் குடிப்பதில்லை என்ற முடிவுக்கு வந்தார். ஒருநாள் செல்லும் வழியில் சாராயக்கடை ஒன்றைக் கடக்க வேண்டி இருந்தது. உறுதியையும் மன வைராக்கியத்தையும் வரவழைத்துக்கொண்டு கண்ணை இறுக மூடிக்கொண்டு கடந்துவிட வேண்டும் எனத் தீர்மானித்தார். அதேபோல் கண்ணை இறுக மூடிக்கொண்டு நடந்தார். சாராயத்தின் நெடி மூக்கைத் துளைக்க, நா அதன் உருசியை நினைத்து ஊறியது. எனினும் முல்லாவின் முடிவில் மாற்றம் இல்லை. பின் கண்ணைத் திறந்து பார்த்தார். மதுக்கடையைக் கடந்து தன்னுடைய உறுதியான முடிவில் வெற்றி கண்டதாக பெருமகிழ்ச்சி அடைந்தார். "ஆகா... இந்த வெற்றியைக் கொண்டாட வேண்டுமே!...." என்று யோசித்தவர் விறுவிறு என்று சாராயக் கடைக்குள் நுழைந்து ஒரு போத்தல் சாராயம் கேட்டார். கடைக்காரன், "என்ன முல்லா, வழமையாக 1/2 போத்தல்தான் எடுப்பீர்கள். இன்றைக்கு என்ன விசேஷம்?" எனக் கேட்டதற்கு, "உன்னுடைய கடையில் குடிக்காமல் கடந்துபோவேன் என சபதம் செய்தேன். குடிக்காமல் கடந்தேன். மகிழ்ச்சி இரட்டிப்பானது. அதனால்தான் இரண்டு மடங்கு!" என முழுப்போத்தலையும் குடித்துவிட்டுச் சரிந்தார்.

ஐயாமாரே, அண்ணன்மாரே, மதுவிலகல் முயற்சியில் சாண் ஏறுகிறபோது முளம் சறுக்காமல் பார்த்துக்கொள்வீர்களாானே!...

# வாகரைவாணன் வழங்கும்

## அந்தோனியார் காவியம்



காவியத் தொடர் – 8

### அசிசியாரின் அணியில்......

தாயகம் வந்து சேர்ந்த தபஸியர் தம்மைப் பார்த்து
நேயனும் பேசலானான் நெஞ்சினில் இருந்ததெல்லாம்
தூயவர் உணர்ந்ததாலே துருக்கியர் தேசம் செல்ல
ஆய நற் பதிலும் சொல்வார் அனுமதி வேண்டுமன்றோ!

அடுத்ததோர் சபையிற்சேர அனுமதி பெறுதல் வேண்டும்
எடுத்தவர் மொழியலானார் இறைவனின் அருளினாலே
தடுத்தவர் யாரும் இல்லை தானவன் இணையலானான்
கொடுத்தவன் தன்னை எண்ணி குவித்தவன் வணங்கலானான்

புதிய தம் சபையிற் சேர்ந்த புண்ணிய சீடன் தன்னை
மதிப்புடன் ஏற்கலானார் மங்களம் பாடலானார்
பதியது ஒலிவந் தோப்பு பக்தியின் பூமியாகும்
கதியது அவனும் சென்று கருத்துடன் வாழலானான்.

அந்தோனி என்னும் அந்த அருள்மிகு நாமம் பூண்ட
சந்தோஷ இல்லந்தன்னில் தரித்தவன் சபையின் ஆடை
சிந்தையில் மகிழலானான் சிறிய அச் சோதரர்கள்
பந்தமாய் அவனை ஏற்று பரிவுடன் நடத்தலானார்.

அணியென விளங்கும் தூய அந்தோனி என்னும் பேரை
இனிதென ஏற்றுக் கொள்வான் ஏழையாய்க் குடிசை தன்னில்
தனி என வாழல்ானான் தபம் அவன் வாழ்க்கையாகும்
இனி ஒரு துயரம் இல்லை இறைவனில் ஒன்றிப் போவான்.

கோடையின் காலமாகும் கொளுத்திடும் வெயிலைத் தாங்க
ஆடையாம் இலையைப் பூணும் அழகுறு மரங்களெல்லாம்
ஓடையைப் போலும் வானம் ஒளியது நீராய்ப் பாயும்
மேடையைப் போலும் மாறும் மேகங்கள் நடனம் ஆடும்.

ஒலிவெனும் மரங்கள் ஆங்கு உயர் நிழல் பந்தலாகும்
அலையென வீசும் காற்று அற்புத வாசம் தூவும்
மலையினில் இருந்து துள்ளி மண்ணினில் அருவி வீழும்
விலை மதிப்பில்லாச் சாரல் விழுந்தது அவனும் உண்பான்.

### திருமறைத் தூதன்.....

திருமறை தன்னை எட்டுத் திசையிலும் பரப்ப வேண்டும்
ஒரு மறை இதனைப்போல உலகினில் உண்டுமாமோ?
அருமறை மீது கொண்ட அளவிலாப் பற்றினாலே
துருக்கியர் தேசம் செல்லத் தூயனும் துடிக்கலானான்!

அந்நியர் தேசம் சென்று அருள்மறைப் போதம் செய்ய
எண்ணிய தொண்டன் தன்னை ஏத்துவார் சபையோரெல்லாம்
மண்ணினில் இவரைப்போல மாதவக் குருவே வேண்டும்
கண்ணிலும் உயர்ந்தோன் எங்கள் கர்த்தனே காக்க என்பார்.

நாடது மொரக்கோ செல்லும் நாளது வந்ததாலே
ஆடிடும் அலையின்மீது அவனது வங்கம் செல்லும்
ஈட்டில்லாத் தொண்டு செய்ய இறையவன் விழைந்தபோதும்
கூடிடும் நோயினாலே குறியது மாறிப்போகும்.

நோயது பிணித்ததாலே நோக்கது மாறிப்போக
தாயகம் திரும்பலானான் தபஸியின் கப்பல் தன்னை
மாயமாய்ப் புயலும் தாக்கும் மறிகடல் அலையும் மோதும்
பாயது உடைந்ததாலே படகதன் திசையும் மாறும்!


திக்கது மாறிப்போக தீவது சிசிலி அண்டி
பக்கத்தில் மெசினா என்னும் பட்டினந் தன்னைச் சேரும்
புக்கிடம் வாழும் அசிசிப் புண்ணிய சீடர் எல்லாம்
தக்கதோர் நண்பனென்று த்பஸியை அணைத்துக்கொள்வார்.

(காவியம் நீளும்......)

# மன்னா விளம்பரப் பலகை

ஒரு மனிதன் விழாமலே வாழ்ந்தான் என்பது பெருமையல்ல, விழுந்தபோதெல்லாம் எழுந்தான் என்பதே பெருமை.
*தே. பிரபாகரன் சில்வா, முருங்கன்*

உலகம் கனவிலும் காணாத சாதனைகளை
செபம் ஒன்றினால் ஜெயித்து விடலாம்.
*அ. டொமிற்றா, தலைமன்னார் கிராமம்*



நீ மற்றவர்களின் சந்தோஷத்தை
கெடுக்க நினைத்தால்,
உன் மகிழ்ச்சி தொலை தூரம்.
எஸ். ஸ்ரெலா, நாவலப்பிட்டி

கிறிஸ்து யாரை அன்பு செய்கிறாரோ அவர்களைத் தண்டிக்கிறார். யாரைத் தன் பிள்ளைகளாக ஏற்றுக்கொள்கிறாரோ அவர்களைக் கையால் அடிக்கிறார்.
(புனித சின்னப்பர்) *இ. றே. துளசி, அடம்பொன்தாழ்வு*

நண்பனே! நறுமணம் கமழும் சுதந்திர ரோஜா மலரைப்
பெற நீ ஆசித்தால் அம்மலரோடு காணப்படும்
முட்களையும் கட்டாயம் ஏற்றுக்கொள்ளத் தான் வேண்டும்.
*- சுபாஸ் சந்திரபோஸ் - தே. ஜெலிந்திரா, அடம்பன்*

கவலைகள் உன்னில் வாழலாம், ஆனால்
கவலைகளுக்குள் நீ வாழாதே!
*யே. ஆன் நிறோஜா, பொன்தீவுகண்டல், முருங்கன்*

பேராசை பிடித்தவன் எப்போதும் ஏழையே!
*க. ஆனந்த குமார், சிதம்பரபுரம்*

சோர்ந்துவிட்ட மனிதன் தனக்குத்தானே பகைவன்!
துணிந்துவிட்ட மனிதன் சாவுக்கும் பகைவன்!
*ஸ்ரீ. ரேகா, 8ம் வட்டாரம், பேசாலை.*

# கிறிஸ்மஸ் துணுக்குகள்

## கிறிஸ்மஸ் நாட்டுக்கு நாடு கொண்டாடப்படும் விதம்!

### ஸ்காண்டிநேவியா :



கிறிஸ்மஸ் பண்டிகையை எப்படிக் கொண்டாடுகிறார்கள் தெரியுமா? பறவைகளுக்கு விருந்தளிப்பதன் மூலம். எப்படி? கோதுமைக் கதிர்களைத் தூண்போல் கட்டி வயல் வெளியில் வைத்துவிடுகிறார்கள். இதன் கீழேயும் கோதுமை தானிய மணிகளைப் பரப்பி இருப்பார்கள். பறவைகளுக்கு ஒரே கொண்டாட்டம்தான்.

### சிலி :

சாண்டியா கோவில் கிறிஸ்மஸின்போது வெப்பம் 100 டிகிரி பாரனீட்டாக இருக்கும். ஆகவே கிறிஸ்மஸ் பண்டிகைக்கு சாண்டாகிளாஸ் ஐஸ்கிரீம் விற்பனை செய்வார். விழாக் கோலாகலங்கள் எல்லாம் இரவில்தான் நடைபெறும். ஏனென்றால் இரவு நேரத்தில்தான் குளிர்ச்சியாக இருக்கும்.

### ஜோர்டான் :

இயேசு பிறந்த பெத்லகேம் இருப்பது இந்த நாட்டில்தான். ஆகவே ஆயிரக்கணக்கான யாத்திரிகர்கள் குழந்தை இயேசு அவதரித்த மாட்டுத் தொழுவத்தைத் தரிசிக்க இங்கு வந்து கூடுகிறார்கள். இயேசு பிறந்த தொழுவத்தில் ஒரு ஆலயம் கட்டப்பட்டு உள்ளது.

### பிரான்ஸ் :



பிரெஞ்சுக் குழந்தைகளின் கிறிஸ்மஸ் தாத்தாவின் பெயர் பாபா நோயல். புகைபோக்கி வழியாக வீட்டுக்குள் இறங்கி அங்கு குழந்தைகள் வரிசையாக வைத்துள்ள சப்பாத்துகளில் இனிப்புப் பண்டங்களையும், பொம்மைகளையும் பரிசாகப் போட்டுப்போகும் பாபா நோயலின் பசிக்கும் தாகத்திற்கும் குழந்தைகள் ஒரு பிளேற்றில் பிஸ்கட்டுகளையும், மதுபானங்களையும் சப்பாத்துகளுக்கு அருகே வைப்பார்கள்.

### கென்யா :



ஆபிரிக்காவில் உள்ளது கென்யா என்னும் நாடு. இங்கு கிறிஸ்மஸ் தாத்தா (சாண்டாகிளாஸ்) கலைமானின்மீது வருவதில்லை. ஹெலிகொப்டரில்தான் வந்து குதிக்கிறார். ஆபிரிக்க பொலிஸ்காரர்களின் குழந்தைகளுக்கு கிறிஸ்மஸ் பரிசுகளைக் கொடுப்பார். ஆபிரிக்க பொலிசார் தங்கள் தங்கள் இனத்தின் தேசிய உடை அணிந்து கிறிஸ்மஸ் கொண்டாடுகிறார்கள்.

### கொலண்ட் :




டச்சுக் குழந்தைகளின் அன்புக்குப் பாத்திரமான செயிண்ட் நிக்கலஸ்தான் சாண்டாகிளாஸ் ஆக உலகம் பூராவும் ஏற்கப்பட்டவர். ஹொலண்டில் டிசம்பர் 6ம் திகதிதான் கிறிஸ்மஸ் கொண்டாட்டம். விசேஷ விடுமுறையும்கூட. ஆயரின் உடையில் குதிரைமீது அமர்ந்து ஆம்ஸ்டர்டாம் நகருக்குள் பிரவேசிப்பார் செயிண்ட் நிக்கலஸ்.

### அவுஸ்திரேலியா :



நியூ சவுத்வேல்சில் உள்ள புகழ் பெற்ற சிட்னி துறைமுகத்தை அடுத்து உள்ள போண்டி கடற்கரைக்கு குடும்பத்தோடு போய் பண்டிகை கொண்டாடுகிறார்கள். வானவெடி பட்டாசுகளை கடற்கரை மணலில் வெடிப்பார்கள். வான்கோழிப் பொரியல் விசேஷம். இவர்களுக்கு கிறிஸ்மஸின்போதுதான் கோடைகாலம். ஆகவே கடலில் நீந்துவார்கள். அலைமீது சறுக்கி விளையாடுவார்கள்.

*அ. மோனிஷா (சிந்து), தலைமன்னார் கிராமம்.*

## கிறிஸ்மஸ் பண்டிகை தோன்றிய கதை



இறைவனின் திருமகன் இயேசுக் கிறிஸ்து மனித உருவத்தில் வந்து பிறந்த தினம்தான் கிறிஸ்மஸ் தினம். கிரேக்க மொழியில் 'கிறிஸ்டோஸ்' என்றால் 'காப்பாற்றப் பிறந்தவர்' என்று அர்த்தம். 'மஸ்' என்ற வார்த்தை பண்டிகையைக் குறிக்கும். கிறைஸ்ற் என்றால் கிறிஸ்து. ஆகவே கிறிஸ்மஸ் என்ற சொல்லுக்கு 'காப்பாற்ற அவதரித்தவரின் திருநாள்' என்று பொருள் கூறலாம். கிறிஸ்மஸ் என்றதும் ஏதோ அது கிறிஸ்தவர்களுடன் மட்டும் தொடர்புடைய பண்டிகை என்று நாம் நினைத்துவிடக்கூடாது. கிறிஸ்துவின் பிறப்பு என்பது உலகம் முழுவதும் உள்ள மனிதர்களின் வாழ்க்கையுடன் ஒட்டி உறவாடும் ஒரு நிகழ்ச்சி ஆகும்.

கிறிஸ்து பிறந்ததை வைத்துத்தானே வரலாற்றையே நாம் கி. மு., கி. பி., என்று பிரித்து இருக்கிறோம். இதில் இருந்தே கிறிஸ்மஸ் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி என்பது விளங்கும். அந்த வகையில் கிறிஸ்மஸ் என்பது மனித வரலாற்றோடு பின்னிப் பிணைந்துவிட்ட ஒரு நாள் என்பதில் சந்தேகமே இல்லை. *ச. துளசினி, 100 வீட்டுத் திட்டம், பெரியகமம், மன்னார்.*

## பாலன் குடில்

இயேசு பாலன் பிறந்த இனிய பொன்னாளில் இரவுப் பொழுதில் இடையர்கள் சிலர் தங்கள் மந்தைகளைக் காத்துக் கொண்டிருந்தார்கள். அப்போது வானத்தில் ஒளி படர்ந்தது. தேவதூதர் ஒருவர் வானில் தோன்றி இயேசு பிறந்த நற்செய்தியை அவர்களுக்கு அறிவித்தார். 'அஞ்சாதீர்கள். உங்களுக்காக மீட்பர் பிறந்திருக்கிறார். இந்த வழியே சென்றால் மாட்டுக் கொட்டிலில் குழந்தை ஒன்றை துணியில் பொதிந்து முன்னிட்டியில் கிடத்தி இருப்பதைக் காண்பீர்கள். அதுவே உங்களுக்கு அடையாளம்' என்றார். இதைத் தொடர்ந்து இடையர்கள் தங்கள் ஆட்டு மந்தைகளுடன் வந்து குழந்தை இயேசுவைக் கண்டு வணங்கினர்.

உலகம் முழுவதும் இந்த நிகழ்ச்சியை நினைவுகூரும் வண்ணம் கிறிஸ்மஸ் தினத்தன்று பாலன் குடில் (Cribe) அமைக்கப்படுகிறது. குழந்தை இயேசு, அன்னை மரியாள், சூசையப்பர், தேவதூதர், இடையர்கள், ஆடு, மாடு போன்ற சின்னச் சின்ன உருவ பொம்மைகளை பாலன் குடிலுக்குள் வைத்து அழகு பார்ப்பார்கள். சிலவேளைகளில், மாகி என்ற 3 அரசர்களும், அவர்கள் ஏறி வந்த ஒட்டகங்களும்கூட குடிலில் இடம்பெறுவதுண்டு.

*ம. தீபா, வளனகம், மன்னார்.*

## கிறிஸ்மஸ் தாத்தா



கிறிஸ்மஸ் என்றதுமே நம் நினைவில் நிழலாடும் உருவம் கிறிஸ்மஸ் தாத்தாவின் (ஸாண்டா குளாசின்) உருவம். வெண்பனி போன்ற வெள்ளைத்தாடி, வெள்ளை மீசை, பஞ்சு வைத்து தைத்த கனமான சிவப்பு கம்பளிக் கோட்டு, தலையில் பனிக்குல்லாய், பரிசு மூட்டையுடன் கூடிய பனிச்சறுக்கு வண்டி, அதை இழுத்துக் கொண்டு ஓடும் ஒன்பது கலைமான்கள். இவற்றுடன் வீடு வீடாக வந்து குழந்தைகளுக்கு பரிசு, இனிப்புகளை வழங்கும் கிறிஸ்மஸ் தாத்தாவை நாம் மறந்துவிட முடியுமா?

கிறிஸ்மஸ் நாள் என்னவோ இயேசுபாலன் பிறந்த தினத்தைக் குறிப்பதுதான். ஆனால் இந்த இனிய கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தில் பெரும் பகுதியை பிடித்துக்கொள்பவர் கிறிஸ்மஸ் தாத்தாதான். சொல்லப் போனால் கிறிஸ்மஸ் பண்டிகையின் கதாநாயகன் அவர்தான்.

கலைமான் பூட்டிய பனிச்சறுக்கு வண்டியில் பவனி வரும் அவரது உருவமும், பின்னால் கேட்கும் *ஜிங்கிள் பெல* இசையையும் யாரால் மறக்க முடியும்? கிறிஸ்தவ மதச் சின்னங்களில் சிலுவைக்கு அடுத்தபடி உலகம் முழுவதும் அதிகம் பேரால் விரும்பப்படும் சின்னம் கிறிஸ்மஸ் தாத்தாதான். கிறிஸ்மசையும், கிறிஸ்மஸ் தாத்தாவையும் பிரிக்க முடியாது.

கிறிஸ்மஸ் தாத்தா மட்டும் இல்லையென்றால் கிறிஸ்மசே களையிழந்து போய்விடும். ஆம்! இன்னும் சொல்லப் போனால் இந்தக் கிறிஸ்மஸ் தாத்தா இல்லை என்றால் கிறிஸ்மசே இல்லை என்றுகூட சொல்லிவிடலாம். (Christmas just would not be Christmas without Santa Clsus)

பனி இல்லாத மார்கழியா? என்பார்களே. அதைப்போல ஸாண்டா குளாஸ் இல்லாமல் கிறிஸ்மஸ்சா என்று கேட்கும் அளவுக்கு உலகப் புகழ் பெற்ற கதாபாத்திரம் இவர். கிறிஸ்மஸ் தாத்தா இல்லாத கிறிஸ்மஸ், நிலவு இல்லாத நீலவானம் என்றுகூடச் சொல்லலாம். இந்தக் கிறிஸ்மஸ் தாத்தா இன்றும் கிரீன்லாந்தில் வசித்து வருவதாக ஒரு ஐதீகம் உண்டு.

*வெ. சசிகலா, எமில் நகர், மன்னார்.*

## டிசம்பர்

இயேசு பிறந்த தினமாக டிசம்பர் 25 ஆம் திகதியை கொண்டாடினாலும்கூட கிறிஸ்து பிறந்த சரியான திகதி எதுவும் இன்னும் கணக்கிடப்படவில்லை. என்ன இது? இயேசுவுக்கு முன்பே வாழ்ந்த ஜுலியஸ் சீசர் காலத்திலேயே கலண்டர், திகதி எல்லாம் உருவாகி விட்டதே, பிறகு இயேசுவின் பிறந்த திகதியை மட்டும் ஏன் கணக்கெடுக்காமல் விட்டார்கள் என்று சிலர் சந்தேகம் எழுப்பலாம்.

இயேசு என்ன சாதாரண மனிதரா? அவர் இறைவனின் ஒரே மகன் என்றல்லவா கிறிஸ்தவ திருமறை பேசுகிறது. என்னையும் உங்களையும்போல அவர் குறிப்பிட்ட திகதியில் பிறந்து இருந்தால் அவருக்கு என்ன பெருமை? அதனால்தான் இயேசுபிரான் பிறந்த திகதியை யாரும் குறித்து வைக்கவில்லை போலிருக்கிறது. மேலும், உரோமைப் பேரரசு அதன் உச்சக்கட்டத்தில் இருந்தபோது அகஸ்டஸ் சீசரின் ஆட்சிக்கு உட்பட்ட இஸ்ரேல் நாட்டில் ஒரு சாதாரண தச்சரின் மகனாக பிறந்தவர்தானே இயேசு.

ஆகவே அவர் பிறந்த திகதியில் யாரும் அவ்வளவு அக்கறை காட்டவில்லை போலிருக்கிறது. இருந்தாலும்கூட பொதுவாக டிசம்பர் 25ம் திகதியே உலகம் முழுவதும் கிறிஸ்து பிறந்த தினமாக கொண்டாடப்படுகிறது. *கே. தனு, ப.கட்டுக்கொட்டு, மன்னார்.*

## எக்ஸ்மஸ் (X' mas)

கிறிஸ்து பிறந்த நாளை கிறிஸ்மஸ் என்கிறோம். சரி. அது எக்ஸ்மஸ் (X' mas) என்றும் அழைக்கப்படுகிறதே. அது ஏன்? கிறிஸ்துவுக்கும் எக்ஸ்சுக்கும் என்ன தொடர்பு என்று நீங்கள் கேட்கலாம். அதற்கு ஒரு காரணம் உள்ளது.

பழங்கால மக்களில் பலர் எழுத்தறிவில்லாதவர்கள். கையெழுத்துக்குப் பதில் X எனக் குறியிடுவார்கள். கிறிஸ்து என்று எழுதத் தெரியாததால் X என்று சுலபமாக எழுதி அதை முத்தமிடுவார்கள். இதனால் X என்ற குறியீடு இயேசுக் கிறிஸ்துவைக் குறிக்கும் குறியீடாக வளர்ந்தது. இதனால்தான் கிறிஸ்மஸ் எக்ஸ்மஸ் எனப் பெயர் பெற்றது.

எக்ஸ்மஸ் என்ற பெயர் வர வேறு ஒரு காரணமும் உண்டு. ஆங்கிலத்தில் நாம் பயன்படுத்தும் X என்ற எழுத்துக்கு கிரேக்க, ரஷ்ய மொழிகளில் வேறு விதமான உச்சரிப்பு உண்டு. எக்ஸ் என்பது நமக்குத்தான் எக்ஸ். கிரேக்க மொழியில் இந்த எழுத்தை 'கி' (Kg) என்றுதான் உச்சரிப்பார்கள். கிரேக்க மொழியில் இந்த எழுத்து 14 வது எழுத்து ஆகும்.

இந்த 'கி' கிறிஸ்து என்ற பெயரின் முதல் எழுத்து என்பதால் கிறிஸ்மசை சுருக்கமாக எக்ஸ்மஸ் என்று குறிப்பிட ஆரம்பித்தார்கள். அப்புறம் என்ன? கிறிஸ்மஸைவிட இந்த எக்ஸ்மஸ் பிரபலமாகி விட்டது. இப்போது, ஆங்கிலம் பேசும் நாடுகளில் எல்லாம் கிறிஸ்மஸ் 'எக்ஸ்மஸ்' என்றே சுருக்கமாக அழைக்கப்படுகிறது.

*பெ. சிந்து, பனங்கட்டுக்கொட்டு மேற்கு, மன்னார*

## கிறிஸ்மஸ் மரம்



கிறிஸ்மஸ் பண்டிகையின்போது கிறிஸ்மஸ் மரம் நட்டு அதில் பரிசுப் பொருட்களை தொங்கவிடுவது வழக்கம். ஜேர்மனியில் உள்ள ஸ்ட்ராஸ் பர்க் (Strasburg) என்ற இடத்தில்தான் முதல் கிறிஸ்மஸ் மரம் வைக்கப்பட்டது. (இந்த இடம் இப்போது பிரான்ஸ் நாட்டில் உள்ளது).

ஆஸ்திரியா, ஜேர்மனி போன்ற நாடுகளில் பிர் மரத்தை கிறிஸ்மஸ் மரமாக்கி அதன்மீது ரொட்டி துணுக்குகளை பூ மழைபோல பொழிவது வழக்கம். பறவைகள் சாப்பிடுவதற்காக இதை வெளியே வைத்துவிடுவார்கள். பொதுவாக கிறிஸ்மஸ் மரத்தில் வண்ண விளக்குகள், மலர்கள், சிவப்பு நிற அப்பிள்கள், பரிசுப் பொருட்கள், வாழ்த்து அட்டைகளை கட்டித் தொங்கவிடுவது மேல் நாட்டு வழக்கம். ஆஸ்திரியா நாட்டு கிறிஸ்மஸ் தாத்தா இந்த மரத்தின் அடியில்தான் பரிசுப் பொருட்களை வைத்துவிட்டு போவார்.

1880ஆம் ஆண்டில் துரிஞ்சியா ( Thuringia) என்ற இடத்தில் கண்ணாடி செய்யும் கலைஞர்கள் முதன் முதலாக கண்ணாடி பந்து தயாரித்தார்கள். Kugle என்று அழைக்கப்படும் கண்ணாடி மணிகளையும் உருவாக்கினார்கள். அதிலிருந்து கிறிஸ்மஸ் மரத்தில் கண்ணாடிப் பந்து, மணிகளை கட்டித் தொங்கவிடும் வழக்கம் தோன்றியது. பனியில்லாத வெப்ப மண்டல நாடுகளில் பனியை நினைவுபடுத்தும் வண்ணம் கிறிஸ்மஸ் மரத்தில் பஞ்சு வைக்கும் பழக்கம் உண்டு.

இங்கிலாந்தில் முதன் முதலாக கிறிஸ்மஸ் மரத்தை அறிமுகம் செய்த பெருமை ராணி விக்டோரியாவின் கணவன் ஆல்பர்ட்டையே சேரும். 1841ஆம் ஆண்டு இங்கிலாந்தில் முதல் கிறிஸ்மஸ் மரம் அமைத்தவர் இவர்தான்.

*ச. டிலக்சினி,*
*100 வீட்டுத்திட்டம், பெரியகமம், மன்னார்.*

# சமாதானச் சுலோகங்கள்!

பெண்கள் மேம்பாட்டிற்கான துறவியர் இணையம் (Inter Congregational Women Desk) அகில இலங்கை மாணவ மாணவியரிடையே (4 சமயத் தவரிடையே மும்மொழிகளிலும்) நடாத்திய சமாதானச் சுலோகப் போட்டியில் கிடைக்கப்பெற்ற சுலோகங்களில் சில.

தொகுப்பாளர் - பெண்கள் மேம்பாட்டிற்கான துறவியர் இணையம்




சமாதானம், சமத்துவம் இரண்டும் மனிதத்தின் கண்கள். - *ம. சுதர்சன், உடுவில்.*

சமாதான நெறியில் இன வெறி அகலும்.
- *பி. சர்வினா, மட்டக்களப்பு.*

மனிதா, சமாதானத்தை வெளியே தேடுமுன், உன் உள்ளத்தில் தேடு.
- *சப்றீனா, மட்டக்களப்பு.*

சமத்துவப் பந்தியிலேயே சமாதானம் மாண்புறும். - *செ. அக்னெஸ், கரம்பன்.*

மனிதம் தேடும் மாணிக்க மனமே சமாதானத்தின் மஞ்சம்.
- *தயாளசீலி, மணற்காடு.*

மனித நேயம் சமாதானத் தத்துவம்.
- *அ. கலைமாறன், மட்டக்களப்பு*

யுத்தம் என்ற இருள் அகல, சமாதானத் தீபத்தை இதயத்தில் ஏற்று. - *எல். டயனா, புத்தளம்.*

இனங்களுக்கிடையிலான உறவும், பரிவும், புரிந்துணர்வும், சமாதானத்தின் ஏணிப்படிகள்.
- *கி. நளாயினி, யாழ்ப்பாணம்.*

தன்னிறைவின் தாற்பரியமே சமாதானம்.
- *அ. தனுசி, காலி.*

சர்வாதிகார சாத்தானைச் சாகடிக்க சமாதான சாந்தன் அரசேறுவான்.
- *சு. டெனற், முல்லைத்தீவு.*

அயலானை வாழவைக்கும் அன்புத் தோழனே சமாதானம். *பே. அருணா, மன்னார்.*

உரிமைகள் பேணிக் கடமைகள் காப்பின் அரியணை அமரும் சமாதானம்.
- *செ. லில்லி, ஊர்காவற்றுரை.*

சமாதானத்தின் உயர்ச்சியே இத்தரணியின் மலர்ச்சி. - *பா. சகிலன், சண்டிலிப்பாய்.*

மனிதத்தை மனிதன் மதிக்கின்றபோது மனங்களில் மலரும் நறுமலரே சமாதானம்.
- *பே. வேளாங்கண்ணி, மன்னார்.*

சீரிய இறைமை நேரிய சமாதானத்திற்கே.
- *த. யுலூக்கன், சாவகச்சேரி.*

அன்பும், நீதியும், உண்மையும் பூத்துக்குலுங்கும் பூங்காவின் நறுமணத் தென்றலே சமாதானம்.
- *இ. இளங்கதிர், திருகோணமலை.*

நீதி செழித்தோங்கும் நாளில் சமாதானம் ஆறுபோல் பெருக்கெடுத்து ஓடும்.
- *ம. மொணிக்கா, சிலாபம்.*

தன்னலம், தற்பெருமை என்ற சங்காரிகள் மடிய, சமாதானம் ஆட்சி செய்யும்.
- *மு. றொமில்ற்சன், பதுளை.*

நீதியின் அடித்தளத்தில் விதையூன்றி அன்பு நீரில் தளைத்தெழும் சமாதானம்.
- *ப. மிகூறி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு.*

# உன்னையே நீ எண்ணிப்பார்!

*திரு. சின்கிலேயர் பீற்றர்,*
*மனித நேய அமைப்புக்களின் ஒன்றியம் (CHA), மன்னார்.*

கடந்த வருடம் ஈராக்கில் மக்கள் படுகொலை செய்யப்பட்டபோது, நான் பத்திரிகை வாசித்து விட்டு நித்திரையாகி விட்டேன், ஏனெனில் நான் ஓர் கிறிஸ்தவ இலங்கையன் அல்லவா?

இவ்வருட தொடக்கத்தில் அல்லப்பிட்டியில் பொதுமக்கள் கொல்லப்பட்டபோது நான் வானொலியில் கேட்டுவிட்டு எனது வேலையைக் கவனித்துக்கொண்டிருந்தேன், ஏனெனில் நான் ஒரு தீவு வாசி இல்லையே...!

பின்பு யாழ் சிறார்கள் பட்டினியால் சாகும்பொழுது, நான் மூவேளை சாப்பிட்டுவிட்டு எனது பிறந்தநாள் கேக் வெட்டிக்கொண்டிருந்தேன், ஏனெனில் எனக்கு சிறு பிள்ளைகள் இல்லை...!

இம்மாதம் வவுனியாவில் விவசாயக் கல்லூரி மாணவர்கள் கொல்லப்பட்டபோது, நான் 'எனது பிள்ளைகள் மன்னார் கல்லூரியில் படிக்கிறார்கள்' என ஆறுதலாக இருந்தேன், ஏனெனில் நான் ஓர் வன்னியன் இல்லையே..!

பின்பு வங்காலையில் குடும்பப் பெண் பாலியல் வல்லுறவுக்கு உட்பட்டுக் கொலை செய்யப்பட்டபோது, நான் 'ஐயோ பாவம்' எனக் கூறிவிட்டு அயலில் வதந்திகள் கதைத்துக்கொண்டிருந்தேன், ஏனெனில் நான் ஓர் மன்னார் நகர வாசியல்லவா..!

அதன்பின் பள்ளிமுனையில் இளம் பெண்கள் கடத்தப்பட்டபோது நான் எதிர்ப்பு ஊர்வலத்தில் கலந்துகொள்ளவில்லை, ஏனெனில் எனக்கு பெண் பிள்ளைகள் இல்லையே..!

கடந்த இரவு விளையாட்டு மைதானச் சந்தியில் வெடிச்சத்தங்கள் கேட்டபோது, நான் கதவைப்பூட்டி விட்டு 'மெட்டிஒலி' தொலைக்காட்சியில் பார்த்துக்கொண்டிருந்தேன், ஏனெனில் நான் பெரியகடையில் வசிப்பவன் அல்லவா...!

இறுதியில் இன்றிரவு வெள்ளை வேனில் வந்து எனது மகனை யாரோ இழுத்துச் சென்றபோது, நான் வீதிக்கு வந்து அழுதேன்...... கதறினேன்...... எனக்கு உதவி செய்ய யாரும் இல்லையா எனக் கூக்குரலிட்டேன், என் குரலுக்கு செவி சாய்க்க யாரும் வரவில்லையே..... ஆறுதல் கூற யாருமில்லையே..... ஏன்?....... ஏன்?...... ஏன்?...... மகனே, மகளே சிந்தித்து செயற்படு.

## சிரிப்பு(பூ) யார் தள்ளிவிட்டது?

ஓர் அழகிய கிராமம். அன்று ஒரு நாள் தவறுதலாக ஒரு சிறுவன் கிணற்றுக்குள் விழுந்து விட்டான். ஊர் மக்கள் அனைவரும் கட்டிளம் காளையர்களான இளைஞர்களும் புதினம் பார்த்துக்கொண்டு நிற்கின்றனரே தவிர யாரும் அச்சிறுவனைக் காப்பாற்ற முயற்சிக்கவில்லை. உடனே ஒரு கிழவன், கிணற்றுக்குள் பாய்ந்து அச்சிறுவனைத் தூக்கி மேலே ஏற்றிவருகின்றார். அந்த வயோதிப மனிதனை ஊர் மக்கள் அனைவரும் பாராட்டினர். அப்போது அந்த வயோதிபர் கடும் கோபத்துடன் கேட்டார் "இந்தப் பாராட்டுக்களெல்லாம் இருக்கட்டும். என்னை யார் கிணற்றுக்குள் தள்ளிவிட்டது"

*த. தவறஞ்சன், அச்சங்குளம், நானாட்டான்.*




## முத்திப்பேறு பெறும் புனித ஜோண் பொஸ்கோவின் தாயார்

# திருமதி மார்கரேட் ஒக்கியேனா

**அருட்தந்தை. கு. சாலமோன்**
**இயக்குனர், ஜோன் பொஸ்கோ தொழிற்பயிற்சி நிலையம், 19வது கட்டை நாச்சிக்குடா.**

கார்த்திகை 25ம் நாள் சலேசிய சபைக்கு மிகவும் முக்கியமான நாள். அன்று பாப்பரசர் 16ம் ஆசீர்வாதப்பர் வத்திகானிலே **மார்கரேட் ஒக்கியேனா** என்னும் கிறிஸ்தவத் தாய்க்கு முத்திப் பேறு பட்டம் அளிப்பார். இவர் திருமணமானவர், இரு குழந்தைகளுக்குத் தாய், ஏழை விவசாயக் குடும்பத் தலைவியாக செயற்பட்டவர். இவர் யார்? பிரான்சிஸ் பொஸ்கோவிற்கு இரண்டாவது மனைவியாக அமைந்தவர். சலேசிய சபையின் நிறுவுனராகிய புனித ஜோன் போஸ்கோவின் தாய்தான் இவர்.

இவருடைய அண்ணன் ஜோசப் போஸ்கோ. மார்க்ரேட் ஒக்கியேனா பிரான்சிஸ் பொஸ்கோவை மணம்புரிந்து அவரிற்கு முதல் மனைவி வழியாக பிறந்த அந்தோனியையும் வளர்க்க வாக்குக் கொடுத்தவர். புனித ஜோண் பொஸ்கோ இரு வயது சிறுவனாக இருக்கும்போது தந்தை இறந்துவிடுகிறார். மார்கரேட் குடும்பப் பொறுப்பை ஏற்கிறார். அந்தோனிக்கு இவர் மாற்றாந் தாய்தானே! இருப்பினும் குடும்ப பொருளாதாரப் பாரத்தை ஏற்க அந்தோனியோடு ஒத்துழைக்கிறாள்.

ஜோண் பொஸ்கோவின் ஞான வாழ்க்கைக்கு வித்திட்டவர் இவர்தான். நான் குருவாகப் போகிறேன் என்று ஜோண் பொஸ்கோ தன் விருப்பத்தை தெரிவித்தபோது அதற்குப் பாதுகாப்பளித்தவரும் இவர்தான். இரவில் வானத்தில் இருக்கும் விண்மீன்களைக் காட்டி "கடவுள் உன்னைப் பார்க்கிறார்" என்று கூறிக் கடவுளின் சன்னிதானத்திலே வாழ அழைத்தவரும் இவர்தான். பாசத்தோடு கூடிய கண்டிப்பு மற்றும் மன்னிப்போடு கலந்த புது வழியை எடுத்தியம்பியவரும் இவர்தான்.

1826ம் ஆண்டு பங்குனி 26ம் நாள் அன்று ஜோண் முதல் நன்மை வாங்குகிறான். அவன் நல்ல பாவசங்கீர்த்தனம் செய்ய தயாரித்தவர் இவர்தான். சடங்குகள் முடிந்து சிறுவன் வீட்டிற்கு வந்தபோது தாய் கூறியதாவது: "இது உன் வாழ்க்கையின் முக்கிய நாள். இறைவன் உன் உள்ளத்தில் வாழ வந்திருக்கிறார். ஆகவே நீ எப்போதும் நல்லவனாக வாழ முயற்சி செய். அடிக்கடி நற்கருணை உட்கொள், திறந்த மனத்தோடு பாவசங்கீர்த்தனம் செய், எல்லாக் கெட்ட உரையாடல்களையும் தூஷண வார்த்தைகளையும் கொள்ளை நோயைப்போல் தவிர்த்துக்கொள்"

வருடங்கள் கழிந்து ஒருநாள் பங்குத்தந்தை தாஸ்ஸனோ மார்கரேட் அம்மாளைக் கூப்பிட்டு, "உங்கள் மகன் தியான சபையில சேர ஆசைப்படுகிறான், அதற்கு நீங்கள் மறுப்புத் தெரிவியுங்கள். ஏனெனில் நீங்கள் ஏழ்மையில் வாழ்கிறீர்கள். இந்நிலையில் தியான சபையிலிருந்துகொண்டு உங்களுக்கு எந்த விதத்திலும் உதவிசெய்ய இயலாது. இதை நீங்கள் பக்குவமாக அவனுக்கு எடுத்துச்சொல்லுங்கள்" என்று கூறினார்.

அன்னை மாக்கரேட் மகனை சந்திக்க கியேரி என்னும் இடத்திற்கு விரைந்து செல்கிறார். மகனைப்பார்த்து "மகனே, உன் வாழ்க்கை முடிவை ஆழ்ந்து யோசித்து எடுக்க வேண்டும். பங்குத்தந்தை உன்னை அங்கு போகவேண்டாம் என்று சொல்ல என்னை அனுப்பியிருக்கிறார். நன்றாகக் கேள் மகனே! இந்த விடயத்தில் என்னை இழுக்காதே. கடவுளுக்கு முதலிடம் கொடு. நான் ஏழைக் குடும்பத்தில் பிறந்த பெண். ஏழ்மையில்தான் வாழ்ந்தேன். உனக்குத்தான் நம் வாழ்க்கை தெரியுமே? ஏழையாகவே இறக்க விரும்புகிறேன். நீ அப்படி குருவாகி அதுவும் பணக்காரக் குருவாக வாழும் துர்ப்பாக்கியம் உனக்கு கிடைக்குமானால் நான், நீ வசிக்கும் இடத்திற்குள் காலடி எடுத்து வைக்கமாட்டேன். இதை மட்டும் மனதில் வைத்துக் கொள்" என்று சொல்லிவிட்டு வீடு திரும்பினாள்.

மாதங்கள் ஓடின. 1841ம் ஆண்டு ஆனி 5ம் நாள் அன்று பேராயர் லூயிஸ் ஃபிரன்சோனியினால் ஜோன் பொஸ்கோ குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

அன்று மாலை எல்லா விருந்தாளிகளும் வீடு சென்றபின், மார்கரேட் அம்மாள் மகனுக்குக் கூறியது "நீ குருவாக திருநிலைப்படுத்தப்பட்டாய், கடவுளுக்கு நெருக்கமாகி விட்டாய். இதை மனதில் இருத்திக்கொள். பூசை வைப்பது துன்பப்படுவதற்கு சமன். நீ இப்போது உணரமாட்டாய், பின்னர் உணர்வாய். ஆன்ம மீட்பு மட்டும்தான் உன் கண்முன் இருக்க வேண்டும். மகனே, அம்மாவைப்பற்றி சிறிதும் கவலைப்படாதே" என்று கூறியவர் தனியே தன் வாழ்க்கையை நடத்தினார்.

புனித ஜோன் பொஸ்கோ பெரிய காய்ச்சல் வந்து சிகிச்சை கொடுக்கப்பட்டு உயிர் பிழைத்தார். அவர் உயிர் பிழைத்தாரே தவிர மிகவும் பலவீனமாகவிருந்தார். ஆகவே மருத்துவர்களும் சக குருக்களும் ஒரு மாதமாவது ஓய்வு எடுக்க வேண்டும்மென்று கேட்டுக்கொண்டனர். இவர்களின் அறிவுரையை ஏற்றும், தம் பணியின் வளர்ச்சியை மனதில் கொண்டும் தம் அண்ணனோடும் தாயோடும் ஓய்வு நாட்களைக் கழித்தார்.

தன் பணிக்கு திரும்பி வர முன்வந்தபோது தன்னிடம் வாழ்ந்து வந்த அநாதை இளைஞர்களுக்குத் தாயாக இருக்க தம் தாயை அழைத்தார். அன்னை மாக்கரேட் தாம் பிறந்து வளர்ந்த கிராமத்தை விட்டுவர மனமில்லாமல் இருந்தும் தன் மகனின் நற்பணிக்கு உதவ தன் குக்கிராமமாகிய "பெக்கி" யை விட்டு மகனோடு வந்து தங்கிப் பணிவிடை புரிந்தார். செபிக்க கற்றுக்கொடுப்பது, உணவு பரிமாறுவது, நோயாளிகளைக் கவனிப்பது, உடல், உடை சுத்தத்தைப் பேணிக் காப்பது, கிழிந்த உடைகளைத் தைத்துக்கொடுப்பது போன்ற எளிய பணிகள் புரிந்து புதிய சலேசிய இல்லத்திற்கு மெருகூட்டினார்.

ஓடி ஓடி உழைத்த அன்னை மார்கரெட்டின் வாழ்க்கை தன் முடிவை நோக்கி சென்றுகொண்டிருந்தது. 1856ம் ஆண்டு கார்த்திகை 15ம் நாள் நிமோனியாக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டார். படுத்த படுக்கையாகிவிட்டார். எல்லாச் சிறார்களும் சோகமாக இருந்தனர்.

சில நாட்கள் கழித்து நிலைமை மோசமாகியதால் அண்ணன் ஜோசப்பையும் குடும்பத்தாரையும் ஜோண் பொஸ்கோ அழைத்தார். இவர்கள் தாயையும் அப்பம்மாவையும் கண்டனர். அவ்வேளை தன் மகன் ஜோன் பொஸ்கோவைக் கூப்பிட்டு "எளிமையாக வாழ வேண்டும். பிறரிடம் இருந்து என்ன நடத்தையை எதிர்பார்க்கிறாயோ அதை உன் வாழ்க்கையில் நடத்திக் காட்ட வேண்டும். நம் வாழ்க்கையில் நிறையத் துன்பங்கள் இருக்கும். உண்மையான, ஆழமான மகிழ்ச்சி மறு வாழ்வில்தான் கிடைக்கும். எனக்காக செபி, நீ எனக்காக கண்ணீர் விடுவதை என்னால் பார்க்க இயலாது" என்று கூறியவர் கார்த்திகை 25ம் நாள் (1856) அதிகாலை 3.00 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

**இந்தக் கிறிஸ்தவ வீரத்தாய்க்குத்தான் இன்று திருச்சபை முழுவதும் வீரவணக்கம் செலுத்துகிறது. தாய்மை** புனிதத்தின் அடித்தளம் என்பதை இவர் வாழ்க்கையில் நிரூபித்தார். தமிழ் மண்ணில் வாழும் அனைத்துத் தாய்மார்களுக்கும் விசேட விதமாக தன் மகனையோ, மகளையோ, குருவாகவோ, கன்னியராகவோ அர்ப்பணித்த தாய்மார்களுக்கும், பிள்ளைகளை ஈன்றெடுத்து வளர்த்துவரும் தாய்மார்களுக்கும், திருமண வாசலிலே நிற்கும், தாயாகத் திகழ ஆவலோடு துடிக்கும் இளம் பெண்களுக்கும் இவர் பரிந்து பேசுவாராக! இந்நாளிலே பாரெங்கும் பரவிக்கிடக்கும் சலேசிய குடும்பத்திற்காகச் செபிக்குமாறும், விசேடவிதமாக இலங்கைத் தீவிலே இயங்கிக்கொண்டுவரும் அனைத்துச் சலேசிய குழுமங்களுக்காகவும், அதிவிசேட விதமாக நம்மிடையே முருங்கன், கரியாலை நாகபடுவான் பகுதிகளிலே துளிர்விட்டுகொண்டிருக்கும் நிறுவனங்களுக்காகவும் இவரின் பரிந்துரையை நாடுமாறும் அன்போடு அழைக்கின்றோம்.

# அன்பின் கங்கை அன்னை தெரேசா

**விறு விறுப்புத் தொடர் 35**

சொல்லின் செல்வர் அமுது

## பொன் வீணையில் புதிய விரல்கள்

கல்கத்தாவிலுள்ள கௌறா புகையிரத நிலையத்தில் ஒரு நாள் இரவு. காவல் பிரிவினர் குற்றவாளிகளை வளைத்துப் பிடித்தனர். குடிவெறியர், முடிச்சுமாறிகள், கத்திரிக்கள்ளர், காமத்தரகர், போதைப்பொருள் விற்பனையாளர், வன்செயலாளர் என்போர் அக்கூட்டத்தில் சிக்கினர். எந்தப் பிரச்சினையுமில்லாமல் புகையிரத நிலைய மண்டபம் ஒன்றில் அவர்கள் அனைவரும் அடைத்து வைக்கப்பட்டனர். மறுநாள் நீதவான் முன்னிலையில் அவர்களைக் கொண்டுபோக ஏற்பாடாகியிருந்தது.

அவர்களுக்குள் அன்புப் பணியாளர் சபையைச் சேர்ந்த ஒரு சகோதரமும் இருந்தார். அவர் தனது குற்றமற்ற நிலையைக் கூறினார். ஆனால் மற்றோர் தாங்கள் நிரபராதிகள் என்று போட்ட கூச்சலில் சகோதரர் குரல் எடுபடவில்லை. அவரும் கும்பலோடு சேர்த்து அடைக்கப்பட்டார்.

இரவில் ஈரக் கசிவான நிலத்தில் அவர் சரிந்தபோது நுளம்புகளும், எலிகளும் அவரையும் பதம் பார்த்தன. பிடிக்கப்பட்ட இளம் குற்றவாளிகள் கூறிய வசைமொழிகள் அவருக்குப் பாம்பு கடித்த நஞ்சைப் பரப்பின. "உமக்கு நீரே உதவிபுரிய இயலாமல் இருக்கும்போது எங்களுக்கு உதவி செய்ய வேண்டுமென ஏன் சிரமப்படுகிறீர்? நீர் சொல்லும் இறைவன் இப்போது எங்கே போய்விட்டார்?" என்று சொல்லி நக்கலடித்தார்கள். அவர் முழந்தாளிலிருந்து இவ்வாறு மற்றோருடைய பழிக்குத் தான் ஆளாக நேரிட்டது ஏன் என்று கேட்டுக்கொண்டார். இந்த வரலாறு இயேசு வாழ்விலும் வந்ததுதான். இதுதான் சிலுவையின் பாதை. இந்தச் சகோதரர் அவர்கள், அன்புப் பணியாளர் சபையில் சேர்ந்தது அண்மையில்தான்.

கௌறா, சீல்தா புகையிரத நிலையங்களில் நூற்றுக்கணக்கான நாடோடி இளைஞர்களைக் காணலாம். பலர் தாய் தந்தையரை இழந்தவர்கள். வேறு பலர் வீடுகளில் இருந்து ஓடி வந்தவர்கள். இன்னும் பலர் யாரும் அற்றவர்கள். வேறு சிலர் பாதுகாப்பு நிலையங்களால் பாய்ந்து வந்தவர்கள். முடிச்சுக்களைத் தூக்குதல், சப்பாத்துக்களை மினுக்குதல், கூலி வேலை செய்தல்.... இவ்வாறு பல வகையான தொழில்களில் ஈடுபட்டனர். அவர்கள் குற்றச்செயல்களில் ஈடுபடாமல் பாதுகாக்கவும், அவர்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டவும், நோயற்ற வாழ்வு வாழவும், தொழில் ஏதாவது கற்றுக்கொள்ளவும் வழிவகை செய்வதை அன்புச் சகோதரர்கள் பெருங்கடமையாகத் தலையில் சுமந்தனர்.

அன்றிரவு அந்தச் சகோதரர் சபைக்குரிய குறிப்பான உடுப்பு ஏதாவது அணிந்திருந்தால் அவர் குற்றவாளிகளின் கூண்டில் இருக்க நேரிட்டிராது. அன்புப் பணியாளர் சபைச் சகோதரிகளைப் போல இவர்களைப் பிரித்து அறிய முடியாது. பொதுவாக ஆடவர் அணியும் காற்சட்டையும், மேலங்கியும் (Shirt) மாத்திரம் அணிந்திருப்பார்கள். இவர்கள் அன்னை திரேசா சபையைச் சேர்ந்தவர்கள் என அறிய வாய்ப்பில்லை. கூர்ந்து கவனித்தால் ஒரு சின்னச் சிலுவை மேலங்கியில் தெரியும். இந்தியா, இலங்கையில் சமயப் பணியாளர் நீண்ட வெண்ணிற அங்கியை அணிவது வழக்கம். அதைக் கண்டதும் அவர்கள் யாரென மட்டிட முடியும்.

அன்னை திரேசாவின் சகோதரிகளை இந்தியாவில் - உலகில் - எங்கேயும் அடையாளம் கண்டுகொள்ளலாம். அவர்கள் அணிந்திருக்கும் உடையே அவர்களைச் சொல்லித் தரும். ஆனால் சகோதரர்கள் சபையின் பொறுப்பாளர் சகோதரர் அன்ட்று அவர்கள் "பிரித்துக் காட்டும் ஒரு உடுப்புத் தேவையற்றது" என்று ஒதுக்கிவிட்டார். "அது எங்களுக்கு ஒரு மதிப்பைத் தருவதாய் இருக்கும். அவ்வாறான உடுப்புக்கள் இல்லாமலிருந்தால் நாங்கள் ஏழைகள், உரிமை குறைந்த சமுதாயத்தின் அடிநிலையில் உள்ளவர்கள் என அறிவது இலகுவாகும்" என்பது அவர் கருத்தாகும்.

முன்னர் குறிப்பிட்ட இளஞ்சகோதரருக்கு ஏற்பட்ட மதிப்பிழந்த செயலை அன்னை திரேசாவுக்குச் சொன்னபோது அன்னை அவர்கள், "நமது வறிய சகோதரர்கள் இப்படியான துன்பங்களை ஒவ்வொரு இரவும் தொடர்ந்து அனுபவிக்கின்றார்கள்." என்றார்.

உலக நியதிகளை ஒரு கணநேரம் சிந்தித்தால் அவை, ஆண் - பெண், பகல் - இரவு, இன்பம் - துன்பம், அகம் - புறம் என்று இரண்டு இரண்டாக அமைகின்றன. அன்னை திரேசாவின் அன்புப் பணியாளர் சபையில் இளங்கன்னியர்கள் சேர்ந்து நல்ல பணிகள் புரியும்போது ஆண்கள் பக்கம் வெறுமையாயிருக்கலாமா?

1963 ஆம் ஆண்டு அந்த வசந்தம் மலர்ந்தது. அன்னை திரேசாவின் தொண்டுகளில் பங்குபற்றி ஏழைகளுக்குப் பணிபுரிய விரும்புவதாக 13 ஆண்கள் வந்து சபையில் சேர்ந்து பச்சைக்கொடி காட்டினர். அவர்களில் ஒருவர் குரு வரிசையில் உள்ளவர். பல்வேறு சபைகளில் கடமை செய்த பலகுருமார் அன்னை திரேசாவின் பணியில் ஈடுபடப் பெரிதும் விரும்பினார்கள். ஆனால் அவர்கள் ஒரு பெண்ணின் தலைமையில் ஆடவரான துறவிகள் பணிபுரிவதை ஊக்கப்படுத்தியதில்லை.

ஆடவர்கள், குழந்தை இல்லத்தின் முதலாம் மாடியில் வசித்து அன்னையின் வேலைத் திட்டங்களை ஆராய்ந்து அறிந்துகொண்டனர். முதலில் கன்னியர் கடன் சேரிகளில் தொண்டுபுரியச் சென்றனர். கழுத்துத் திறந்த மேலங்கியும், பாரம் குறைந்த காற்சட்டைகளும் அணிந்துகொண்டனர். தங்களை வேறுபடுத்திக் காட்ட மேலங்கியில் ஒரு சிறிய சிலுவை அணிந்துகொண்டனர். ஆடவர்களுக்கான துறவற சபையைப் பாப்பரசர் ஏற்றுக்கொள்ளும் முன்பு கல்கத்தா பேராயர் அல்பேட் வின்சென்ற் என்பவர் தமது ஆசீரை அளித்து அவர்களை வாழ்த்தினார். இந்தச் சம்பவம் 25.03.1963 இல் நடைபெற்றது. அன்றைய தினம் பீகார் என்று கல்கத்தாவின் பக்கத்திலுள்ள பெரிய மாநிலத்தில் இயேசு சபைக் குருவாக ஒரு அவுஸ்ரேலியர் குருப்பட்டம் பெற்றார் அவர் பெயர், அன்னை திரேசாவின் பெயரைப் போல ஏழை மக்களின் வாயில் தேன் தடவக் கூடியது.



அன்ட்று என்பதுதான் அவர் பெயர். ஏழைகளுக்குப் பணி செய்ய வேண்டும் என்ற அவா அவர் நெஞ்சில் கூடு கட்டியிருந்தது. பழம் நழுவிப் பாலில் விழுந்தது. அவரைப் பயிற்சிக் காலத்தில் குழந்தை இல்லத்தில் வாழ்ந்து அன்புச் சகோதரர்களுடன் ஒரு மாதம் பணிபுரியுமாறு அனுப்பி வைத்தனர். குரவர் அன்ட்று அவர்கள் உயரமான மெல்லிய உடலமைப்பு உள்ளவர். தாடியும் வளர்ந்திருந்தது.

அன்புச் சகோதரர்கள், கன்னியர்கள் பணிகளில் சிந்தையைப் பறிகொடுத்தார். அவர்களுடைய வறுமையும் அர்ப்பணிப்பும் அவர் நெஞ்சில் ஆணி அடித்தன. ஆன்மீக வளர்ச்சியில் அவர்களுக்குள்ள ஆர்வம் அவரை வியப்பின் உச்சியில் ஏற்றிவிட்டது. ஆன்மீகத் தலைவர் இல்லாதபோதும் அவர்கள் வாழ்ந்து வந்த வாழ்வு இவருக்குத் தீபம் ஏற்றியது. ஒரு மாதம் பறந்துவிட்டது. மாத முடிவில் அன்னை திரேசா, அன்புச் சகோதரர் சபையின் தலைவர் பொறுப்பை ஏற்குமாறு அவரிடம் கேட்டுக் கொண்டார். அவரும் அதை மறுக்கவில்லை. ஆனால் தனது இயேசு சபையின் மேலதிகாரிகள் ஏற்றுக்கொள்வார்களானால் தான் திரும்பி வருவதாக வாக்களித்திருந்தார்.

"இயேசு சபையில் இருந்து அன்னை திரேசா என்னைக் கடத்திக் கொண்டு வந்துவிட்டார்" என்று நகைச்சுவையாக அவர் மக்களிடம் சொல்வதுண்டு. சிறிதளவு வறுமைத் தொட்டிலில் ஆடி வந்தவரைக் கட்டிலில் வந்து ஆடச் செய்துவிட்டார் அன்னை. அன்னை திரேசாவுக்கும் அவருக்கும் சில ஒற்றுமைகள் உண்டு..

அன்னையைப்போல அவரும் தனது முதலாவது அழைத்தலைவிட்டு இரண்டாவது அழைத்தலுக்குச் செவிசாய்த்தார். அவருக்கு அப்போது வயது 38. அதே வயதில்தான் அன்னையும் தன் வாழ்வின் திசையைத் திருப்பினார். இருவரும் தங்கள் சொந்தப் பெயரை சகோதரர் அன்ட்று என மாற்றிக்கொண்டதோடு சபை சார்ந்த பட்டத்தையும் பொதுவான வேலைகளுக்கு அடியான் என்றும் குறித்துக்கொண்டார்.

அன்னை திரேசாவுக்கு அவரைப்பற்றிய உயர்ந்த மதிப்பு உண்டு. "நீண்டகாலம் தன்னை முற்றாக ஏழைகளுக்கு ஒப்புக் கொடுத்துப் பணிசெய்து வந்திருக்கிறார் என நான் நினைக்கிறேன். அவர் மிகவும் தூய்மையான மனிதர். உண்மையில் பரிசுத்தமானவர். ஆன்மீகம், மனநிலை, உடல்நிலை எல்லா வகையிலும் இறைவன் கொடைகளால் நிரம்பிய இயேசு சபைக் குரு. எங்கள் இருவருக்கும் ஒரே எண்ணம். இது சாதாரண வழக்கத்தில் இல்லாத ஒன்று. ஆனால் இருவருக்கும் பல வேறுபாடுகளும் உண்டு. இயல்பிலேயே என்னிலும் பார்க்க அவர் அருளால் கூடியவர். மிகவும் சிறந்தவர்." என்று மனிதரை அளக்கும் பாகைமானியில் சிறப்புற்ற அன்னையவர்கள் குறிப்பிடுகின்றார்.

சகோதரர் அன்ட்று அவர்கள் அவுஸ்ரேலியாவில் மெல்போர்ன் பட்டினத்தோடு சேர்ந்த சிறு நகரான கவுத்தோன் எனும் இடத்தைச் சேர்ந்தவர். வசதியான நடுத்தர வகுப்பினர். தந்தையார் ஏற்றுக் கொள்ளாதபோதும், இந்தியாவுக்கு வந்து, இயேசு சபையில் சேர்ந்து குருவாக விரும்பினார். கிட்டப்பூர் என்ற இடத்தில் ஒரு இல்லத்தைப் பெற்று அன்பின் சகோதரர்களுக்கு ஒப்படைத்தார் அன்னை. அதுவே சகோதரர்களின் தலைமைத்தானமாயிற்று. அன்புச் சகோதரர்களின் பணித்தளங்கள் விரைவில் இந்தியாவிலும், பிறநாடுகளிலும் பரம்பின. 1991இல் இந்தியாவில் 45 நிலையங்களும், 36 வெளிநாட்டு நிலையங்களும் சேவையின் நிழலளித்தன.

20 ஆண்டுகளுக்குப் பின்பு புகையிரத நிலையத்தில் அடைபட்டிருந்த சகோதரர் அவர்களை நேரிலே கண்ட ஒருவர், "நீர் கடந்த காலத்தில் நடந்தவற்றையிட்டு மனவேதனை அடைந்திருக்கிறீரா? எப்போதாவது சபையைவிட்டு விலக வேண்டுமென மனதில் ஒரு சோதனை ஏற்பட்டதா?" என்று கேட்டார்.

"நான் அன்புப் பணியாளர் கூட்டத்தில் சேர்ந்து கொள்வதற்கு முன்னர் எனக்குப் பல சிக்கல்கள் இருந்தன. மனம்போன போக்கில் செல்லும் விசித்திரமான எண்ணங்களும், ஆசைகளும் என் உள்ளத்தை நொருக்கி, மனமகிழ்ச்சியையும் இழந்து வாழ்ந்தேன். இறைவன் என்னை அழைத்து, இந்த அன்புப் பணியில் ஈடுபடுமாறு செய்தார். இப்போது இதைவிட்டு விலக வேண்டுமென ஒரு கணநேரம்கூட நான் சிந்தித்ததில்லை. பல நெருக்கடிகளிலும், துன்பங்களிலும் நான் இறைவனுக்கு அருகில் இருப்பதை உணர்ந்துள்ளேன். ஒருபோதும் இந்தத் துறவற நிலையிலிருந்தும், சேவையிலிருந்தும் பிரியமாட்டேன்" என்றார்.

(கங்கை தொடர்ந்து பாயும்)

## உங்களுக்குத் தெரியுமா?
### மறையறிவுப் பகுதி இல.43



இம்மாதத்திற்கான மறையறிவுப் போட்டி வினாக்கள் 2006 ஒக்டோபர் மாத மன்னா இதழிலிருந்து தொகுக்கப்படுகின்றன. ஒருமுறை வினாக்களைத் தயாரிப்பதற்கு மூன்று நான்கு முறைகளாவது மன்னாவைத் திருப்பித் திருப்பிப் பார்க்க வேண்டியுள்ளது. நீங்கள் மீண்டும் ஒரேயொரு முறை மன்னாவைப் புரட்டிப் பார்த்தால் விடைகளைத் தெரிந்துகொள்ளலாம்.

மறையறிவுப் பகுதி 39க்கு 53பேர் விடையளித்திருப்பது மகிழ்ச்சியாக உள்ளது. அடுத்தமுறை நீங்கள் அதிஸ்ரசாலியாகிப் பணப் பரிசு உங்களுக்குக் கிடைத்து விடலாம். முயற்சியுங்கள். பரிசு கிடைக்காவிட்டாலும்கூட நீங்கள் வளர்ந்து கொண்டிருக்கிறீர்கள். ஆகவே தொடர்ந்து பங்குகொள்ளுங்கள்.

### கேள்விகள் :

1. "தீவிரவாதம் இறைவனின் இயல்புக்கு முற்றிலும் மாறுபட்டது. பயங்கரவாதம் கொலை போன்ற செயல்கள் இறைவனின் இயல்புக்கு எதிரானவை" எனத் தாம் முன்பு பேராசிரியராகக் கடமையாற்றிய பல்கலைக்கழகத்தில் மாணவர்களுக்கு உரையாற்றும்போது திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்பல்கலைக்கழகம் எது?

2. "வாழ்பவன் நானல்ல என்னில் கிறீஸ்துவே வாழ்கின்றார்" இதைக் கூறியவர் புனித பவுல். யாருக்கு இதைக் கூறினார்?

3. "நீங்கள் குடும்பமாக ஞாயிறு வழிபாட்டிற்குச் செல்லும் போது ஞாயிறு அழகு பெறுகின்றது. ஞாயிறு அழகு பெற்றால் அந்த வாரம் முழுவதும் அழகு பெறும்" இது யார் கூறிய வார்த்தைகள்?

4. திருத்தந்தையின் மறை பரப்புச் சபைகளின் தற்போதைய இலங்கைக்கான தேசிய இயக்குனர் யார்?

5. வத்திக்கானின் புதிய செயலாளராக இராஜ தந்திர வட்டாரத்திற்கு வெளியே இருந்து கருதினால் பெற்றோனே நியமிக்கப்பட்டுள்ளார். இவர் எந்தக் குருத்துவ சபையைச் சேர்ந்தவர்?

6. மன்னார் மண்ணின் மைந்தன் இசைத் துறையில் பல பட்டங்கள் விருதுகள் பெற்று நம் மண்ணின் பெருமைக்குச் சான்றாக தமிழ் நாட்டில் சாதனை படைத்துக் கொண்டிருக்கின்றார். அவர் யார்?

7. ஆயரின் அனுசரணையோடு அருட்பணி. ஜெயந்தன் பச்சேக் அடிகளாரால் அறுங்கோண வடிவில் நற்கருணை நாதருக்கு ஒரு சிற்றாலயம் கட்டி ஆயர் அவர்களால் இவ்வாண்டு புரட்டாதி 10ம் நாள் திறந்துவைக்கப்பட்டது. அது எங்கே?

8. "பெண் விடுதலையே உயர்ச்சி" என்ற அடிப்படை நோக்கத்தைக்கொண்டு JRS நிறுவனத்தால் முன்னெடுக்கப்படும் முக்கிய பணி *வாழ்வியற் பயிற்சி மையமாகும்.* ஆவணி மாதம் 10ம் திகதி இப்பயிற்சி மையம் வவுனியாவில் ஆரம்பிக்கப்பட்டது. JRS நிறுவனத்தின் முழுமையான தமிழ் பெயர் என்ன?

9. பள்ளிமுனை பங்கைச் சேர்ந்த ம. ஜோசவ் செல்வன் செபமாலைத் தாசர் துறவறசபைக் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டு தனது முதலாவது திருப்பலியை 19.10.2006ல் பள்ளிமுனை புனித லூசியா தேவாலயத்தில் ஒப்புக்கொடுத்தார். இவரைக் குருவாக அபிசேகம் செய்தவர் யார்?

10. திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பரின் மீட்பின் பணி என்ற சுற்றுமடலில் 'உண்மையாக மறைபரப்புப் பணிகளின் ஆன்மா போன்று செயற்படுவது' எது என்று குறிப்பிடுகின்றார்?

**மாணவர் மறையறிவுப் பகுதி இல. 41 இற்கான கேள்விகளுக்கு 36 பேர் விடை அளித்திருந்தனர்.**

**இவர்களுள்**

**பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட**

**அதிஸ்ரசாலி:**

**செ. ஜெசி,**

**மடுக்கோயில், மடு.**

பாராட்டுக்குரியவர்களாக தெரிவுசெய்யப்படும்

**10 அதிஸ்ரசாலிகள்**

1. அ. வதனி, முதலைகுத்தி, உயிலங்குளம்.
2. ஆ. லக்ஸனா, ஏ 7 மடுக்கோயில், மடு.
3. யோ. மரின்சிலி, மன்/ மறத்தி கன்னாட்டி றோ.க.த.க. பாட.
4. றெ. யூடிற்றா, பெரியகுஞ்சுக்குளம், முருங்கன்.
5. அ. இனிக்கா றோசி, 6ம் வட்டாரம், வங்காலை.
6. எம். ராதா, கீளியன்குடியிருப்பு, தலைமன்னார்.
7. தெ. எலிசா, திருக்குடும்ப கன்னியர் மடம், தலவாக்கலை.
8. பி. ஜெ. றொணி திலிப் குமார், எமில்நகர், மன்னார்.
9. திருமதி. தே. யேசுராணி, கீரிசுட்டான், பாலம்பிட்டி.
10. அஜித்ரா பிரான்சிஸ், 4ம் குறுக்குத்தெரு, சின்னக்கடை.

## குடும்பக் குவலயம்



# செப வாழ்வே நம் ஆன்ம வாழ்வு

*பீ. கிறிஸ்பி குருஸ்,*
*5ம் வட்டாரம், பேசாலை.*

செபம் என்றால் என்ன? நம் இதயத்தை இறைவன்பால் எழுப்புவதே செபம். இந்தச் சிறிய விடைக்குள்ளே எத்தனை பெரிய உண்மைகள் அடங்கியிருக்கின்றன?

செபத்தின் மேன்மை எப்படிப்பட்டதென்றால், நாம் இறைவனோடு இணைந்திருப்பது செபம். நமது மனதை ஒரு நிலைப்படுத்தி இறைவனில் சங்கமமாவது செபம்! கலைமான் நீரோடையை வாஞ்சித்து ஓடுவதுபோல இறைவனுடைய அன்பை சுவைக்க வாஞ்சித்து நிற்பதுவே செபம்!

இறை அருளை நாம் இழந்துவிடாமல் இருக்க நாம் எப்போதும் இறைவேண்டல் செய்ய வேண்டும். இறை அனுபவத்தில் வளர, நமது ஆன்மீகம் வளர, இடைவிடாது நாம் செபிக்க வேண்டும்.

திருவிவிலியத்தில் செபத்தின் மேன்மை பற்றி, செபத்தின் அவசியம் பற்றி, செபத்தின் வலிமை பற்றி ஆண்டவராகிய யேசுக்கிறிஸ்து முன்மொழிந்திருக்கிறார்.


விழித்திருந்து செபியுங்கள், உபவாசித்து செபியுங்கள், இடைவிடாது செபியுங்கள், சோதனைக்கு உட்படாதபடி செபியுங்கள், தாழ்மையோடு செபியுங்கள், ஒன்றுகூடிச் செபியுங்கள், தனித்திருந்து செபியுங்கள், எந்நேரமும் செபியுங்கள் என செபத்தைப் பற்றி அவர் கூறுவது ஆழ்ந்து சிந்திக்கப்பட வேண்டியவையாகும். நம் ஆண்டவர் இயேசு இவற்றையெல்லாம் கூறியதோடு மட்டும் அல்ல செய்தும் காட்டினார்.

"அவர் வேண்டுதல் செய்வதற்காக மலைமீது ஏறிச் சென்றார். கடவுளிடம் வேண்டுதல் செய்வதில் இரவெல்லாம் செலவிட்டார். தனிமையான இடத்துக்குச் சென்று வேண்டுதல் செய்தார்" என்று திருவிவிலியத்திலே பார்க்கின்றோம். தந்தையின் சித்தத்தை அறிந்துகொள்ள இயேசு தனிமையான இடம் நாடிச் சென்றார் என்று சொல்லப்படுகின்றது. இயேசு தந்தையை நோக்கி செபிக்காமல் எக்காரியமும் செய்ததில்லை.

நம்மைக் குறித்த வானகத் தந்தையின் எண்ணமும் அது தான். நாம் எப்போதும் ஆண்டவரோடு இருக்க வேண்டும். "எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருங்கள். இடைவிடாது இறைவனிடம் வேண்டுங்கள். எல்லாச் சூழ்நிலையிலும் நன்றி கூறுங்கள்." என 1 தெசலோனிக்கேயர் 5:16,17 ல் கூறப்பட்டுள்ளது.

எப்போதும் நன்றிகூறி இறைவனிடம் மன்றாட வேண்டும் என்பதும் நம் செப வாழ்வில் ஆழமாக இருக்க வேண்டும் என்பதும் பரிசுத்த ஆவியாரின் விருப்பமும்கூட.

"தூய ஆவியார் நமது வலுவற்ற நிலையில் நமக்குத் துணை நிற்கின்றார்: ஏனெனில் எதற்காக எப்படி இறைவனிடம் வேண்டுவது என்று நமக்குத் தெரியாது : தூய ஆவியார்தாமே சொல்வடிவம் பெறமுடியாத நம்முடைய பெருமூச்சுக்களின் வாயிலாய் நமக்காகப் பரிந்து பேசுகிறார்" (உரோமையர் 8: 26).



நமது தேவைகளை, நமது வேண்டுதல்களை முன்வைத்து செபிப்பது மட்டுமல்ல செபம். மாறாக நம் ஆண்டவர் நம்மோடு இருக்க வேண்டும் என்று செபிக்க வேண்டும். ஆண்டவர் நம்மோடு இணைந்து இருந்தால் மட்டுமே அவரது திட்டங்கள் நமக்கு வெளிப்படுத்தப்படும். ஆண்டவர் நம்மோடு பேசுவார். ஆழ்நிலைத் தியானத்தில் நம்மை ஒப்புக்கொடுத்து, இறைப்பிரசன்னத்துக்குள் நாம் மூழ்கும்போது ஆண்டவரின் குரலொலியை நம்மால் கேட்க முடியும். அந்தப் பரவச நிலை இறை வேண்டலின்போதுதான் நிகழுகின்றது.

தாம் செய்ய வேண்டியவைகளைப் பற்றி இறைமகன் தந்தையோடு கலந்தாலோசித்ததுபோல நமது பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண தந்தையோடு நாமும் கலந்து ஆலோசிக்க வேண்டும். அவரது விருப்பம் என்னவென்பதை தெரிந்துகொள்ள வேண்டும்.

அன்னை மரியாவும் அவ்வாறே செய்தார். தன்னை முற்றும் முழுவதுமாக கையளித்து தாழ்மையோடு வேண்டுதல் செய்தார். தன் மகனை இந்த உலகுக்கு தரும் தூய்மையான கன்னிகை மரியாள் என்று இறைவன் அவரைக் கண்டுகொண்டார்.

நமது பாவங்களை நினைத்து மனம் வருந்தி, இறை வேண்டல் செய்யும்போது ஆண்டவர் உரிய காலத்தில் நம் மன்றாட்டுக்கு செவிசாய்ப்பார். எனவே நாம் செபத்தில் நிலைத்திருந்து ஆத்ம பலமும், பரிசுத்தமும் பெறுவோம்.

# மனித மாண்பைப் பாதுகாப்போம்

*அ. மேரி அன்ரனியா (தர்சினி), முத்தரிப்புத்துறை.*

மனித உயிர் மாண்பு மிக்கதொன்றாகும். இன்றைய உலகில் பெருகிவரும் போதைப்பொருள் பாவனையால் துள்ளித் திரிய வேண்டிய இளம் மொட்டுக்கள் மலர்ந்து மணம் வீசாது இளமையிலேயே கருகி வாடி விடுகின்றன.

இன்று உலகில் எங்கு பார்த்தாலும் கொலை, கொள்ளை, துன்பம், துயரம் போன்ற செய்திகளையே நாம் அதிகமாகக் கேட்கின்றோம். மனிதனை மனிதன் விழுங்குகின்ற செயற்பாடுகளே நடைபெற்று வருகின்றன. மனித உயிர் மாண்பற்றுப் போய்விட்டது. குடிவெறி, காம இச்சை, தீயசெயல்கள் போன்றவற்றுக்கு தனது மனதினைச் செலுத்தி மனிதன் அதில் வாழ்க்கையை ஓட்டிக்கொண்டு போகிறான். சண்டை சச்சரவுகள் முற்றி மனிதன் மனிதனையே சுட்டுக் கொலை செய்கின்றான்.

ஏன் இந்த அவல நிலை? யார் செய்த குற்றம்? மணம் வீச வேண்டிய மலர்கள் போதை மணத்தை வீசுகின்றன. துள்ளித் திரிய வேண்டிய இளைஞர்கள், சிறுவர்கள் எல்லோரும் போதையில் துள்ளித்திரிகிறார்கள். இது பெற்றோர் செய்த குற்றமா? ஆண்டவர் செய்த குற்றமா? கடவுள் இந்த உலகைப் படைத்தது குற்றமா? நம்மை வாழ வைக்கத்தானே கடவுள் இந்த உலகைப் படைத்தார்? சாக அல்லவே! ஏன் நீ சாவதற்குத் துணிந்து போதைப் பொருட்களிலே உன் கவனத்தை ஈர்க்கிறாய்.

மனித உயிர் மாண்பு மிக்கது. அதை நாம் ஒவ்வொருவரும் நல்ல முறையில் காக்க வேண்டும். குடிவெறி போதைப்பொருட்களுக்கு எமது உடலைக் கொடுத்து மாண்பு மிக்க உயிரை நாம் அழித்துக்கொள்ளலாமா? சிந்திப்போம், செயற்படுவோம்.

## சமைப்போம் சுவைப்போம்

### மாஸ் மெலோ



**தேவையான பொருட்கள்**

சீனி - 1 கிலோ
ஜெலற்றீன் - 2 பெட்டி
கோன் பிளவர் - 1 பெட்டி
(தேவையான அளவில் பாவிக்கலாம்)
கலரிங் - 1 போத்தல்
(விரும்பிய கலர் தெரிவுசெய்து தேவையான அளவில் பாவிக்கலாம்)

**செய்முறை :** சீனியை 1/2 கிலோ அளவில் இரண்டாக பிரிக்கவும். 1ஜெலற்றீன் பெட்டியை உடைத்து 1 டம்ளர் கொதித்த நீரில் கட்டிபட விடாமல் கரைக்கவும். 1/2 கிலோ சீனியை ஒரு சட்டியில் போட்டு பெரிய டம்ளர் ஒன்றை எடுத்து ஒரு டம்ளர் நீர் சேர்த்து பாகு காய்ச்சவும். இந்தப் பாகு நிலை கொதிக்கும் போது கரைத்த ஜெலற்றினையும் ஊற்றி சேர்த்து கலக்கி காய்ச்சவும். தண்ணீருள் ஒரு துளி விடும்போது பாகு நிலைக்கு உருண்டால் உடனே இறக்கி பீற்றரில் நன்கு அடிக்கவும். பதத்திற்கு வந்ததும் அளவான கேக் தட்டில் பரவி ஊற்றவும்.

உடனே மற்றைய ஜெலற்றின் பெட்டியை உடைத்து கட்டிபடாமல் கொதி நீரில் கலக்கி வைத்துக்கொண்டு முதல் கூறப்பட்ட அளவில் அதேமுறையில் மிகுதி ½ கிலோ சீனியையும் காய்ச்சி ஜெலற்றின் சேர்த்து பாகு நிலைக்கு வந்ததும் இறக்கி பீற்றரில் நன்கு அடிக்கவும். அடிக்கும்போது நீங்கள் விரும்பிய நிறத்தை (கலரிங்) அளவாக விட்டு சேர்த்து அடிக்கவும். இதையும் மேற்கூறியவாறு முதலில் தட்டில் ஊற்றிய கலவைக்குமேல் பரவி ஊற்றி மூடிவைக்கவும். ஒரு நாள் முழுவதும் வைத்து மறுநாள் ஒட்டும் தன்மை இல்லாது இருக்க கோண்பிளவரைப் பூசி விரும்பிய வடிவில் வெட்டிப் பரிமாறலாம்.

## மருத்துவப் பொழிவு

### வீட்டு வைத்தியம்



- அதிக இரத்த அழுத்தம் உள்ளவர்கள், முற்றிய மஞ்சள் நிற முருங்கை இலையைப் பிழிந்து சாறு எடுத்து சாப்பாட்டுக்குப்பின் ஒரு தேக்கரண்டி வீதம் சாப்பிட்டு வந்தால் நோய் குணமாகும்.
- வாய்புண்கள் உள்ளவர்கள் கடுக்காயை அரைத்து புண் மீது பூசினால் வலி குறையும்.
- பாலும் சீனியும் கலக்காத தேநீரை எலுமிச்சைப் பழச்சாற்றில் கலந்து குடித்தால் வயிற்றுப் போக்கு உடனே குணமாகும்.
- ஒன்று அல்லது இரண்டு சொட்டு துளசிச்சாறு நாள் ஒன்றுக்கு மூன்று வேளை சாப்பிட்டு வந்தால் தடிமல் குணமாகும்.
- தீக்காயங்கள்மீது மரவள்ளிக் கிழங்கு இலையை அரைத்து தீப்புண்மீது பூசினால் குளுமையாக இருக்கும். தீப்புண்ணும் விரைவில் ஆறிவிடும்.
- ஒரு தேக்கரண்டி இஞ்சிச்சாறு, ஒரு தேக்கரண்டி தேன், ஒரு தேக்கரண்டி சீரகம் மூன்றையும் ஒன்றாகக் கலந்து ஒரு நாளைக்கு ஒரு தரம் சாப்பிட்டு வந்தாலும் இரத்த அழுத்த நோய் குணமாகும்.

## நீங்காத நினைவுகள்

### 31ம் நாள் நினைவு



மலர்வு 01 - 01 - 1928
உதிர்வு 21 - 11 - 2006

**திருமதி.பி.மேரி திரேசா பிகிறாடோ**
**(இளைப்பாறிய ஆசிரியை அடம்பன்)**

அன்புத் தந்தையே இறைவா! இவ்வுலக வாழ்வின் தனது கணக்கை முடித்துக்கொண்டு உமதண்டை வந்து சேர்ந்த உமது அடியாள் திருமதி பி. மேரி திரேசா பிகிறாடோ. அவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக உம்மை இரந்து மன்றாடுகிறோம்.

இவர் தம் வாழ்நளில் அறிந்தும், அறியாமலும் செய்த தவறுகளை உமது திருமகனின் திருப்பாடுகளாலும், மரணத்தினாலும் சிந்திய திரு இரத்தத்தினாலும் மன்னித்து, மறந்து அவரை நித்திய வான்வீட்டில் புனிதர்களின் கூட்டத்தில் சேர்த்தருள வேண்டுமென்று மன்றாடுகிறோம்.

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 21.12.2006 வியாழக்கிழமை அன்று காலை 6.00 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

*தகவல்: குடும்பத்தார்.*

## நீங்காத நினைவுகள்

### 36ம் ஆண்டு நினைவு



மலர்வு 1889
உதிர்வு 26 - 12 - 1970

**தொம்மை செபமாலை**
**(ஆவணம்)**

### 5ம் ஆண்டு நினைவு



மலர்வு 23 - 02 - 1924
உதிர்வு 04 - 01 - 2001

**தொம்மை சவிரிமுத்து**
**(ஆவணம்)**

### 20ம் ஆண்டு நினைவு




மலர்வு 05 - 04 - 1950
உதிர்வு 13 - 07 - 1986


**சவிரிமுத்து வெற்றிநாயகம்**
**(ஆவணம்)**

சீவியத்தில் நேசித்தோம், மரணத்திலும் மறவோம். அன்புள்ளமும், கனிவான பேச்சும், பாசம் நிறைந்த அமைதியான சுபாவமும் கொண்டு வாழ்ந்த அன்பு நெஞ்சங்களே, உங்களை நாம் என்றும் மறவோம். விண்ணிலே இறை ஒளியில் வாழும் நீங்கள், மண்ணில் வாழும் எங்களுக்காகவும் இறைவனை வேண்டுங்கள்.

உங்கள் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்.

# பெரியப்பா பதில்கள்





**கேள்வி : பெரியப்பா, இன்றைய மனிதன் பணம் பணம் என்று பைத்தியமாக அலைகிறானே?**

*- நிரஞ்சலா, நிந்தாவூர்*

பதில் : இந்த உலகத்தில் உயிர்வாழ ஒக்சிசனுக்கு அடுத்தபடியாக முக்கியமாகத் தேவைப்படுவது பணம்! என்று நான் சொல்லவில்லை. பணம் சம்பாதிப்பதிலேயே குறியாக இருக்கின்ற சில மனிதர்கள் சொல்கிறார்கள். இந்த நிலையைத் தோற்றுவித்தது இன்றைய நுகர்வுக் கலாச்சாரம். பணம் என்ன பணம்.. ! மனம் நிறைவாக இருக்க வேண்டுமே அதற்குத் தேவை குணம்!

**கேள்வி : பெரியப்பா, இயற்கையில் நீங்கள் இன்றும் ஆச்சரியப்படும் விசயம் எது?**

*- நிதர்சன், தச்சனா மருதமடு*

பதில் : சூரியோதயம்! எத்தனை ஆயிரம் வருடங்கள், எத்தனை கோடி மனிதர்கள் கண்ட காட்சி என்றாலும் இன்னும் அலுக்காத அதிசயம் சூரியோதயம்!

**கேள்வி : அறிவு இருக்கும்போது ஆன்மீகம் எதற்கு என்று என் நண்பன் கேட்கிறான். உங்கள் பதில் என்ன?**

*- மரிய நாயகி, மன்னார்*

பதில் : உலகத்தில் நமது அறிவுக்கு அப்பாற்பட்ட விஷயங்கள் ஏராளமாக இருக்கிறதல்லவா? அறிவுக்கு எல்லை உண்டு. நம்பிக்கைக்கு எல்லை கிடையாது. எனவே அறிவு மட்டும் போதும் என்று சொல்ல முடியாது. எனவே ஆன்மீக நம்பிக்கையும் மனிதனுக்குத் தேவை.

**கேள்வி : உங்களிடம் எதைக் கேட்டால் உடனே கொடுப்பீர்கள்?** *- அலெக்ஸ் லவ்சன், மன்னார்*

பதில் : பதில்

**கேள்வி : பெரியப்பா! நீங்கள் பழசா? புதுசா?**

*- மணிமாறன், வவுனியா*

பதில் : பாரம்பரியத்தின் மகத்துவத்தையும் புதுமையின் தனித்துவத்தையும் ஏற்று மதிப்பவன் நான்! எனவே என்னை நீங்கள் பழசாகவும் எடுத்துக்கொள்ளலாம். புதுசாகவும் எடுத்துக்கொள்ளலாம்.

**கேள்வி : தெருக்களில் அநாவசியமாகச் சுற்றுபவர்களைப் பற்றி?** *- தவசீலன், மட்டக்களப்பு*

பதில் : நில நடுக்கத்திற்குப் பயந்து இவர்கள் நடுத்தெருவில் சுற்றுவதாகத் தெரியவில்லை. வீட்டுக்காரர் கொடுத்த நடுக்கத்தால் இப்படிச் சுற்றுகிறார்கள்.

**கேள்வி : குண்டான என்னைக் கண்டு பரிகாசம் செய்கிறார்களே?** *- குண்டுமணி, மன்னார*

பதில் : பரிகாசம் உங்களது தோற்றத்திற்குத்தான். ஆனால் உங்கள்மீது எல்லோரும் அபரிதமான நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். எந்தச் சூழ்நிலையிலும் நீங்கள் 'திடீர்' என ஓடமாட்டீர்கள் தானே? நீங்களும் சேர்ந்து



சிரியுங்கள். நாள்தோறும் நகைச்சுவை வழங்கும் நல்ல நபர் நாம் என்று மகிழுங்கள்.

**கேள்வி : வாழ்க்கையில் முன்னேற முயலும் எனக்கு பெரியப்பா என்ன ஆலோசனை கூறப்போகிறீர்கள்?**

- வளன், யாழ்ப்பாணம்

பதில் : வாழ்க்கையின் எல்லாச் சந்தர்ப்பத்திலும் உப்புச் சப்பில்லாமல், பிடித்து வைத்த களிமண்ணைப்போல் வாழ்பவர்கள் சாதாரண மனிதர்கள். தாங்களும் முன்னேற மாட்டார்கள். மற்றவர்களுக்கும் பயன்பட மாட்டார்கள்.

ஆனால், சாதனை மனிதர்களோ, வாழ்வின் ஒவ்வொரு கணத்தையும் திட்டமிட்டு, புதுமையான அணுகுமுறைகளுடன் சுவைபட வாழ்ந்து தங்களுக்கும், சமுதாயத்திற்கும் நன்மையைத் தேடிக்கொள்வார்கள்.


தங்கள் திறமைகள் என்னும் விளக்கை வீட்டுக்குள் வைப்பவர்கள் சாதாரண மனிதர்கள். ஆனால், தங்களது திறமைகள், ஆற்றல்கள் அனைத்தும் ஒன்று சேர்த்து அணையா விளக்கைக் குன்றின்மேல் ஏற்றித் தாங்களும், தங்கள் சமூகமும் பயன்பெற்றிட உழைப்பவர்கள் சாதனை மனிதர்கள்.

வளன், உங்களிடம் ஒரு கேள்வி : நீங்கள் உங்களுக்காக மட்டுமே வாழும் சாதாரண மனிதரா? அல்லது உயர்ந்த இலட்சியத்துடன், சமுதாயத்துக்காக வாழும் சாதனை மனிதரா?

# நீங்காத நினைவுகள் நீங்காத நினைவுகள்

## 25ம் ஆண்டு நினைவு

மலர்வு 26 - 11 - 1907



உதிர்வு 12 - 12 - 1982

**மனுவேல் டானியல் றோச்**
**(இளைப்பாறிய அதிபர், சமாதான நீதவான்)**
**(பள்ளிமுனை – மன்னார்)**

## 35ம் ஆண்டு நினைவு

மலர்வு 17 - 01 - 1917




உதிர்வு 21 - 07 - 1971

**டானியல் அக்னஸ் றோச்**
**(பள்ளிமுனை – மன்னார்)**

நாட்டிற்கும் வீட்டிற்கும் நல்லோனாய் வாழ்ந்தீர். ஆசிரியப்பணியாற்றி அறம் வளர்த்தீர். உள்ளூராட்சி சபையினிலே ஊருக்கு உழைத்தீர். உம்மினிய மனையாளுடன் நல்லினிய இல்லறம் நடாத்தி, எம்மையெல்லாம் பெற்றெடுத்து, ஏற்றம் பெற வாழவைத்த எம்மினிய பெற்றோரே! உங்கள் நினைவை எங்கள் நெஞ்சில் உயிருள்ளவரை ஒளியேற்றி வணங்குகிறோம்.

பிரிவால் துயருறும்,
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள.
(தகவல் : மருமகன் - அ. ஜோண் பொஸ்கோ பிகிறாடோ)

## 7ம் ஆண்டு நினைவு





மலர்வு 10 - 01 - 1912 உதிர்வு 12 - 02 - 1999

**டானியல் அலெக்சாண்டர் பிகிறாடோ**
**(பள்ளிமுனை - மன்னார்)**

## 11ம் ஆண்டு நினைவு



மலர்வு 22 - 09 - 1922 உதிர்வு 02 - 01 - 1995

**அலெக்சாண்டர் திரேசம்மா பிகிறாடோ**
**(பள்ளிமுனை - மன்னார்)**

பெற்று வளர்த்துப் பெருவாழ்வு வாழவைத்தீர். ஏகபரன் இல்லமதில் இளைப்பாறும், நீவிர் எமக்காய் இறைஞ்சிடுவீர் எம் ஏகபிரானை.

- இவரின் பிரிவால் துயருறும் - மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(தகவல் : மகன் - அ. ஜோன் பொஸ்கோ பிகிறாடோ)

## 20ம் ஆண்டு நினைவு

மலர்வு 26 - 05 - 1957



உதிர்வு 30 - 08 - 1986

**அலெக்சாண்டர் பிலிப்நேரி பிகிறாடோ (பள்ளிமுனை)**

எம்மையெல்லாம் ஏங்கவைத்து
இளவயதில் யேசுபதம்
நாடிச்சென்றீர். என்றுமே
மறவாது இதயங்களில்
ஏந்தியிருப்போம், இனிய உம்
நினைவுதனை.

இவரின் பிரிவால் துயருறும்,
மனைவி, மகன், சகோதரர்கள்,
சகோதரிகள்.

தகவல் : சகோதரன்
அ. ஜோண் பொஸ்கோ பிகிறாடோ

## 31ம் நாள் நினைவு

மலர்வு 19 - 03 - 1959



உதிர்வு 12 - 11 - 2006

**சந்தியோகு மருசலீன் பிகிறாடோ (மருசலீன்)**

உங்கள் குடும்பத்தின் முதல் ஆண் மகனாய், எங்கள் மத்தியில் நல்லாலோசனை கூறும் சகோதரனுமாய், மூன்று பிள்ளைகளுக்கு பாசமிகு தந்தையுமாய், மனைவிக்கு அன்புக் கணவனுமாய் விளங்கினீர்களே அப்பா!


இந்தச் சிறிய வயதில் உங்கள் வாழ்க்கையை முடிப்பதற்கான காரணம்தான் என்ன? .

மாதம் ஒன்று அல்ல வருடங்கள் பல சென்றாலும் உங்கள் நினைவு எங்களை விட்டு நீங்காதப்பா. உங்கள் ஆன்மா நித்திய சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*உங்கள் பிரிவால் துயருறும்,*
*அன்பு மனைவி, பிள்ளைகள், உற்றார்,*
*உறவினர்கள்*

## 31ம் நாள் நினைவு

மலர்வு 08 - 12 - 1929



உதிர்வு 07 - 11 - 2006

**திரு. வ. யேசுரத்தினம் (மன்னார்)**

"கர்த்தர் கொடுத்தார். கர்த்தர் எடுத்தார். கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம்" (யோபு 1:21).

திங்களொன்று சென்றாலும் தீராது எம் துயரம். எந்தையே எந்நாளும் மாறாது எம் சோகம். தந்தையின் வீட்டினிலே சீரோடு வாழ்ந்திடுவீர். தூய ஆவி, சுதனும்கூட உம்மோடு துணையிருப்பர்.

*பிரிவினால் துயருறும்,*
*அன்பு மனைவி, அருமைப் பிள்ளைகள்,*
*மருமக்கள், பேரப்பிள்ளைகள்,*
*உற்றார், உறவினர்.*

## 3ம் ஆண்டு நினைவு

மலர்வு 22 - 08 - 1961



உதிர்வு 02 - 12 - 2003

**பி. ஸ். நீக்கிலாஸ் லெம்பேட் (ஜீவா) - வங்காலை**

கொத்தாக மலர்ந்தாய் சகோதரர் ஐந்து பேருடன். முத்தாக பெற்றெடுத்தாய், பெற்ற அன்னை துடிதுடிக்க, கட்டிய மனைவி கதறியழ, செல்வங்கள் ஆறுபேரும் விருட்சமாகி நிற்க உங்களை இறைவன் அழைத்தானே?

எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே ஐயா, எம்மை நல்வழிப்படுத்தி நல் வாழ்வளித்த ஐயா, எம்மை விட்டுப்பிரிந்து ஆண்டுகள் மூன்று ஆனாலும் எம் இதயங்களில் என்றுமே இருக்கின்றீர்கள்! உங்கள் ஆன்ம சாந்திக்காக என்றும் இறைவனை வேண்டுகின்றோம்.

*உங்கள் பிரிவால் துயருறும்*
*மனைவி. ஸ். நீ. ஜானகி,*
*பிள்ளைகள்.*

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி - இல - 56

## 1 அரசர்கள் - அதிகாரம் 16 - 22

உங்கள் விடைகளை 10.01.2007க்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும். சரியான விடையை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பி வைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும்.

(பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | | | 02 |
| | 03 | | | | | | ✡ | | | 04 |
| | | 05 | | ✡ | | 06 | | | | ✡ |
| | | | | | 07 | | | | | 08 |
| | | ✡ | | | | 09 | | | | |
| | 10 | | | | ✡ | | | | | 11 |
| ✡ | | 12 | | | | | | | 13 | |
| | | | | | | | 14 | | | |
| | | | 15 | | | 16 | | 17 | | |
| | | | | 18 | | | | | ✡ | |
| 19 | | | | ✡ | 20 | ✡ | | | | 21 |

### இடமிருந்து வலம்

01. அந்த ............................க்குத் தீயிட்டுத் தானும் அதில் மாண்டான்.
03. காகங்கள் காலையிலும், மாலையிலும் அப்பமும் ............................ அவருக்குக் கொண்டுவந்தன.
05. ஏனெனில் பெருமழையின் ............................ கேட்கிறது.
06. அப்போது சமாரியாவில் ............................ கடுமையாக இருந்தது
09. அவர்கள் இரண்டாம் முறையும் ............................ செய்தனர்.
10. மன்னர்களைப் படைத்த தலைமையினின்று நீக்கிவிட்டு அவர்களுக்குப் பதிலாகப் படைத்தலைவர்களை நீர் ............................க்க வேண்டும்
16. அவர்கள் உன் அரண்மனையையும், உன் அதிகாரிகளின் ............................ களையும் சோதித்து உன் பார்வையில் விலைமதிப்புள்ள அனைத்தையும் கைப்பற்றி எடுத்துக்கொள்வார்கள்.
19. ஆயினும் அவன் தொழுகை ............................ உடைத்தெறியவில்லை.

### மேலிருந்து கீழ்

01. கிழக்கு முகமாகப் போய் யோர்தானுக்கு ............................ கெரீத்து ஓடையருகில் ஒளிந்துகொள்.
03. நம்முடைய கால்நடைகளை ............................ வேண்டியிராது.
08. உன் பார்வையில் விலைமதிப்புள்ள அனைத்தையும் ............................ எடுத்துச் செல்வார்கள்.
09. தீக்குப்பின் ............................ மெல்லிய ஒலி கேட்டது.
10. அவர் பாலை ............................ ஒருநாள் முழுவதும் பயணம் செய்தார்.
12. எனவே இந்தப்பெரும் படை முழுவதையும் உன் ............................ ஒப்படைப்பேன்.
13. அவனும் அவர்களது பேச்சை ............................ அவ்வாறே செய்தான்.
14. எலியா செய்த அனைத்தையும், பொய்வாக்கினர் அனைவரையும் அவர் ............................ கொன்றதையும் ஆகாபு ஈசபேலுக்குத் தெரிவித்தான்.

### வலமிருந்து இடம்

02. மேலும் சமாரியாவில் பாகாலுக்கு ஒரு கோவில் கட்டி அத்தெய்வத்துக்கு ஒரு ............................ எழுப்பினான்.
04. அவனது நோய் மிகவும் முற்றவே அவன் ............................ நின்றுவிட்டது.
07. எனவே தண்ணீர் பலிப்பீடத்தைச் சுற்றிலும் ............................
08. இதோ மனித உள்ளங்............................ சிறிய மேகம் ஒன்று கடலிலிருந்து எழும்பி மேலே வருகிறது.
09. மக்கள் அனைவரும் அவர் ............................ வந்தனர்.
11. மன்னர்களைப் படைத்தலைமையினின்று நீக்கிவிட்டு அவர்களுக்குப் ............................ப் படைத்தலைவர்களை நீர் நியமிக்க வேண்டும்.
13. அவர்களும் ............................ எதிராக போரிடத் தயாராயினர்.
18. அவர் கண்விழித்துப் பார்க்கையில் இதோ ............................ சுட்ட ஒரு அப்பமும் ஒரு குவளையில் தண்ணீரும் தம் தலைமாட்டில் இருக்கக் கண்டார்.
21. உம் வாக்கு அவர்களுடைய ............................ப் போலிருக்கட்டும்.

### கீழிருந்து மேல்

07. நாட்டில் மழை பெய்யாத காரணத்தால் அந்த ............................ வற்றிப்போனது.
09. எனக்குக் கொஞ்சம் ............................ கையோடு கொண்டு வருவாயா? (4ம், 5ம் எழுத்துக்கள் மாறியுள்ளன.)
15. அவன் நாபோத்தின் திராட்சைத் தோட்டத்தைத் தன் ............................ யாக்கிக்கொள்ள அங்கு போயிருந்தான்.
17. இதோ இன்று அதை உன் ............................ ஒப்புவிக்கிறேன். (3வது எழுத்து 1வது எழுத்துக்குக் கீழே உள்ளது)
18. உன் பலி பீடங்களைத் ............................ விட்டனர்.
19. எலியா அவரிடம் சென்று தம் ............................ அவர்மீது தூக்கிப் போட்டார்.
20. அம்மனிதனே அவரைக் ............................ அடித்தான்.
21. இஸ்ரயேலின் அரசனும், யூதாவின் அரசன் யோசபாத்தும் சமாரியாவின் ............................ மண்டபத்தில் அரச உடை பூண்டு தத்தம் அரியணையில் வீற்றிருந்தனர்.

**விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 55ற்கான முடிவுகளை 2007ம் ஆண்டு ஜனவரி மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.**


## மன்னா சந்தாதாரர்களே!

உங்கள் சந்தாக் காலம் முடிவடையும் மாதம் உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னாவின் உங்கள் முகவரிக்குக் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. அதைப்பார்த்து உங்கள் சந்தாவை உரிய காலத்தில் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

மன்னா தனிப்பிரதிகளுக்கான ஆண்டுச்சந்தா

உள்நாடு - இலங்கை ரூபா 400

வெளிநாடு - இலங்கை ரூபா 2000 (20 யூரோ)


## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 54ல்

**சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசு பெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்**

*முதலாம் பரிசு*

ப. கம்சிகா.
தி. கு. க. மடம்
பெரியபண்டிவிரிச்சான். மடு

*இரண்டாம் பரிசு*

அ. ஜஸ்மின் சறோன்.
ஆவணம்,
நானாட்டான்.

*மூன்றாம் பரிசு*

யே. மொறின் சிந்துஜா
கன்னாட்டி,
அடம்பன்.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 116 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 111 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.54ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில்

## பாராட்டுப் பெறும் 50 அதிஸ்ரசாலிகள்

1. ச. நித்தியா, நொச்சிக்குளம், உயிலங்குளம்.
2. அ. க. கீர்த்திக்கா, 70, பேராலய வீதி, திருகோணமலை.
3. சா. லோறன்ஸ், முருங்கன் பிட்டி, முருங்கன்.
4. திருமதி. பி. ஜெ. பற்றிக், 5/14, அச்சக வீதி, யாழ்ப்பாணம்.
5. றெ. யேசுராஜா, சின்னக்கரிசல், பேசாலை.
6. எஸ். ஜெனோவா, திருக்குடும்ப கன்னியர் மடம், மன்னார்.
7. எஸ். நதின், தரம் 10, புனித சவேரியார். ஆ.கல்லூரி, மன்னார்
8. திருமதி. அ. வதனி, முதலைகுத்தி, உயிலங்குளம்.
9. ஆ. லக்சனா, ஏ 07, மடுக்கோவில், மடு.
10. எஸ். சந்தோஸ், பெரியகமம், மன்னார்.
11. அ. சிந்துஜா, முருங்கன் பிட்டி, முருங்கன்.
12. ச. சத்தியப்பிரியா, நொச்சிக்குளம், உயிலங்குளம்.
13. ஜீ. யசிந்தா, 6ம் வட்டாரம், விடத்தல்தீவு.
14. நே. டெய்சி, கொன்னையன் குடியிருப்பு, தாராபுரம்.
15. செ. ஆன் நியூசிக்கா துரம், மரியாள் வீதி, தாழ்வுபாடு.
16. க. றகுநாதன், இலுப்பைக்கடவை, மன்னார்.
17. ச. கிறிஸ்ரின், தரம் 10, படகுத்துறை.
18. ஏ. மேரி, வேதசாட்சி கோவில், தோட்டவெளி, மன்னார்.
19. எட்வின், பள்ளிமுனை, மன்னார்.
20. ஜெ. சுஜி தற்குரூஸ், துள்ளுகுடியிருப்பு.
21. அருட்சகோ. வசந்தி, திருக்குடும்ப க. மடம், தலவாக்கலை.
22. என். ஜனார்த்தனா, மணற்குளம், உயிலங்குளம்.
23. இராணி அரசரத்தினம், தபாற்கந்தோர் வீதி, மன்னார்.
24. த. டிலக்ஷன், சென் மேரிஸ் வீதி, அடம்பன்.
25. யோ. அருள்தாஸ், பூங்கா வீதி, வவுனியா.
26. அ. இசைக்கியேல், ஜோசப்வாஸ் நகர், தோட்டவெளி.
27. அ. நிசாந்தன், ஓலைத்தொடுவாய், சின்னக்கரிசல்.
28. செ. அசம்ரா சாளினி, திருக்குடும்ப கன்னியர் மடம், மன்னார்
29. டபிள்யு. அபிஷா, மாதிரிக்கிராமம், வங்காலை.
30. ச. ஜெனற் அனுஷியா, தரம் 10, ஆண்டாங்குளம்.
31. ப. செபமாலை, தரம் 09, அந்தோனியார்புரம்.
32. அ. பிருந்தா வீர்ஜினி டயஸ், 100 வீட்டுத் திட்டம், வங்காலை
33. ஆ. அனற் நிர்ஜா, சாந்திபுரம், மன்னார்.
34. திருமதி. பே. வசந்தி, ஆஸ்பத்திரி வீதி, மன்னார்.
35. பி. றெமூந்துப்பிள்ளை, கங்காணித்தீவு, நானாட்டான்.
36. க. நிதர்சன், தரம் 10, இலுப்பைக்குளம், நேரியகுளம்.
37. ஏ. மேரி நிருஜா, சாந்திபுரம், மன்னார்.
38. வே. டிறோன் றஞ்சித், பிச்சகுளம், முருங்கன்.
39. தே. நொயலின், கூமாங்குளம், பம்பைமடு, வவுனியா.
40. செ. பிரியதர்ஷினி, நறுவிலிக்குளம், வங்காலை.
41. வே. ஜொயலின், பிச்சகுளம், முருங்கன்.
42. டபிள்யு. அபிஷாந், மாதிரிக்கிராமம், வங்காலை.
43. பி. ஜே. சிந்துஜா, எழுத்தூர், மன்னார்.
44. மேரி யூஜின், பொன்தீவுகண்டல், அளவக்கை.
45. ச. கொண்சி, அடம்பன்தாழ்வு, வட்டக்கண்டல்.
46. பி. ஜே. றொணி திலீப்குமார், எமில்நகர், மன்னார்.
47. தயாளினி றோச், ஆண்டு 9, புனித லூசியா மகா வித்.
49. தே. ஜெலிந்திரா, கன்னாட்டி, அடம்பன்.
50. ம. டால்ரன், அளவக்கை பங்கு, அளவக்கை.

## மன்னாவுக்கு எமது மனமார்ந்த நன்றிகள் ...... 2ம் பக்கத் தொடர்ச்சி

எம் மன்னார் மண் எந்த மக்களையும் பாகுபாடின்றி *வந்தோரை வாழவைக்கும்* மண்ணாகத் திகழ்கின்றது. இந்த அரிய அருளைத் தந்த இறைவனுக்கு நன்றியைக் கூறுவதோடு மன்னா பத்திரிகை மூலம் இன்னும் பற்பல சிறப்புக்களையும் எம் மக்களுக்கு பெற்றுத்தர இறைவனை வேண்டிநிற்கின்றோம். இறுதியாக 10ம் மாதம் வெளிவந்த பத்திரிகையில் மன்னார் மாவட்ட ஆயுர்வேத சுதேச மருத்துவ பாதுகாப்புச் சபையின் மூலிகை மலர் வெளியீட்டுப் பிரிவால் வெளியிடப்பட்ட சித்த மருத்துவக் கதிர் எனும் சஞ்சிகை நிகழ்வினை சிறப்பிக்கும் நோக்கத்தில் எமது மன்னா பத்திரிகை மூலம் செய்தியாக படங்களுடன் வெளியிட்டுள்ளது. இப்பத்திரிகையின் செயலதிபர் எம் மதிப்பிற்குரிய அன்பின் அருட்தந்தை நேசன் அடிகளாரின் பரந்த மனப்பான்மையையும், மண் பற்றையும், எல்லோருக்கும் எடுத்துக் கூறுவதோடு எம் சித்த வைத்திய சமுதாயமும் இதை எண்ணி பூரிப்படைந்து நன்றி கூறுகின்றது.

அத்துடன் சித்த மருத்துவம் சம்மந்தமான சில ஆக்கங்களையும் தங்களுக்கு தரும் பட்சத்தில் அதையும், தொடர்ச்சியாக வெளியீடு செய்து சித்த மருத்துவ வளர்ச்சிக்கும் சித்த மருத்துவத்தின் பயனை மன்னார் மக்கள் அறிந்துகொள்ளவும் வாய்ப்பை ஏற்படுத்தித் தரும்படி அன்புடன் கேட்டு நிற்கின்றோம். மீண்டும் தங்கள் சேவைக்கு நன்றிகூறி இதை நிறைவு செய்கின்றேன்.

*சித்த வைத்திய கலாநிதி செ. செல்வமகேந்திரன்*
*மூலிகை மலர் வெளியீட்டுப்பிரிவின் தலைவரும்*
*ஆசிரியரும், பொருளாளர், ஆயுர்வேத சுதேச மருத்துவ பாதுகாப்புச்சபை, மன்னார்*

## மன்னார் மறைமாவட்ட அருட்பணித்திட்டமிடல் மாநாடு ..... 3ம் பக்கத் தொடர்ச்சி

### 2ம் நாள் நிகழ்வு

டிசம்பர் 6ம் திகதி காலைத் திருப்பலி அருட்பணியாளர் ஸ்ரனி அன்ரனி அவர்கள் தலைமையில் இடம்பெற்றது.
அன்றைய நாளின் முதல் அமர்வு *இறைவார்த்தை வழங்கும் செப அனுபவம்* என்ற மையப்பொருளில் இடம்பெற்றது. இத்தலைப்பில் உளவள ஆற்றுப்படுத்துனர் அருட்சகோதரி கிறிஸ்ரபெல் (தி. கு.) அவர்கள் உரையாற்றினார். இந்த அமர்வை மன்னார் மறைக்கோட்ட முதல்வர் அருட்பணிளாளர் தேவறாஜா கொடுதோர் அவர்கள் தலைமைதாங்கி நெறிப்படுத்தினார்.

இரண்டாம் அமர்வு *தனிச் செபமும் அதன் அடிப்படை மனநிலையும்* என்ற மையப்பொருளில் நடைபெற்றது. இத்தலைப்பில் மன்னார் மறைமாவட்ட மூத்த மறையாசிரியர் திரு. சவிரி அவர்கள் உரையாற்றினார். இந்த அமர்வை வவுனியா கல்வியியல் கல்லூரியின் தலைவர் திரு. பேனாட் அவர்கள் தலைமை தாங்கி நெறிப்படுத்தினார். மூன்றாவது அமர்வு *இன்றைய சூழலில் குடும்ப செபம் அதன் சிறப்பம்சங்கள்* என்ற மையப்பொருளில் நடைபெற்றது. இத்தலைப்பில் அமல உற்பவ மாதா சபைக் கன்னியர்களின் தலைவி அருட்சகோதரி றெஜினா மேரி அவர்கள் உரையாற்றினார். இந்த அமர்வை வவுனியா மறைக்கோட்ட முதல்வர் அருட்பணியாளர் ஏ. செபமாலை அடிகளார் தலைமை தாங்கி நெறிப்படுத்தினார். ஒவ்வொரு உரையின் பின்னர் குழு ஆய்வு பின்னர் குழு ஆய்வின முடிவுகளை பொது அமர்வில் சமர்ப்பித்தல் என்ற அடிப்படையில் அமர்வுகள் நெறிப்படுத்தப்பட்டன.

### மூன்றாம் நாள்

டிசம்பர் 7ம் திகதி காலைத் திருப்பலியை மன்னார் மறைமாவட்ட ஆயர் அவர்கள் ஒப்புக்கொடுத்தார். இதில் அருட்பணியாளர் சந்தியாகு மறையுரையாற்றினார்.

இன்றைய நாளின் முதல் அமர்வுக்கு மடு மறைக்கோட்ட முதல்வர் அருட்பணியாளர் எமிலியானுஸ்பிள்ளை அவர்கள் தலைமை தாங்கினார். மாநாட்டின் இறுதி நாளான இன்று குழு ஆய்வு அறிக்கைகளின் முடிவுகள் தொகுக்கப்பட்டு மாநாட்டுத் தீர்மானங்கள் முன்னுருமைப்படுத்தப்பட்டன. அதைத் தொடர்ந்து மறைமாவட்ட ஆணைக்குழுக்களின் இயக்குனர்களினால் அடுத்தவருடப் பணித்திட்டங்கள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டன.

இரண்டாவது அமர்வில் *இன்றைய சமகால நிகழ்வுகள்* பற்றிய பொதுவான கருத்துப் பரிமாற்றம் நடைபெற்றது. இந்த அமர்வுக்கு குருமுதல்வர் தலைமை தாங்கினார். இதன்போது இன்றைய சூழலில் மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு துன்பங்பங்கள் பற்றிய கருத்துக்கள் பரிமாறப்பட்டு அவற்றைச் சீர்செய்ய எடுக்க வேண்டிய நடவடிக்ககைகள் ஆராயப்பட்டன.

இதன்படி மறைமாவட்டத்தின் உயர்மட்டக் குழு ஒன்று விடுதலைப் புலிகளின் உயர் மட்டக் குழுவினரையும் வவுனியா இராணுவத் தலைமை அதிகாரியையும் சந்தித்து இன்றை காலகட்டத்தில் நடைபெறும் மனித உரிமை மீறல் தொடர்பான விடயங்களைக் கலந்துரையாடுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

நன்றி உரையைத் தொடர்ந்து மதிய உணவுடன் இம்மாநாடு இனிதே நிறைவுபெற்றது.

இம்மாநாட்டின் தலைவராக குருமுதல்வர் விக்கரர் சோசை அடிகளாரும் செயலாளராக அருட்பணியாளர் டலிமா அவர்களும் இம்மாட்டின் செயற்குழு உறுப்பினர்களாக இவ்விருவருடன் அருட்பணியாளர்கள் பா. கிறிஸ்து நேசன் மற்றும் யூட்குருஸ் ஆகியோரும் செயலாற்றினர்.
மாநாட்டின் இறுதி தீர்மான அறிக்கை அடுத்த மன்னா இதழில் வெளியிடப்படும்.


## அனைத்துத் தொடர்புகளுக்கும்

The Editor,
MANNA
Pastoral Centre,
St. Sebestian's Street
Mannar, Sri Lanka.

பதிப்பாசிரியர்.
மன்னா
திருமறைப்பணி நிலையம்.
புனித செபஸ்ரியார் வீதி
மன்னார்.

தொலைபேசி. இல. 023 - 2232377

# மன்னா

உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக அல்லேலூயா (லூக். ௨:௧௪)



# மன்னா

## மன்னார் மறைமாவட்டத்தில் இருந்து வெளிவரும்

## கத்தோலிக்க திருச்சபையின் மாதாந்தப் பத்திரிகை!

## வாங்குங்கள்.....! வாசியுங்கள்.....! பயன்பெறுங்கள்.....!

ஒவ்வொரு மாதமும் திருச்சபையின் செய்திகளை, சிந்தனைக்கு விருந்தான பல்வேறு ஆன்மீகக் கட்டுரைகளைத் தாங்கி நாடு முழுவதும் மன்னா பத்திரிகை வலம் வருகிறது....!

உள்நாட்டில் மட்டுமல்ல தமிழ்க் கத்தோலிக்கர்கள் செறிந்து வாழும் அனைத்து வெளிநாடுகளிலும் தபால் மூலம் இப்பத்திரிகை விநியோகிக்கப்படுகின்றது. நீங்களும் தபால் மூலம் ஏன் இப்பத்திரிகையை பெற்றுப் பயன் அடையக்கூடாது? நீங்கள் மன்னாவைத் தவறாமல் பெற்று வாசிப்பவராக இருந்தால் ஏன் உங்கள் உறவினர் நண்பர்களுக்கு இதை நீங்கள் அறிமுகப்படுத்தக்கூடாது? இப்பத்திரிகையைப் பெற நீங்கள் செய்யவேண்டியது எல்லாம் இதுதான்.

ஒரு வருடத்திற்கான ஆண்டுச் சந்தாப் பணமாக உள்நாட்டில் உள்ளவர்கள் இலங்கை ரூபா 400/= யும் வெளிநாட்டில் உள்ளவர்கள் இலங்கை ரூபா 2000/= (அல்லது 20 யூரோவையும்) காசுக்கட்டளையாகவோ அல்லது காசோலையாகவோ எமக்கு அனுப்பிவையுங்கள். உங்கள் பெயர் முகவரிகளை மறக்காமல் தெளிவாகக் குறிப்பிடுங்கள். மன்னா உங்கள் வீட்டுக் கதவை மாதாந்தம் வந்து தட்டும். காசோலை மூலம் அனுப்புவதாயின், வங்கியின் பெயர் ~ Hatton National Bank Ltd. Mannar. பணம் பெறுபவர் பெயர் : The Editor, Manna. வங்கிக் கணக்கு இலக்கம்: S/A No. 02 16780015 என்று குறிப்பிடவும்.

எமது தொலைபேசி இலக்கம்: 023-2232377
எமது தொலைநகல் இலக்கம்: 023-2232377

எமது முகவரி : The Editor,
MANNA Office,
Catechetical Centre,
Mannar, Sri Lanka.

அன்பும் இறை ஆசியும் கூறி
உங்களை வாழ்த்துவது,
மன்னா பத்திரிகை நிர்வாகம்.



## பிறந்த நாள் வாழ்த்து



## செல்வி. ஆன் சுஜானி

மன்னார் நானாட்டான் ஒலிமடுவை பிறப்பிடமாகவும் தற்போது ஜேர்மனியில் முன்சனை வதிவிடமாகவும் கொண்ட திரு. திருமதி. றொபேட் யேசுதாசன் ஜெனி (பெனில்டா) தம்பதிகளின் செல்வப் புதல்வி ஆன் சுஜானி தனது முதலாவது பிறந்த நாளை 20-12-2006 அன்று ஜேர்மனியிலுள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாக கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, சிலாபத்தில் வசிக்கும் அம்மப்பா, அம்மம்மா, பெரிய மாமி (றின்சி), லண்டனில் வசிக்கும் தொட்டப்பா, தொட்டம்மா குடும்பம், லண்டனில் வசிக்கும் சூட்டி சித்தப்பா, நிலா அன்ரா குடும்பம், யப்பானில் வசிக்கும் பெரிய மாமா (யோண்சன்), மலேசியாவில் வசிக்கும் குட்டி மாமா (ஜெறாட்), ஜேர்மனியில் வசிக்கும் சகாயநாதன் பெரியப்பா, பெரியம்மா குடும்பம், ஒலிமடுவில் வசிக்கும் சோதி பெரியப்பா, பெரியம்மா குடும்பம், கட்டைக்காட்டில் வசிக்கும் அன்ரன் பெரியப்பா, பெரியம்மா குடும்பம், சிஸ்ரர் பெரியம்மா, பாதர் மாமாமார், அண்ணாமார், அக்காமார், அப்பப்பாமார், அம்மம்மாமார், மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார், தம்பிமார், தங்கைமார், மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள், அருட்தந்தையர்கள், அருட் சகோதரிகள் அனைவரும் புனித லூட்ஸ் மாதாவின் ஆசிர் பெற்று நீடூழிகாலம் சகல செல்வங்களையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

**தகவல் : சந்தாம்பிள்ளை, மேரிப்பிள்ளை**
**(அம்மப்பா, அம்மம்மா)**

## மரண அறிவித்தல்

மண்ணில் 25 – 09 – 1936



விண்ணில் 28 – 11 – 2006

## திரு. ஜெரோம் ஜெயசீலன் டலிமா

(ஓய்வுபெற்ற கமநல சேவைத் திணைக்கள பெரும்பாக உத்தியோகஸ்தர்)

புனித ஆனாள் ஆலய அருட்பணிச் செயலாளர்

வங்காலையைப் பிறப்பிடமாகக் கொண்ட ஓய்புபெற்ற கமநல சேவைத் திணைக்கள பெரும்பாக உத்தியோகத்தர் திரு. ஜெரோம் ஜெயசீலன் டலிமா அவர்கள் இறைபதம் அடைந்துவிட்டார். இவர் காலஞ்சென்ற ஜெரோம் டலிமா ஆனாள் தம்பதியரின் புதல்வனும் திருமதி. ஜோசப்பின் லெம்பேட் (ஓய்வுபெற்ற பிரதி அதிபர், மன்/ புனித ஆனாள் மத்திய மகா வித்தியாலயம், வங்காலை) அவர்களின் அன்புக் கணவரும், திருமதி. யசோதா (ஆசிரியை - மன்/ புனித ஆனாள் மத்திய மகா வித்தியாலயம், வங்காலை), திரு. டெல்போஸ் (ஆசிரியர் - மன்/ உயிலங்குளம் றோ.க.த. பாடசாலை), திருமதி. சுபநிதா (ஆசிரியர் - மன்/ புனித சவேரியர் பெண்கள் கல்லூரி தேசிய பாடசாலை, மன்னார்), மெல்பர் (பொறியியலாளர் - Matric Construction (Pvt) Ltd - Colombo), வசந்தன் (வெளிக்கள உத்தியோகஸ்தர், சர்வோதயம், மன்னார்) ஆகியோரின் அன்புத் தந்தையும் திரு. பிறின்ஸ் டயஸ் (ஆசிரியர் மன்/ முருங்கன் மகா வித்தியாலயம்), திரு. தயாபரன் குரூஸ் (முகாமைத்துவ உதவியாளர், கச்சேரி, மன்னார்.), திருமதி. லியோனி (ஆசிரியை மன்/ உயிர்த்தராசன் குளம் றோ.க.த.த. பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஸ்ருதி, டிவைனி, பஸ்ரினி, எமோரியன் ஆகியோரின் அன்புப் பேரனும், திருமதி. பத்திராசனம் டலிமா, திரு. இம்மானுவேல் சீலன் டலிமா (U.S.A) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். அன்னாரின் இறுதி யாத்திரை நிகழ்வுகள் கடந்த 29.11.2006 - புதன்கிழமை வங்காலை புனித ஆனாள் ஆலயத்தில் இடம்பெற்று திருப்பலியின்பின் இவரது பூதவுடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

Tel: 060-2230111
060-2230072

*குடும்பத்தினர், வங்காலை.*